இது
# நம்தேசம்

பார்வை 01 | வியூகம் 08 | 16.08.2013 - 15.09.2013 | பக்கங்கள் : இருபது | விலை ரூபா : 30.00




## மாகாண சபை!!!
## வெல்வது யாராகிலும் தோற்பது தமிழினமே

கல்விக் களம் 14

செப். 21 தேர்தல் 02

தமிழ்த் தேசமும் சர்வதேசமும் 06



ஆடிக் கலவரத்திலும் ஆடாத தமிழினம்

## மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நிறைவு - செப் 21 தேர்தல்

வடக்கில் 14 கட்சிகள் , 29 சுயேட்சைக்குழுக்கள் போட்டி

வடமாகாணம் உட்பட வடமேல், மத்திய மாகாணங்களுக்கான வேட்பு மனுதாக்கல் செய்யும் தினம் முடிவடைந்ததை அடுத்து தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது. மாகாணசபை உருவாக்கப்பட்டு 26 வருடங்கள் தமிழ் மக்களாலும், அன்றைய தமிழ் அரசியல் தலைமைகளாலும் நிராகரிக்கப்பட்டு வந்த நிலையில், பிரிக்கப்பட்ட மாகாண சபையில் போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது. தமிழ் மக்கள் அதிகம் பெரும்பான்மையாக வாழும் வடமாகாணத்தில் போர் முடிவடைந்த பின்னர் முதன் முதலாக நடைபெறவுள்ள நிலையில் பெருமளவு தமிழ் மக்கள்

(11ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் ஊடக சுதந்திரம் என்ற கருத்துக்கு இடமில்லை

## "சுதந்திர இல்லம்" கவலை

இலங்கையில் ஊடக சுதந்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதாக "சுதந்திர இல்லம்" என்னும் சர்வதேச உலக ஊடக சுதந்திர அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. 2012ஆம் ஆண்டிலும் ஊடகவியலாளர்கள் பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு கடந்த மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இலங்கையில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவான தேசிய செயற்திட்டத்தில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது குறித்த பல்வேறு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், உண்மையில் அந்தப் பரிந்துரைகளில் உரிய முறையில் நடை முறைப் படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், வெறும் சட்டங்களின் மூலம் கருத்துச் சுதந்திரம் முடக்கப்பட்டுவருவதாகத் தெரிவித்துள்ளது.

1979ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப் பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர் களுக்கும் எதிராக பல்வேறு கெடுபிடிகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டம் இதுவரையில் நடைமுறைப்படுத் தப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தை எதிர்க்கட்சிகள் முன்வைக்க முயற்சித்த போதிலும், அதற்கு அரசு இடமளிக்க வில்லை எனவும் அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

# பொலீஸாரின் உதவியுடன் வீட்டுக்குள் புகுந்து உடைமைகளை அள்ளி வீசினார் வெளிநாட்டுத் தமிழ்ப் பெண்

## – உடைமாற்ற முடியாமலும் பசியினாலும் அவலப்பட்ட சிறுவர்கள்

கடந்த 30.07.2013 செவ்வாய்க் கிழமை மதியம் பொன்னையாவீதி ஆறுகால் மடம் ஆனைக்கோட்டையில் கூலித் தொழிலாளியின் வீட்டுக்குள் வெளிநாட்டிலிருந்து வந்ததமிழ் பெண்மணியான சுதாகரன் வாசுகி என்பவர் பொலீசாரின் உதவியுடன் வீட்டுக்குள் இருந்த தளபாடங்கள் பொருட்களை அள்ளிவீசி மதியம் சமைத்த சாப்பாடுகள் அனைத்தையும் தூக்கி வெளியே எறிந்து வீட்டிலுள்ள வர்களை வெளியேற்றி கதவையும் பூட்டி திறப்பையும் எடுத்து அடாவடித்தனம் புரிந்தார்.

இதனால் வெளியேற்றப்பட்ட குடும் பத்தைச்சேர்ந்த இரு சிறுவர்கள் பாடசாலை சீருடையை மாற்றமுடியா மலும் மற்றைய சிறுவர்கள் பசியினால் அழுதவண்ணமும் வீதியில் நின்றனர். குறிப்பிட்ட வீட்டில் வாடகைக்கு குடியி ருந்து வந்த குடும்பத்தை அந்த வீட்டிற்கு முன்னால் வசிக்கும் குடும்பத்தினரே குடியமர்த்தியுள்ளனர்.உரிமையாளர்கள் வெளிநாட்டில் உள்ளனர் எனவும் அவர்களிடம் தாம் விலைக்கு வாங்கிய தாகவும் கூறி வாடகைக்கு முன் வீட்டுக்காரரே வீட்டினைத் தந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து யாழ்வந்த வீட்டின் உரிமையாளர்களான தாயும் மகளும் கடந்த 28.07.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று 04 ஜீப் வண்டிகளில் 15 - 20 வரையான இராணுவத்தினரை அழைத்து வந்து வீட்டை சுற்றிவளைத்து வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தியதாக வும் அறியவருகிறது.

எனினும் பாதிக்கப்பட்ட நபர்களும் அயலவர்களும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப் பாளரும் சட்டத்தரணியுமான வீ.மணிவண் ணனை நாடினர்.துரிதமாக செயற்பட்ட சட்டத்தரணி மணிவண்ணன் மறுநாளே யாழ்பாண ஆரம்ப நீதி மன்றில் வழக்கை தொடர்ந்து மீண்டும் ஆதனத்தில் பாதிக்கப்பட்டவர்களை குடியமர்த்தும் ஓர் இடைக்கால கட்டளை பெற்றார் .எனினும் வெளிநாட்டுப் பெண்மணி நீதி மன்றத்தின் உத்தரவை அவமதிக்கும் விதமாகச் செயற்பட்டு திறப்புகளை கையளிக்க மறுத்துவிட்டார்.

இதனால் நகர்த்தல் பத்திரம் மூலம் மறு நாள் வழக்கை கூப்பிட்ட பாதிக்கப்பட்ட வர்களின் சட்டத்தரணி எதிராளியின் செயற்பாடுகளை முறையிட்ட போது நீதி மன்றம் கடுமையாக எதிராளியினை எச்சரித்ததுடன் திறப்பினையும் பாதிக்கப் பட்டவர்களிடம் பெற்றுக் கொடுத்தது.

இன் நிலையில் கடந்த 14.08.2013 அன்று குறித்த இடைக்கால கட்டளையை இரத்து ச் செய்ய வேண்டும் என்று கோரி எதிராளி சார்பாக ஜனாதிபதி சட்த்தரணியும் பிரதி அமைசருமான பைசர் முஸ்தப்பாவும் அவரது சட்டத் தரணிகள் குழாமும் ஓர் மனுவை தாக்கல் செய்து சமர்பணம் ஒன்றினை செய்தார்கள்.எனினும் பாதிக்கப்பட் டவர்கள் தரப்பில் ஆஜராகி யிருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் தனது கடுமையான ஆட்சேபனையை த் தெரிவிக்க சுமார் 02 மணித்தியாளங்கள் கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் 06.09.2013 திகதிக்கு கட்டளை வழங்குவதாக தவணையிடப்பட்டது.

இன் நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் சட்டத்தரணி எதிராளி நீதி மன்றம் வழங்கி இடைக் கால கட்டளையை அவமதித்தமைக்காக நீதி மன்றம் அவமதிப்பு தொடர்பான சத்திய கூற்றினை யும் குற்றப் பத்திரிகையையும் மன்றில் தாக்கல் செய்தார். இது தொடர்பான விசாரனையையும் எதிர்வரும் 06.09.2013 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 'N சமாதான விருதை" வென்ற கிளிநொச்சியை சேர்ந்த பெண்

கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் சமூக செயற்பாட்டாளருக்கு ஆசியாவில் மதிப்பு மிக்க அமைதி விருது அறிவிக் கப்பட்டுள்ளது. கிராமிய மட்ட சமூகத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக பணியாற்றியுள்ளதற்காகவே தவச்சிறி சாள்ஸ் விஜயரட்ணம் என்ற பெண் "என் சமாதான விருதுக்கு" தெரிவு செய் யப்பட்டுள்ளார். இவருடன் ஆப்கானிஸ் தான், நேபாளம், பிலிப்பைன்ஸ், கிழக்கு திமோர், இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மேலும் ஏழுபேர் தெரிவாகியுள்ளனர். பெண்களின் தலைமைத்துவத்தைக் கௌரவிக்கும் வகையில், என் சமாதான வலையமைப்பு (N Peace Network) இந்த விருதை ஆண்டுதோறும் வழங்கிவருகிறது. தவச்சிறி சாள்ஸ் விஜயரட்ணம், வன்னியில் பல்வேறு பெண்கள் சமூக அமைப்புகளில் முக்கிய பொறுப்புகளை வகித்து வருகிறார்.


சமூகமட்ட - பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் செயலராக வும், கரைச்சி பிரதேச செயலர் மட்டத் திலான பெண்கள் வலையமைப்பான பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் பொருளாளராகவும் இவர் பணியாற் றுகிறார். இவர், ஆதரவற்ற, பின்தங்கிய சிறுவர்கள் கல்வியைப் பெறுவதற்கும் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தை களைக் கொண்ட குடும்பங்களுக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல், பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள், காணி உறுதிகள் போன்ற அவசியமான சட்ட ஆவணங்களைப் பெறுக்கொடுப்பது உள் ளிட்ட சமூகப் பணிகளை இவர் ஆற்றியுள் ளார்.

பெண்களின் உரிமைக்காகவும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங் களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத் தும் வகையில், கடன்கள், உதவிகள், தொழிற்பயிற்சிகளை பெற்றுக் கொடுப்ப தற்கும் இவர் பணியாற்றி வருகிறார். இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள தவச்சிறி விஜயரட்ணம், "எனது சமூகத் தின் தேவைகளுக்காக பல ஆண்டுகளாக அமைதியாக சேவையாற்றி வருகிறேன். இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டது எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம். இது எனது சேவையை தொடர்வதற்கு மேலும் உந்துதல் அளிப்பதாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான 'என் சமாதான விருது'க்கு சிறிலங்காவைச் சேர்ந்த வாசுகி ஜெயசங்கர் உள்ளிட்ட ஆறு பெண்கள் போட்டிக் களத்தில் இருந்த போதிலும் வன்னியை சேர்ந்த தவச்சிறிக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது வழங்கும் நிகழ்வு தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.

## 23 வருடங்களின் பின் கிளிநொச்சியில் புகையிரதம்

11.08.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று 23 வருடங்களிற்குப்பின்னர் கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு பரீட்சார்த்தமாக 02 புகையிரதங்கள் வருகைதந்துள்ளன. யுத்தம் காரண மாக 1990ஆம் ஆண்டு யூலை மாதத் துடன் வடபகுதிக்கான புகையிரத சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன . இந் நிலையில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடபகுதிக்கான புகை யிரதப் பாதை புனரமைப்புச் செய்யப் பட்டு தற்போது முதல் கட்டமாக கிளிநொச்சி வரை புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.



இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல.43. 3ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.
தொ.பே இல : 021 222 3739 மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com

## சிங்கள பௌத்த பேரினவாதம்

கடந்த வாரம் கிராண்ட்பாஸில் அமைந்துள்ள முஸ்லீம் பள்ளிவாசல் மீது நூற்றுக்கு மேற்பட்ட ஆயுத தாரிகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இத் தாக்குதலானது அண்மைக்காலங்களாக முஸ்லீம் சமூகத்தின் மீது நடத்துப்பட்டு வருகின்ற தாக்குதலின் ஒர் அம்சமும், தொடர்ச்சியுமாகும்.

மற்றொரு சம்பவத்தில் வெலிவேரியா பிரதேசத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பிரதேசவாசிகள் மீது இராணு வத்தினரால் துாப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது 03 பிரதேச வாசிகள் உயிரிழந்தனர். குறித்த வெலிவேரியா பிரதேசமானது பெரும்பான்மையாக கிறிஸ்தவர்களை கொண்ட பகுதியாகும் குறித்த பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது அங்கு வந்த இராணுவ அதிகாரி ஒருவர் கிறிஸ்தவ பெண் பாதிரியாரின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்து பகிஸ்தானிலும் கிறிஸ்தவர்கள் தான் குழப்பங்களை விளைவிக்கிறார்கள். இங்கு அவ்வாறு குழப்பம் விளைவிக்க உங்களை அனுமதிக்கோம் என்று எச்சரித்ததாக தகவல் வெளியாகி இருக்கின்றன.

இது போன்ற சம்பவங்கள் கூறும் செய்திதான் என்ன?

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு இங்கு சிங்கள பௌத்தர்களை தவிர வேறு எவருக்கும் இடமில்லை சிங்கள கிறிஸ்தவர்களுக்குக் கூட இடமில்லை என்பது தான் அச்செய்தி.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அழிவிற்குப் பின்னர் தமிழ் மக்களை தாம் முற்று முழுதாகத் தோற்கடித்தாக நினைக்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் மிச்சமீதியையும் அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கின்றது.

பௌத்த சிங்கள பேரினவாதம் தற்போது முஸ்லீம் சமூகம் மீது தனது பார்வையை திருப்பியுள்ளது.அச் சமூகத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையை தற்போது சிறிது சிறிதாக ஆரம்பித்துள்ளது. முஸ்லீம் மக்களைச் சீண்டி அவர்களைக் கொந்தளிக்கச் செய்து பின்னர் ஒட்டு மொத்தமாக அழித்தொழிப்பது தான் அவர்களது திட்டம்.

வீச்சுக்கொண்டிருக்கும் இச் சிங்கள பௌத்த பேரினவாதமானது வெறும் ஓர் ஆட்சி மாற்றத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப் படக்கூடிய ஓர் விடயமல்ல. சிங்கள பௌத்த பேரினவாதத்தை கையில் எடுப்பவர்கள்தான் இலங்கையின் ஆட்சியாளர்களாக வரமுடியும் என்பது வரலாற்றுக் கண்ணோட்டங்கள் ஊடாக அறியக் கூடிய ஓர் விடயம்.

மாகாணசபைகளைக் கைப்பற்றுவதன் ஊடாக இச் சிங்கள பௌத்த பேரினவாதத்தினை எதிர் கொள்ளலாம் என்ற ஓர் பிரச்சாரத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்து வருகின்றது. கூட்டமைப்பின் இச் செயற்பாடானது தமிழ் மக்களின் தேசியவாத சிந்தனையை இல்லாதொழிக்கும் முயற்சியாகும்.

மாகாண சபைக்குள் எம்மை முடக்கத்துடிக்கும் சதிவலையில் இருந்து நாம் சுதாகரித்து எழ வேண்டும். இப்பேரினவாதத்தை எதிர்கொள்ள நாம் எமது மனோபலத்தையும் தேசியவாத சிந்தனையையும் உயர்த்தி வரக்கூடிய அழிவில் இருந்து எம்மைப் பாதுகாக்க தயார்ப்படுத்துவதே இப்போது எமக்குள்ள காலத்தின் கட்டாயமான பணியாகும்.

## பள்ளிவாசல் மீது தாக்குதல் கிராண்ட்பாஸில் ஊரடங்கு பதற்றத்தை கட்டுப்படுத்த பொலிஸ்,இராணுவம் குவிப்பு

கொழும்பு கிரண்ட்பாஸ் சுவர்ண வைத்திய வீதியிலுள்ள முஸ்லீம் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த 05 பேர் கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயப்பட் டவர்களில் பொலிஸாரும் உள்ளனர். தாக்குதலில் பல வீடுகளும் வாகனங்களும் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று மாலை தொழுகையின் பின்னர் பள்ளிவாசல் முன்றலுக்கு ஆயுதங்களுடன் வந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்டதாக சம்பவத்தை நேரில்கண்டவர்கள் தெரிவித்தனர்.

மோதல்களைத் தொடர்ந்து பிரதேசத்தில் நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டனர்.

சுவர்ண வைத்திய வீதியில் பழைய பள்ளிவாசலுக்கு பதிலாக மதவிவகார அமைச்சின் அனுமதி பெற்று கட்டப்பட்ட பள்ளிவாசலொன்றை திறக்கவிடாமல் பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் தொடர்ந்தும் இடையூறுகள் ஏற்படுத்திவருவதாக கடந்த மாதங்களில் முறைப்பாடுகளும் செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

2009ல் தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் முஸ்லீம் கள் மீதான இன. மாத வன்முறை அதிகரித்து வருவதும் பல பள்ளி வாசல்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## குடிநீர் பிரச்சனை வெலிவேரியவில் ஆர்ப்பாட்டம் – தாக்குதலில் மூவர் பலி பலர் படுகாயம்

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் மூவர் கொல்லப்பட்டார்கள். படுகாயமடைந்த 15 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 01.08.20013 இரவு .7.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டதாக்குதலிலேயே இவர்கள் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதில் பலபேர் துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் கம்பஹா மற்றும் வத்துபபிட்டிவல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெலிவேரிய பிரதேச மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில்மோதல் சம்வம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இராணுவத்தினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் உயிர் இழந்தர். பின்னர் மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தவேளை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர்.

ஆர்ப்பாட்ட காரர்களை இராணுவத்தினரும் பொலீசாரும் தடுத்து நிறுத்த முயற்சித்துள்ளனர். தொழிற்சாலை ஒன்றின் கழிவு நீர் காரணமாக குடிநீர் பிரச்சனையை எதிர் நோக்கிவருவதாக கிராம மக்கள் தங்களது கடும் எதிர்ப்பை வெளியிட்டுவந்தனர். ஆர்ப்பாட்டம் வன்முறையாக வெடித்ததனை தொடர்ந்து பொலீசாரும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அதன் போது கிராம மக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் மோதல் வெடித்ததாக தெரியவருகிறது. வெலிவேரிய பிரதேசமானது கத்தோலிக்க மக்களை பெரும்பான்மையாக கொண்ட பிரதேசமாகும். என்பது குறிப்பிடத்தக்கது.

## கைக்குண்டுத் தாக்கதல் – நாவற்குழி விகாரைமீது பிரதேச மக்கள் அச்சத்தில்

யாழ் நாவற்குழியில் உள்ள விகாரை மீது 10.08.2013 அன்று இரவு இனம் தெரியாத நபர்களால் கைக்குண்டு தாக்குதல் மேற்க்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து பெரும் பதற்றம் நிலவியதோடு இராணுவத்தினரும் பொலீசாரும் பெருமளவில் குவிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

சாவகச்சேரி நாவற்குழியில் உள்ள சிங்களக்குடும்பங்கள் குடியேற்றப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பௌத்த விகாரைமீது இத் தாக்குதல் இரவு 9.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இத் தாக்குதலினை மோட்டார் சைக்கிலில் வந்த இனம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ரது.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிசார் விசார- ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச் சம்பவத்தை அடுத்து வீதிச்சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் 11.08.2013 வரை எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பாகிஸ்தானிடம் பேசுவதில் பயநில்லை இந்தியா திட்டவட்டமாக தெரிவிப்பு

இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறல்கள் நிறுத்தப்படும் வரை அந்தநாட்டுடன் எந்தவித பேச்சுகலிலும் ஈடுபடப் பேவதில்லை என இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் இந்தியாவிடம் பேச்சுகளில் ஈடுபட விருப்பம் தெரிவித்துள்ள நிலையிலேயே இவ்வாறு திட்டவட்டமாக கூறியுள்ளது இந்தியா.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித்தொடர்பாளர் செய்யத்பருதீன் "பகிஸ்தான் பிரதமரின் நேசக்கரத்தை நாங்கள் வரவேற்கின்றோம். இந்தியா எழுப்பியுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்காத வரை பாகிஸ்தானுடன் எந்தப்பேச்சுகளும் நடத்தப்படமாட்டாது. அண்மையில் எல்லைப்குதியில் இந்திய இராணுவத்தினர் 5 பேர் உயிரிழந்தமை தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் மீது பாகிஸ்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எல்லை கட்டுப்பாட்டு கோடு அருகே இனியும் அத்துமீறிய தாக்குதல் தொடர்ந்தால்.இருநாட்டின் உறவில் பாதிப்பு ஏற்படுவதுடன் அதற்கான விளைவுகளையும் பாகிஸ்தான் எதிர் கொள்ளவேண்டும்.

2008ம் ஆண்டு மும்பை தாக்குதல் குற்றவாளிகளுக்கு எதிராகவும் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துவதுடன்.அவர்களை நீதியின் முன்பும் நிறுத்தும் வகையில் பாகிஸ்தான் செயற்படவேண்டும் என்று தெரிவித்தார்.

இந்தியாவை நட்பு நாடு என்று யார் சொன்னது? இந்தியாவிற்கு நட்பு நாடு என்ற அந்தஸ்தை ஒருபோதும் வழங்க முடியாது என்று பாகிஸ்தானின் நிதித்துறை அமைச்சர் இஸாக்தர் தொரிவித்துள்ளார்.

## 47 பேர் பலி - நைஜீரியாவில் துப்பாக்கிச் சூடு

நைஜீரியாவில் வடக்குப்பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட துாப்பாக்கிச்சூட்டில் 47 பேர் உயிர் இழந்ததுடன் 26 பேர் காயமடைந்துள்ளனர்.தலைநகர் மொகிடுசுவிற்கு 35 கீலேமீற்றர் தொலைவில் உள்ள குண்டகா என்னும் நகரில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிதாரிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலை இஸ்லாமிய தீவிர வாத அமைப்பான பர்கோஹாராம் என்னும் அமைப்பைச்சேர்ந்தவர்களே நடத்தியிருக்கலாம் என்று நைஜீரியப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இஸ்லாமிய தனிநாடொன்றை நைஜீரியாவில் உருவாக்கும் நோக்கில் பரகோ ஹாராம் அமைப்பினர் நீண்ட காலமாகப்போராட்டம் நடத்திவருகின்றனர்.

## மும்பையில் நின்ற இந்திய நீர்மூழ்கி கப்பலில் வெடி விபத்து 18 பேர் பலி!

மராட்டிய மாநிலம் மும்பையில் 14.08.2013 அன்று அதிகாலையில் இந்திய கப்பற்படைக்கு சொந்தமான சிந்துரக்ஷக் நீர்மூழ்கி கப்பலில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது.

இதனை அடுத்து கப்பல் தீப்பிடித்து எரிந்தது. தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து கப்பலில் இருந்த 18 பேரது நிலை குறித்து தெரியவரவில்லை. இது குறித்து தகவல் அறிந்தவுடன் தீயணைப்பு படையி-னர் சம்பவ இடத்திற்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

தற்போது இந்த சம்பவம் குறித்து மும்பையில் கடற்படை தளபதி டி.கே. ஷோஜி செய்தியாளர்களிடம் பேசி-னார். அப்போது ஷோஜி தீ விபத்தில் 18 ஊழியர்கள் பலியாகியுள்ளனர். கடந்த மாதம் தான் சிந்துரக்ஷக் நீர்முழ்கி கப்பலில் முழு ஆய்வு நடத்தப்பட்டது. வெடிவிபத்து ஏற்பட்டது குறித்த தெளிவான விளக்கம் தற்போது இல்லை. கப்பலில் இரண்டு முறை வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. சிறிய அளவில் ஏற்பட்ட தீ பரவியுள்ளது. வெடிவிபத்தினால் கப்பலுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது. தண்ணீர் புகுந்துள்ளதால் கப்பல் கடலில் தரை தட்டி நிற்கிறது என்று கூறினார்.

மேலும். கப்பலில் உள்ள கப்பலின் பிரதான தாழ்ப்பாக்களை நீர்மூழ்கி கப்பல் வீரர்கள் திறந்து விட்டுள்ளனர். இதனால் தண்ணீர் வெளியேறுகிறது. தண்ணீர் வெளியேறிய பின்னரே விபத்துக்கான தகவல் தெரியவரும். நல்லதே நடக்கும் என நம்புகிறோம். மோசமான தகவலையும் எதிர்கொள்ள தயாராக இருப்போம் என்று கூறியுள்ளார். 58 பேர் இருக்க ஆற்றல் கொண்ட கப்பலில் சம்பவம் நடைபெற்ற போது 18 பேர் இருந்துள்ளனர் என்று கூறியுள்ளார்.


## இஸ்ரேல் குடியிருப்புக்கள் சட்டவிரோதமானவையே அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கெரி

இஸ்ரேலின் புதிய குடியேற்றத்திட்டங்கள் தொடர்பான அறிவிப்பு சட்டவிரோதமானது என்று தெரிவித்துள்ள அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ஜோன் கெரி.சமாதான முனைப்புக்களைக் குழப்பும் எந்த நடவடிக்கையிலும் இறங்கவேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இஸ்ரேலின் புதிய குடியேற்றத்திட்டங்கள் தொடர்பான அறிவிப்பிற்கு பலஸ்தீனம் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள நிலையிலேயே ஜோன் கெரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.மத்திய கிழக்கில் சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம் பிப்பது தொடர்பில் நம்பிக்கையுடன் இருக்கிறேன். இஸ்ரேலின் குடியேற்றத்திட்டங்கள் சட்டவிரோதமானவை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.எனினும் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படுவதற்கு சில நாட்களே உள்ள நிலையில் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டாம் என்று பாலஸ்தீனியர்களைக் கேட்டுக்கெள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் ஜோன் கெரி.

இஸ்ரேலின் நடவடிக்கை குறித்துக் கடும் விசனம் வெளியிட்டுள்ள பலஸ்தீனம்.பேச்சுக்களை குழப்பும் நடவடிக்கையில் இஸ்ரேல் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

## வல்வையில் இருந்து அமெரிக்கா சென்றிருந்த "அன்னபூரணி" பவள விழா கண்டது



தமிழர் தாயகத்தின் புகழ்மிக்க ஊர்களில் ஒன்றான வல்வெட்டித் துறையில் வல்வை மைந்தர்களால் கட்டப்பட்ட அன்னபூரணி என்ற பாய் மரக்கப்பல் அமெரிக்கா செல்வந்தரால் வாங்கப்பட்டு வல்வை கடலோடிகளால் அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டது. அந்த இரட்டைப் பாய்மரக்கப்பல் 01.08.1938 இல் அமெரிக்கா சென்றடைந்தது. இக் கப்பலினை வல்வை ஆதிகோயிலடி கிராமத்தின் கிழக்கு புறமாக உள்ள வாடி ஒன்றில் சுந்தரி மேஸ்திரியினால் கட்டப்பட்டு 1930ஆம் ஆண்டு வெள்ளோட்டித்திற்கு விடுப்பட்டது. இது 89 அடி நீளமானதாகும். இக் கப்பலினை 03.03.1937 இல் அமெரிக்காவை நோக்கி பயணமாகி 01.08.1938 அன்று பயணம் முடிவடைந்தது. இக் கப்பலுக்கு "BRIGANTINE FLORANCE C. ROBINSON" என அமெரிக்கா செல்வந்தரால் பெயர் சூட்டப்பட்டதாக அக் கப்பலை செலுத்தியவர்களின் ஒருவரான அமரர் ஐயாத்துரை இரத்தினசாமி குறிப்பிட்டுள்ளார்.

## மட்டு.செங்கலடி மாணவன் அகில இலங்கை மட்ட புத்தாக்குனர் போட்டிக்குத் தெரிவு




மட்டக்களப்பு செங்கலடி கணபதிப்பிள்ளை கிராமத்தில் அமைந்துள்ள செங்கலடி விவேகானந்தா வித்தியாலய மாணவன் அகில இலங்கை மட்ட புத்தாக்குனர் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

கடந்த யூலை மாதம் திருகோணமலையில் நடைபெற்ற மாகாண மட்ட புத்தாக்குனர் போட்டியில் கலந்து கொண்டு இரண்டாமிடம் பிடித்த செங்கலடி விவேகானந்தா வித்தியாலய மாணவனான செல்வன்.ந.சந்தோஸ் அவர்களால் செய்யப்பட்ட செயற்கை மணி நாடளாவிய மட்டபோட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

சுமார் 300 ஆக்கங்களுடன் போட்டியிட்டு இரண்டாமிடம் பிடித்த மேற்படி மாணவனின் செயற்கை மணி எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள புத்தாக்குனர் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

மேற்படி மாணவனின் ஆக்கத்திற்கு வழிகாட்டியாக இருந்த பாடசாலை அதிபர் கி.சிவலிங்கராஜா. வகுப்பாசிரியர் திருமதி.ம.சிவாகரன் மற்றும் பெற்றோர்களும் பாராட்டப்பட்டனர்.

## கரடியனாறு பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளியால் பல வீடுகள் சேதம்!



மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியனாறு, இராஜபுரம், கெவிலியாமடு, கித்தாள் போன்ற இடங்களில் 03.08.2013 அன்று மாலை 5 மணியளவில் வீசிய மினி சூறாவளி காரணமாக சுமார் 10 இற்கு மேற்பட்ட வீடுகள் முற்றாக சேத மடைந்துள்ளதுடன், 50 இற்கு மேற்பட்ட வீடுகள் பகுயதிளவில் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பிரபாகரன் போட்ட பூட்டை சம்பந்தன் உடைக்கின்றாரா?

– முத்துக்குமார்

வடமாகாணசபை தேர்தல் ஆரவாரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் இழுபறிகள் காணப்பட்டாலும், இந்தியாவின் அழுத்தத்தினால், மாவை வாபஸ் பெற , தமிழரசுக் கட்சிக்காறர்களும் புகைந்து அடங்கிவிட்டனர். விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளர் என்பது உறுதியாகி வேட்புமனுத்தாக்கல் செய்வதும் மாலை, மரியாதைகளுடன் முடிந்துவிட்டது. தனது தம்பியை மாகாண அமைச்சராக்குவது என்ற உறுதிமொழியை சம்பந்தன் வழங்கியதுடன் சுரேஷ்பிரேமச்சந்திரனும் அடங்கிவிட்டார். அவரது கட்சியைச் சேர்ந்த ஐங்கரநேசனுக்குத்தான் இலவு காத்த கிளி போல ஒரு ஏமாற்றம். புரூட்டஸ் நீயும் தானா? என மனதுக்குள்ளே குமுறுவதைத் தவிர அவருக்கு வேறு வழிகள் இருக்கவில்லை. தம்பியாரை அரசியலில் இறக்கியதன் மூலம், தமிழர் வரலாற்றில் அதிகம் பரீட்சயமில்லாத வாரிசு அரசியலை சுரேஷ்பிரேமச்சந்திரன் தொடக்கிவைத்திருக்கின்றார்.

வேட்பாளர்களை கூட்டமைப்பின் கட்சிகளுக்கு ஒதுக்கும் விடயத்தில் கூட சம்பந்தன் தலைமை பெருந்தன்மையோடு நடந்துகொண்டது. தமிழ்த்தேசியநீக்க மானால், தென்னிலங்கையில் பேரினவாத அணியிலிருந்து மகிந்தர்அரசாங்கம் தனிமைப்படுத்தப்பட வேண்டும். மகிந்தர் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்கின்ற, மகிந்தருக்கு பலம் சேர்க்கின்ற பேரினவாத அணி அவரிட மிருந்து விலகவேண்டும். வடமாகாண சபைத் தேர்தல் அதற்கு உதவும் என இந்திய - அமெரிக்கக் கூட்டு திடமாகவே நம்புகின்றது.

13வது திருத்தத்தையும், அதன் அடிப்படையில் அமைந்த மாகாணசபை முறையையும், பேரினவாதிகளும், அரசாங்கத்தில் இருப்பவர்களும் ஊதிப் பெருப்பித்தினால், வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதை பேரினவாதிகள் விரும்பவில்லை. 13வது திருத்தம் பிரிவினைக்குச் சமனானது என தற்போது அவர்கள் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.



அந்த நகர்த்தல் செயற்பாட்டில் முதலாவது கட்டம்தான், கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது புலிநீக்கம் இடம்பெற்ற மையாகும். முதலில் புலிநீக்கம், பின்னர் தமிழ்த்தேசியநீக்கம், தொடர்ந்து மக்களை அதற்குத் தயார்படுத்தல் என்பதே இவ்விடயத்தில் சம்பந்தன் தலைமையின் நிகழ்ச்சிநிரலாக இருந்தது. அந்தத் தேர்தலில் புலிகளுடன் நேரடியாக அடையாளம் காணப்பட்ட, செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் என்போர் இந்தியாவின் ஆலோசனையின் பேரில் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்டனர். கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தமிழ்த் தேசிய நீக்க அரசியலுக்கு உடன்படாத தினால், கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். இரண்டாவது கட்டத்தில் தேசியப்பட்டியல்

அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது. வடக்கு - கிழக்கு இணைப்பு தமிழ்மக்களது கூட்டிருப்பின் அடையாளம். இது அரசியல் ரீதியாகவும், பிரிப்புகுள்ளாகும் போது தமிழ்த்தேசிய அரசியல் தானாகவே சிதைவடையும். என்பது சம்பந்தன் தலைமைக்கு நன்றாகவே தெரியும்.

கிழக்குத் தேர்தலிலும் தமிழ்த்தேசிய நீக்கத்தைக் கருத்தில்கொண்டு தமிழ்த்தேசியசாயம் இல்லாத முன்னாள் கல்விஅதிகாரி தண்டாயுதபாணி முதலமைச்சர் வேட்பாளராக களமிறக் கப்பட்டிருந்தார். அவரும் சம்பந்தனின் கொள்கைக்கு மிகுந்த விசுவாசம் தெரிவிக்கும் வகையில் கிழக்குமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றபோதும், தமிழ்த்தேசியஅரசியல் பற்றி வாயே திறப்பதில்லை. தனது சொந்த மாவட்டமான திருகோணமலையில் பேரினவாத ஆக்கிரமிப்பு பச்சையாக இடம்பெறுகின்றபோதும் சம்பந்தன் போலவே அவரும், அதுபற்றி அக்கறைப்படுவதில்லை.

எதுவும் செய்யவேண்டாம் என சம்பந்தன் கட்டளையிட்டிருக்கக்கூடும். ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத்தெரிவிப்பது தமிழ்த்தேசிய அரசியலை வெளிப்படை யாகக் காட்டமுற்படும் என சம்பந்தனைப் போல அவரும் கருதியிருக்கலாம். கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்தினைப் பேரினவாதிகள் முழுமையாக ஆக்கிர

அரசியலே அவரின் நிகழ்ச்சிநிரலில் முதன்மையாக இருந்தமையினால், இந்த விடயத்தை அவர் பெரிதுபடுத்தவில்லை. ஜனநாயகத்தோற்றம் வேட்பாளர் தெரிவிற்கு கொடுக்கப்பட்டது. வேட்பாளர் தெரிவுக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெற்றன. மிகத் தாராளமான வகையில் கூட்டமைப்பின் கட்சிகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டது. எவரும் எதிர்பார்த்திராத வகையில் சுரேஷின் ஈழமக்கள் புரட்சிகர முன்னணிக்கு 16 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சிக்கு அடுத்த படியாக பெரிய கட்சி அந்தஸ்தினை அது பெற்றிருக்கின்றது. யாழ் மாவட்டத்தில் மக்கள் வாக்கு வங்கியை கவரத்தக்க நான்கு வேட்பாளர் களை சுரேஷ்பிரேமச்சந்திரன் இறக்கியிருக் கின்றார்.

தமிழரசுக்கட்சிக்காறர்களுக்குத் தங்களது முதன்மை நிலை கீழிறங் குகின்றது, என்பதையிட்டு புகைச்சல் தான். ஆனாலும் ஒருவாறு அடக்கிக் கொண்டனர். தமிழரசுக்கட்சியாக முன்னேறுவதைவிடுத்து, கூட்டமைப்பாக முன்னேறு என இந்தியா போதித்ததன் விளைவாக இம்மாற்றங்கள் ஏற்பட்டிருக் கலாம் இருக்கலாம். தேர்தல் முடிந்த கையோடு கூட்டமைப்பைப் பதிவுசெய் வதில் சம்பந்தன் இறங்கினாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை.

சம்பந்தன் தலைமைக்குப் பின்னால் நின்று வியூகம் வகுக்கும் அமெரிக்க - இந்திய கூட்டின் இலக்கு மிகவும் தெளிவானது. இலங்கையில் ஆட்சிமாற்றம் ஒன்றைக்கொண்டு வருவதே அதன் இலக்கு. அதற்கு வடமாகாணசபைத் தேர்தலை எவ்வளவு உச்சத்திற்கு பயன்படுத்தலாமோ அந்தளவிற்கு பயன் படுத்த முனைகின்றது.

இந்த ஆட்சிமாற்றம் நிகழவேண்டு

மகாநாயக்கர்களே 13வது திருத்தத்தினை நீக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

எனவே மாகாண சபைகளுக்கு எந்தவித அதிகாரங்களும் இல்லாவிட்டாலும் கூட வடமாகாணசபைத் தேர்தல் நடைபெற்று கூட்டமைப்பு நிர்வாகத்தைப் பெற்றுக்கொண்டால், பேரினவாதிகள் அதிருப்திடைய வாய்ப்புக்கள் உண்டு. இது பண்டார நாயக்கா கால நிலைமைகளை உருவாக்க லாம். பண்டாரநாயக்காவை ஆட்சிக்குக் கொண்டுவந்த பேரினவாத சக்திகளே பின்னர் எதிராகக் கிளர்ந்தார்கள் என்பது வரலாறு. அந்த வரலாற்றினைத் திரும்ப வும் கொண்டுவரலாம் என்பதே அமெரிக்க - இந்திய கூட்டின் நினைப்பாக உள்ளது போல் தெரிகின்றது.

தென்னிலங்கையில் இச்செயற்பாடு நடைபெறவேண்டுமானால் அதற்கு முன்னர் தமிழர்அரசியல் தமிழ்த்தேசிய நீக்கம் செய்யப்படவேண்டும். ஏனெனில் தமிழ்த்தேசியவாதமும், பேரினவாதமும் ஒன்றையொன்று பலப்படுத்துபவை. புலிகளும், மகிந்தரும் பலமானது இந்தப்போக்கினால்தான். எனவே தற்போதைய நிலையில் ஆட்சிமாற்றம் ஒன்று இடம்பெறவேண்டுமானால், தென்னிலங்கையில் மகிந்தர் தனிமைப் படுத்தப்படவேண்டும். வட - கிழக்கில் தமிழ்த்தேசிய நீக்கம் இடம்பெற்று தமிழ்த் தேசியவாதிகள் சிறுகுழுவாக மாறுதல் வேண்டும்.

தென்னிலங்கையில் மகிந்தர் தனிமைப் படுத்தப்படுகின்றாரோ இல்லையோ தமிழர் அரசியலில் தமிழ்த்தேசியநீக்கம் செய்வதற்கு, போர்க்காலத்திலேயே சம்பந்தன் தலைமை உத்தரவாதம் கொடுத்துவிட்டது. போர் முடிந்த கையோடு, தமிழ்த்தேசிய நீக்க வேலைத் திட்டத்தினைக் கட்டம், கட்டமாக நகர்த்தத் தொடங்கியது.

பாராளுமன்ற உறுப்பினராக கொழும்பு மேட்டுக்குடியைச் சேர்ந்த சுமந்திரன் களமிறக்கப்பட்டார். தமிழ்த் தேசிய நீக்க அரசியல் செயற்பாட்டை சர்வதேச மட்டத்தில் முன்னெடுப்பதற்கு சம்பந்தனுக்கு ஒரு உதவியாள் தேவைப் பட்டார். உண்மையில் சம்பந்தன் கஜேந்திரகுமாரையே இதற்குப்பயன் படுத்த விரும்பியிருந்தார். அவர் சம்மதிக்காத தினாலேயே இந்தியாவின் ஆலோசனையின் பேரில் சுமந்திரன் கொண்டுவரப்பட்டார். சர்வதேசத் தொடர்பு களில் மருந்திற்குக்கூட தமிழ்த் தேசிய வாசனை இருக்கக்கூடாது என்பதே சுமந்திரன் வருகைக்குக் காரணமாக அமைந்தது. அவரும் அரசாங்கத்துடன் இணைந்து கிறிக்கட் விளையாடியும், ஒற்றையாட்சி அடிப்படையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தீர்வை வரவேற்றும், சம்பந்தனுக்கு தமது விசுவாசத்தைத் தெளிவாகவே தெரிவித்துக் கொண்டார்.

மூன்றாவது கட்டத்தில், சம்பந்தன் சிங்கக்கொடியேற்றி தமிழ்த்தேசியஅரசியல் நீக்கத்திற்குத் தயார் எனப் பகிரங்கமாக அறிவித்தார். அதுவும் ரணிலுடன் சேர்ந்து கொடியேற்றியதன் மூலம் தனது உச்ச விசுவாசத்தைக் காட்டிக்கொண்டார். சிங்கக்கொடி பேரினவாதத்தின் அடையா ளக்கொடி என்பது பற்றி, சம்பந்தனுக்கு எந்தவிதக் கவலையும் கிடையாது. நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமல், விருப்பத்தின் அடிப்படையிலேயே கொடியை ஏற்றினேன் என துணிச்ச லுடன் கூற அவரால்முடிந்தது. இதுவிடயத் தில் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்க ளுடைய வெளிப்பாடு வெறும் புறுபுறுப்புக் கள் மட்டும்தான்.

நான்காவது கட்டம், கிழக்குமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டமையாகும். இதன் மூலம் வடக்கு - கிழக்கு பிரிப்பிற்கு

மித்தபோதும், அங்குள்ள தமிழ் அடையா ளங்களை அழிக்கமுற்பட்டபோதும் அந்தவிடயத்தை பெரியளவிற்கு பேசுபொருளாக்க இவர்கள் இருவரும் முன்வரவில்லை. அன்று அங்குள்ள இந்துக்கோயில் கட்டுவிக்க தடைவிதித்த பேரினவாதம் இன்று மிகப் பிரமாண்டமான பௌத்த விகாரை ஒன்றினைக் கட்டுவதற்கு முயற்சிக்கின்றது.

ஐந்தாவது கட்டம்தான் வடமாகாண சபைத் தேர்தலில் விக்னேஸ்வரனை களமிறக்கியமையாகும். இவ்வளவு காலமும் சம்பந்தன் தலைமையின் தமிழ்த்தேசியநீக்கச் செயன்முறை விக்னேஸ்வரனின் வருகையோடு முழுமைபெறுகின்றது. அதாவது பண்புமாற்றத்தினைப் பெறுகின்றது. தமிழ்த்தேசியநீக்கம் செய்யப்பட்ட அரசியலை வருங்காலத்தல் நகர்த்துவதற் கான தொடக்கப்புள்ளியாக அமைகின்றது. சம்பந்தனின் இதுவரைகால உழைப்பிற்கு தற்போது தான் வெற்றிகிடைத்திருக்கின் றது.

கூட்டமைப்பிற்குள் சம்பந்தனும், சுமந்திரனும் மட்டும் தமிழ்த்தேசிய நீக்கத்தை ஏற்றுக்கொண்டவர்களல்ல. சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை, செல்வம் உட்பட எல்லாத்தலைவர்களுமே தமிழ்த்தேசிய நீக்கத்தை ஏற்றுக் கொண்டவர்கள்தான். இவர்கள் எப்போது இந்தியாவின் எடுபிடிகளாக செயற்படமுன்வந்தார்களோ, அன்றிலிருந்தே தங்கள் அளவில் தமிழ்த்தேசிய நீக்கத்தை செய்துவிட்டனர். ஆனால் மக்களிடம் வாக்குப் பெறவேண்டும் என்பதற்காக தமது தமிழ்த்தேசிய நீக்கத்தை வெளிப்படை யாகக் கூறத்தயாரில்லை. அதனால் தமிழ்த்தேசிய சாயத்தை அடிக்கடி பூசிக்கொள்கின்றனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசமும் சர்வதேசமும் சந்திக்க வேண்டிய பொதுப் புள்ளி



**தமிழ் தேசத்தை சிங்கள பௌத்த தேசமாக்கும் செயற்பாட்டுக்கு முற்றுப் புள்ளியிடாத வரையில், தமிழ்த் தேசத்தின் இருப்பிற்கு எதிராகவும் சர்வதேசம் எதிர்பார்க்கும் பண்புகளுக்கு எதிராகவும் சிறிலங்கா அரசு செயற்படுவதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது.**

– கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

*2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் தமிழ் மக்களை தோல்வி மனப்பான்மைக்குள் தள்ளி பிறசக்திகளது நலன்களுக்காக தவறான அரசியல் பாதையில் அழைத்துச் சென்று அவர்களது அரசியல் எதிர்காலத்தினை இருண்ட யுகத்தினுள் தள்ளிவிட தமிழ் அரசியல் தரப்புக்கள் சில முயற்சிக்கின்றன. இம்முயற்சிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழ் மக்கள் தெரிவு செய்ய வேண்டிய சரியான அரசியற் பாதை எது என்பது பற்றி தெளிவுபடுத்தும் நோக்கில் தினக்குரல் பத்திரிகைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பு இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.*

இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான ஐ.நா சபையின் 1948 ஆம் ஆண்டு பிரகடனத்தின் இரண்டாவது சரத்து பின்வருமாறு கூறுகின்றது.

ஒரு தேசம், ஒரு இனம், சாதி, மதக்குழு என்பவற்றை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ அழிக்கும் நோக்கில் செயற்படுதல் இனப்படுகொலையாகும் எனக் கூறுகின்றது. அதாவது மேற் குறிப்பிட்ட தரப்புக்களை: கொலை செய்தல், உடலுக்கு கடுமையான தீமையை ஏற்படுத்தும் வகையில் அல்லது மனோநிலைரீதியாக பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல். அந்தத் தரப்புக்கள் உடல் அழிவுகளுக்கு உள்ளாகும் வகையில் அவர்களது வாழ்க்கைச் சூழலை திட்டமிட்டு உருவாக்குவதன் மூலம், அந்த குழுவைச் சார்ந்தவர்கள் உடல் ரீதியாக முழுமையாகவோ பகுதியாகவோ அழிவைச் சந்திக்கும் நிலையை உருவாக்குதல். குறித்த தரப்புக்கள் தமது இனத்தை பெருக்கிக் கொள்வதனை தடை செய்யும் நோக்கில் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையில் செயற்படுதல். குறித்த ஓர் தேசம், இனம், சாதி, மதம் சார்ந்த பிள்ளைகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாக இன்னுமொரு அடையாள குழுவுக்கு மாற்றுதல் என்பனவும் இனப்படுகொலை என வரையறுக்கப்படுகின்றது.

இனப் படுகொலைக்கான சட்டரீதியான வரைவிலக்கணம் மேற்கண்டவாறு இருக்க, நடைமுறையில் பெரும்பாலான சட்ட வல்லுனர்கள், மனிதர்கள் உடல் மற்றும் உயிரியல் ரீதியான அழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டால் மட்டுமே அந்தக் குற்றத்தை மேற்குறித்த இனப்படுகொலை என்ற வரையறைக்குள் உள்ளடக்க முடியுமெனக் கூறிவருகின்றனர். ஆனால் அதே சர்வதேச சட்டவல்லுனர்களில் ஒரு பகுதியினர், இக்கருத்தை மறுப்பதுடன் வெறுமனே உடல் அழிவு மற்றும் உயிரிழப்புக்களை ஏற்படுத்தப்பட்டால் மட்டுமன்றி குறித்த ஓர் தேசம், இனம், சாதி, மதக்குழு வின் இருப்பை இல்லாமல் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளும் இனப்படுகொலையே என வாதிட்டுவருகின்றனர். இவ்வாறு வாதிடுவோரது நியாயங்கள் ஏற்கப்படும் நிலை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சட்டம் மற்றும் பெரும்பாலான சட்ட வல்லுனர்கள் கூறுவது போன்று எடுத்துக் கொண்டாலும் கூட, தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் சிறீலங்கா அரசு பெருமளவு பொது மக்களுக்கு உடல் மற்றும் உயிரியல் ரீதியான அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் சிறீலங்கா அரசு இனப்படு கொலையை புரிந்துள்ளது என்பதனை எனது முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டியிருந்தேன்.

தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாது அழிப்பதற்காக சிறீலங்கா அரசு கையாண்டு வந்துள்ள வழி முறைகளில் ஒரு அங்கமே சர்வதேச சட்டம் கூறுவது போன்ற உடல் மற்றும் உயிரியல் ரீதியான அழிப்பாகும். உயிர்ப் படுகொலைகள் தவிரவும் தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்காக சிறீலங்கா அரசாங்கமானது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், நிலப்பறிப்பு, கடலாதிக்கத்தினை சிங்களவர்களது கைகளுக்கு மாற்றுதல், பண்பாட்டு அழிப்பு, கல்வி அழிப்பு, விவசாய துறை அழிப்பு, வர்த்தக ஆதிக்கத்தை அழித்தல், சுகாதார நிலையை தாழ்ந்த மட்டத்தில் பேணுதல் அல்லது முற்றாக மறுத்தல், நீதித்துறையை சிங்களபௌத்த பேரினமயமாக்கல் போன்ற பல வழிமுறைகளை கையாண்டு வந்தது.

2009 மே 18 இற்குப் பின்னர் உயிர் கொலைகள் பெருவாரியாக இடம் பெறவில்லை என்றாலும், தமிழ் தேசத்தின் இருப்பினை அழிப்பதற்கான ஏனைய வழிமுறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றதுடன், தீவிரப்படுத்தப்பட்டும் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

பிரித்தானியர் இலங்கைத் தீவில் இருந்து வெளியேறிய பின்னர் இலங்கைத் தீவின் முழுமையான ஆட்சியை கைப்பற்றிய சிங்களவர்கள், தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் செய்வதற்கான இன அழிப்புக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தனர். குறிப்பாக சிங்களக் குடியேற்றங்கள், நிலப்பறிப்புக்கள், பௌத்த மயமாக்கல், உள்ளிட்ட மேற்குறிப்பிட்ட பல வழிமுறைகளை கையாண்டனர். இவற்றை தடுப்பதற்கு அரசியல் ரீதியாக தமிழ் அரசியல்த் தலைமைகளால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்க வில்லை.

இந்நிலையில்தான் தமிழ் தேசத்தின் இருப்புக்கள் அழிக்கப்படுவதனை தடுப்பதற்காக, தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். அதன் விளைவாக தமிழ் தேசத்தை அழிப்பதற்காக சிறீலங்கா அரசின் செயற்பாடுகள் ஓரளவுக்கு மட்டுப் படுத்தப்பட்டிருந்தன.

ஆனால் அந்த இன அழிப்பிற்கு தடையாக இருந்த ஆயுதப் போராட்டத்தை அழிப்பதற்காக, சிறீலங்கா அரசு மேற்கொண்டுவந்த யுத்தம் காரணமாக இன அழிப்பின் ஒரு அங்கமான உயிர் அழிப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது. இனப்படுகொலை மூலம் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், உயிர் அழிப்பு நிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டாலும், ஆயுதம் ஏந்துவதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்த, தமிழ்த் தேசத்தின் இருப்பை பூண்டோடு அழிப்பதற்கான திட்டமிட்ட கபடத்தனமான வேலைத்திட்டங்கள் முன்னெப்பொழுதும் இல்லாதளவுக்கு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை, தமிழ்த் தேசம் தனது உறவுகளின் உதவியுடன் தனது வாழ்வை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளையும் சிங்கள தேசம் தடுத்து நிறுத்தி வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே, தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு புலம்பெயர் கட்டமைப்புகள் நிறுவன ரீதியாக உதவிக்கரம் நீட்டுவதை தடுக்கும் வண்ணம் அரச இயந்திரம் செயற்பட்டு வருகிறது. இத்தகைய மனிதாபிமான செயற்பாடுகளை விடுதலைப்புலிகளின் ஆதரவு சக்திகள் என கூறும் ஏற்றுக் கொள்ளமுடியாத வாதங்களையும் முன்வைத்து வருகிறது.

இவ்வாறாக உயிரிழப்புக்கள் தவிர்ந்த ஏனைய இன அழிப்பின் அங்கங்களாக உள்ள விடயங்கள் இலங்கைத்தீவில் சிங்கள தேசத்தால் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. இச் செயற்பாடுகள் தனித்தனியே நடைபெறுவதாகவும், போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்திலும், இலங்கைத் தீவில் அது உச்ச அளவிலேயே காணப்படுகின்றது என்பதனையும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. ஆனால், இவ் அமைப்புகள் சிறிலங்கா அரசாங்கத்தின் மேற்படி இன அழிப்புச் செயற்பாடுகளை மனித உரிமை மீறல்கள் எனவும் ஜனநாயக விரோதச் செயல்கள் எனவுமே மட்டுப்படுத்தி வரைவிலக்கணப்படுத்த முற்படுகின்றன.

நடைபெறும் உயிர்க்கொலை அல்லாத ஏனைய இன அழிப்புச் செயற்பாடுகளையும் தொகுத்து, தமிழர்களுக்கு எதிராக இலங்கைத் தீவில் இன அழிப்புத்தான் நடைபெறுகின்றது என ஏற்றுக்கொள்வதற்கு சர்வதேசம் தற்போதைக்குத் தயாராக இல்லை.

சர்வதேசம் இவ்வாறாக தமிழ் இனத்திற்கு எதிராக இன அழிப்பு நடைபெறுகின்றது என்பதை ஏற்றுக்கொள்ளாது தயக்கம் காட்டுவதற்கு காரணங்கள் உள்ளன. இதற்கான காரணங்களை கடந்த பத்தியொன்றில் விளக்கியிருந்தேன். இதனை எமது மக்களின் விளக்கத்திற்காக மீண்டும் சுருக்கமாகத் தருவதாயின், சர்வதேசம் தமிழினத்திற்கு எதிராக நடைபெற்ற விடயம் இனப்படுகொலை என ஏற்றுக்கொண்டால், அதன் உச்ச கட்டமாக தமிழ்த் தேசத்தினை சிங்கள தேசத்திடம் இருந்து காக்கும் முகமாக தனிநாட்டினை உருவாக்குவதாக அமையக்கூடும்.

இது தற்போதைய சர்வதேச ஒழுங்கினை மாற்றியமைத்துவிடும் என்று சர்வதேச சமூகம் கருதுகிறது. அதனாலேயே, இதன் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே, போர்க்குற்றங்களை வலியுறுத்துகின்ற சர்வதேச தரப்புக்கள், தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருவது ஒரு இன அழிப்பு என்ற உண்மையைத் தவிர்த்துக் கொள்கின்றன.

உலக ஒழுங்கில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாது என்ற காரணத்திற்காக, தமிழர்கள் இன அழிப்பில் இருந்து தப்புவதற்கு முன்னெடுத்த நியாயமான போராட்டத்தை பயங்கரவாத மூலாம் பூசி அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த சர்தேசம், சிறீலங்கா அரசினை பயங்கரவாதத்துக்கு எதிராக போராடும் அரசு எனக்கூறி அதற்கு ஆதரவும் வழங்கியது.

போர்க் காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு இனப்படுகொலையினை மேற்கொண்ட போது அதனைத் தடுத்து நிறுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் தமிழர் தரப்பு தொடர்ச்சியாகக் கூறி வந்தது. அச் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகம் கூறியது என்னவென்றால், இது இனப்படுகொலை அல்ல எனவும் மாறாக அது ஒரு மனித உரிமை மீறல் என்றும், தாரளவாத ஜனநாயகத்திற்கு ஓரளவுக்கு எதிரானதும் அதன் சில பண்புகளை மீறுகின்ற செயற்பாடுகள் மட்டுமே எனவும் கூறியது. அத்துடன் சிறிலங்கா அரசு "பயங்கரவாதத்திற்கு" எதிராகப் போராட வேண்டியிருப்பதால் சில சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்படும் முழுமையான தாராளவாத ஜனநாயக பண்புகளை பேணமுடியாது இருப்பதாகவும் வியாக்கியானப்படுத்தி, சர்வதேசம் சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகளை நியாயப்படுத்தியது.

மேலும் பயங்கரவாதத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் ஜனநாயகம் மற்றும் தாராளவாதத்தினை முழுமையாகப் பாதுகாக்க முடியும் எனவும் கூறி போருக்கான தமது ஆதரவினை சர்வதேசம் நியாயப்படுத்தியது. ஆனால் போர் முடிவுக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கடந்த நிலையில், உயிர்க் கொலைகள் என்பதைத் தவிர தமிழ்த் தேசத்தின் இருப்பினை அழிப்பதற்கான இன அழிப்பின் ஏனைய நடவடிக்கைகள் யாவும் பல வடிவங்களில் மிகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை சிறீலங்கா அரசாங்கமானது, சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்ற ஜனநாயகம், தாராளவாதம், பன்மைத்துவம் போன்ற தன்மைகளுக்கு எதிரான போக்கையும் தீவிரப்படுத்தியிருக்கிறது. அத்துடன், சிறீலங்கா ஆட்சிபீடத்தில் என்றுமேயில்லாத

(7ஆம் பக்கம் பார்க்க)

# வடமாகாண சபைத் தேர்தல் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிஸ்கரிப்பு




**எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய தமிழ் மக்களே!**

சிறீலங்கா அரசும் அதனுடைய சர்வதேச ஆதரவு சக்திகளும் தமிழ் அரசியலின் தேசியவாத சிந்தனையை இல்லாது ஒழித்து 13ம் திருத்தத்திற்குள்ளும் மாகாணசபை முறைக்குள்ளும் முடக்கும் நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலை புறக்கணிப்பதான அறிவிப்பை இவ் அறிக்கை ஊடாக வெளிப்படுத்துகின்றது.

1987 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற பெயரில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு எம்மீது திணிக்கப்பட்ட நாளில் இருந்து அதனை தமிழ் மக்கள் நிராகரித்து வந்துள்ளார்கள். காரணம் மாகாணசபைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை துளியேனும் திருப்திப்படுத்தாதது மட்டுமல்ல, பேரெழுச்சி பெற்று நிற்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கொடூர கரங்களில் இருந்து எமது தேசத்தின் இருப்பை பாதுகாக்க எந்த வழியிலும் உதவப் போவதுமில்லை என்பதுமாகும்.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயக பூமி என்பது எமது திண்மமான நிலைப்பாடு. தமிழர் தேசத்தை இருகூறிட்டு வடமாகாண சபைத் தேர்தலை நடாத்தி தமிழ் மக்களின் தேசிய அரசியலை வடமாகாணத்திற்குள் முடக்கிவிட சிங்களம் கங்கணம்கட்டி நிற்கின்றது.

எமது சம்மதமின்றி எம்மீது திணிக்கப்பட்ட ஓர் அரசியல் தீர்வை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதுமில்லை, அதனைத் தொட்டுப்பார்க்கத் தயாராகவும் இல்லை. மாகாண சபை முறைக்கு அங்கீகாரம் வழங்குவதனை எத்தகைய காரணங்களினாலும் நியாயப்படுத்திவிட முடியாது என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. இது எமது தேசிய உரிமைப் போராட்டத்தின் ஆன்மாவை உலுக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

அறிவிக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலின் புறச்சூழலை அவதானிக்கும்போது உரிமைக்கான எமது போராட்டம் பதவிக்கான போராட்டமாக மாற்றப்பட்டு விட்டதென்ற வேதனையான உண்மை எம்மை கலங்கவைக்கிறது. மேலதிகமாக, தமிழ்த் தேசிய அபிலாசைகளை பிரதிபலிக்கின்றோம் என்று கூறிக்கொண்டிருக்கும் தரப்புக்கள் இந்த மாகாண சபை முறைக்கு அங்கீகாரம் கொடுப்பதன் ஊடாக ஒரு இன அழிப்பில் இருந்து தமிழ்த் தேசத்தை காப்பாற்ற வேண்டும் என்ற இனப்பிரச்சினையின் பரிமாணத்தை மாற்றி மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் இருக்கக் கூடிய ஓர் அதிகாரப் போட்டி என்ற புதிய வடிவத்தை கொடுப்பதற்கு துணைபோகின்றனர்.

**எம் உறவுகளே...**

வெளிசத்திகள் தத்தமது நலன்களை இத்தீவில் நிலை நிறுத்திக்கொள்வதற்காக இத்தேர்தலில் தமிழ் மக்களை முழுமை யாகப்பங்கேற்க வைத்து மாகாணசபையை தீர்வாக ஏற்றுக்கொண் டுள்ளனர் எனக்காண்பிக்க முயல்கின்றன. அந்த யதார்த்தத்தினை உணர்ந்து தமிழ் மக்களின் நலன்களை மையமாக வைத்து இத்தேர்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையாக புறக்கணித்து நிற்கின்றது. எமது ஆதரவு எந்த ஒரு கட்சிக்கோ, சுயேட்சைக் குழுவிற்கோ இல்லை. நாம் இத்தேர்தலில் தம்மை ஆதரிப்பதாக கூறுபவர்களிடத்தில் விழிப்பாக இருக்குமாறும் தயவாக வேண்டுகின்றோம்.

இத்தேர்தலில் பங்கெடுப்பதன் மூலம் மாகாண சபைகளைத் தமிழ்மக்கள் தீர்வாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என யாரும் காட்ட முற்படின் அது 26 ஆண்டுகாலம் மாகாண சபைகளை நிராக ரித்து நடைபெற்ற உரிமைப் போராட்டத்தில் உயிர் நீர்த்த அனைத்து ஆன்மாக்களுக்கும் செய்யும் மன்னிக்க முடியாத துரோகமாகவே நாம் பார்க்கின்றோம். இத்தேர்தலில் பங்குபற் றுவதா? வாக்களிப்பதா? யாருக்கு வாக்களிப்பது? போன்ற தீர்மானங்களை நாம் ஒவ்வொரு தமிழ் மக்களின் மனச்சாட்சிக்கே விட்டுவிடுகின்றோம்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம், - தலைவர்**
**செல்வராசா கஜேந்திரன், - பொதுச் செயலாளர்**

## யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் தாக்குதல் - தாக்குதல் நடத்திய மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் இரு பீட மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் காயமடைந்தனர்.பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய வர்த்தக பீட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி 12.08.2013 அன்று ஆர்ப்பாட்ட பேரணி நடத்தப்பட்டுள்ளது.

10.08.2013 அன்று யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோகவிஞ்ஞான பீடத்தை சேர்ந்த மாணவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு மது போதையில் சென்ற யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக வர்த்தக பீட மாண வர்கள் அங்கிருந்த மாணவர் கள் மீது சராமரியாக தாக்கி யுள்ளனர். இதனால் நான்கு பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் காயம டைந்ததுடன் இருவர் வவுனியா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக, யாழ்பல் கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் உரிய நடவடிக்கை எடுக்காததை கண்டித்து யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களால் குருமன்காட்டில் உள்ள அவர்க ளது வளாகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பேரணி மன்னார் வீதிவழியாக சென்று பார்க் வீதியில் உள்ள வவுனியா வளாகத்தை சென்றடைந்தது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர் கள், தாக்குதல் நடத்திய காடையர் மீது உடனடியாக விசாரணை செய். மது போதையில் தாக்குதல் நடத்தும் அவர்களை இடைநிறுத்து. பல்கலைக்கழக காவலாளியை மாற்று.

மூன்று முறை தெரியப் படுத்தியும் ஏன் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. ரவுடிக ளுக்கு நிர்வாகம் பயமா போன்ற வாசகங்கள் தாங்கிய சுலோக அட்டைகளை தாங்கி யிருந்தனர்.

இதேவேளை யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக பிரயோக விஞ்ஞானபீட பீடாதிபதி எஸ். குகனேசன் மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன் இது தொடர்பாக விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி வழங்கியதுடன் மாணவர்களால் வழங்கப் பட்ட மகஜரையும் பெற்றுக் கொண்டார்.

**தமிழ் தேசமும்...**

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளவு தனி இனக்குழும ஆட்சியின் (Ethnocracy) பயங்கரத் தன்மை அதிகரித்துள்ளது.

சிறிலங்கா அரசானது தமிழ்த் தேசத்தின் இருப்புக்கு எதிராக மட்டுமல்ல, சர்வதேசம் விரும்புகின்ற நியமங்களுக்கு எதிராகவுமே செயற்படுகின்றது. ஆகவே தமிழ் தேசத்தின் இருப்புக்கும் சர்வதேச சமூகம் விரும்பும் பண்புகளுக்கும் எதிரான ஒருமித்த நிலைப்பாட்டினையே சிறிலங்கா அரசானது கொண்டுள்ளது. சிறிலங்கா அரசு இவ்வாறு செயற்படுவதற்கு மூலகாரணமாக அமைவது, சிங்கள தேசத்தின் சகல மட்டங்களிலும் புரையோடிப் போயுள்ள சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையேயாகும். அதாவது தனி இனக்குழும ஆட்சியை நிலைநாட்டி சிங்கள பௌத்த தேசமாக இலங்கைத் தீவை நிரந்தரமாக்குவதே அதன் இலக்காகும்.

இலங்கைத் தீவை சிங்கள பௌத்த தேசமாக்கும் சிங்கள தேசத்தின் செயற்பாட்டுக்கு முற்றுப் புள்ளியிடாத வரையில், தமிழ்த் தேசத்தின் இருப்பிற்கு எதிராகவும், சர்வதேசம் எதிர்பார்க்கும் பண்புகளுக்கு எதிராகவும் சிறிலங்கா செயற்படுவதை ஒருபோதும் தடுக்க முடியாது. சிறிலங்காவின் இந்த நிலைப்பாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு, தமிழர்கள் தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்பதை சர்வதேசம் முதலில் அங்கீகரிக்க வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட மற்றும் புரியப்பட்டுவரும் இன அழிப்புச் தொடர்பாக பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை நடத்தி நியாயம் வழங்கப்படவேண்டும். இச்செயற்பாடுகள் மூலமே தமிழ்த் தேசத்திற்கு எதிரான இன அழிப்புச் செயற்பாட்டினைத் தொடர முடியாது என்ற நிலையை இலங்கைத் தீவில் ஏற்படுத்தி, தனியொரு இனக்குழும ஆட்சியை நோக்கிய சிங்கள தேசத்தின் செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

இதுவே சர்வதேசம் விரும்பும் பண்புகளான ஜனநாயகம், பன்மைத்துவம், தாராளவாதம், மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, கருத்துச் சுதந்திரம் போன்ற விடயங்களுக்கும் இலங்கைத் தீவில் இடமளிப்பதாக அமையும்.

# ஸ்பெயினில் தொடரூந்து விபத்திற்கு அதிவேகமே காரணம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

ஸ்பெயின் நாட்டின் வடமேற்கு பகுதியில் உள்ள சான்டியாகோ நகரில் 25 யூலை அன்று நடைபெற இருந்த கிறிஸ்தவ ஆலய விழாவில் பங்கேற்பதற்காக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொடரூந்துகளில் ஏராளமானோர் பயணித்துள்ளனர்.

அதுபோன்று யாத்ரீகர்கள் பயணித்த ஒரு தொடரூந்து விபத்தில் சிக்கியது. 8 பெட்டிகள் கொண்ட அந்த தொடரூந்தின் 5 தொடரூந்துநிலைய பணியாளர்களும், 218 பயணிகளும் இருந்தனர்.

அந்த தொடரூந்து வளைவு ஒன்றில் அதிவேகத்தில் திரும்பும்போதுதான் தடம்புரண்டு பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்தில் சிக்கியுள்ளது. அந்த வளைவில் அதிகபட்சமாக 80 கி.மீ வேகத்தில்தான் திரும்ப வேண்டும் என்று இயந்திர சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், இரட்டிப்பு வேகத்தில், அதாவது மணிக்கு 200 கிமீ வேகத்தில் அந்த தொடரூந்து வளைவில் திரும்பியமையினாலேயே தொடரூந்து விபத்தில் சிக்கியிருக்கிறது.

தொடரூந்து தடம்புரண்டு மோதிய வேகத்தில் பெட்டிகளில் தீப்பற்றியுள்ளது. அப்போது, இடிபாடுகளில் சிக்கியோர் வெளியே வர முடியாமல் தீயில் கருகியுள்ளனர்.

விபத்து குறித்து தகவலறிந்ததும் உடனடியாக பெட்டிகளில் சிக்கியிருந்தோரையும், காயமடைந்தவர்களையும் மீட்புக் குழுவினர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

மொத்தம் 130 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் 30க்கும் அதிகமானோர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் இந்த கோர விபத்தில் சிக்கிய தொடரூந்தினை ஓட்டி வந்த 2 இயந்திர சாரதிகளும் உயிர் பிழைத்துள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

2004ம் ஆண்டு அங்கு நடந்த கிறிஸ்தவ ஆலய திருவிழாவில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டதில் 190 பேர் பலியானார்கள். இந்நிலையில், தொடரூந்து விபத்து நடந்தபோது படு பயங்கர சத்தம் கேட்டதாக கூறப்படுகிறது.


எனவே, முதலில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டாலும், தொடரூந்து அதிவேகத்தில்



வந்ததே விபத்துக்கு காரணமாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.


இவ்விபத்தால், சான்டியாகோ நகரில் நடைபெற இருந்த கிறிஸ்தவ ஆலய திருவிழா நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படும் என்றும் மேலும், 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் எனவும் ஸ்பெயின் அரசு அறிவித்துள்ளது.

## அலெக்சேண்டேரியா நூலகத்தின் மதிற் புறத்தில் தமிழ்



அலெக்சேண்டேரியா நூலகத்தின் வெளி கட்டமைப்பில் தொன்மைக்கு அடையாளமாக தமிழ் மொழி எழுத்து இடம் பெற்றுள்ளது. இது அலெக்ஸ்சேண்டேரியா நூலகத்தின் வெளி கட்டமைப்பு. இவை ஒரு நூலகமாகவும் கலாச்சாரத்தை எடுத்துரைக்கும் ஒரு நடுவமாகவும் செயல்படுகிறது. இதன் வெளிப்புறத்தில் ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தை எடுத்துரைக்கும் வாயிலாக, மொழியின் தொன்மையின் அடையாளமாக தமிழ் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளது. இது எகிப்து நகரத்தின், மத்திய தரை கடலின் (Shore of Mediterranean Sea) கரையில் அமைந்துள்ளது..

## இதுவரை கண்டிராத இராட்சத உயிரினம் கண்டுபிடிப்பு



பாரசீக வளைகுடாவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராட்சத கடல் வாழ் உயிரினம் ஒன்றின் இறந்த உடல் அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது போன்ற உயிரினம் இதுவரை உலகில் வேறு எங்கும் காணப்பட்டதில்லை என்பதனால் அந்த உயிரினம் என்னவாக இருக்கும் என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாரசீக வளைகுடாவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஈரானிய கடற்படையினரே இதனை முதன் முதலாக கண்டுபிடித்துள்ளனர். பின்னர் குறித்த உயிரினத்தின் படங்கள் ஈரானிய இணையத்தளமொன்றில் வெளியாகியது. அப்படங்கள் வெளியான பின்னர் இது என்ன உயிரினமாக இருக்குமென்ற விவாதம் தொடங்கியுள்ளது.

பலர் இது ஒரு வகை திமிங்கிலமே எனத் தெரிவித்துள்ளனர். ஆராய்ச்சியாளர்களும் இதனையே தெரிவிக்கின்றனர். ஆனால் திமிங்கிலத்தின் எப்பிரிவைச் சார்ந்தது என்பதை உறுதியாகக் கூற முடியாமல் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடலில் இத்தகைய மர்ம விலங்குகள் கண்டுபிடிக்கப்படுவதும், கரையொதுங்குவது இது முதன் முறையல்ல. நியூசிலாந்து நாட்டின் பியுக்ஹினா கடற்கரையொன்றில் இராட்சத கடல் வாழ் உயிரினமொன்று இறந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கரையொதுங்கியது.

அழுகிய நிலையில் உள்ள குறித்த உயிரினமானது 30 அடி நீளமானதென தெரிவிக்கப்பட்டது. இதேபோல் சீனாவின் குவாண்டொங் கடற்கரைப் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு இராட்சத உயிரினமொன்று கரை ஒதுங்கியது. அது 55 அடி நீளமான உயிரினமொன்றினுடையதாகும்.

## இரண்டு உலகப் போர்களை கடந்த மூதாட்டி மரணம்

பாகிஸ்தானில் பிறந்து, தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த சாண்ட் கவுர் பஜ்வா என்ற 115 வயது மூதாட்டி கடந்த 19.07.2013 இயற்கை எய்தினார். இங்கிலாந்தின் அதிகூடிய வயதுப் பெண்மணியான இவர், இரண்டு உலகப் போர்களைப் பார்த்துள்ளாராம். சாண்ட் கவுர் பஜ்வா 1898ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி தற்போது பாகிஸ்தானில் உள்ள குஜராத் பகுதியில் பிறந்தார். 1960ம் ஆண்டு இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்த இவர், இங்கிலாந்தின் வயது மூத்த பெண்மணி என அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உலகளவில் வயது முதிர்ந்த இரண்டாவது பெண்மணி இவர். 16 வயதில் மணமுடிக்கப்பட்ட பஜ்வா, சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தவர். தனது மூத்த சகோதரியால் வளர்க்கப்பட்டார். நான்கு குழந்தைகளுக்கு தாயான நிலையில், மணமான ஆறு வருடங்களிலேயே பஜ்வாவின் கணவர் காலமானார். 1972ம் ஆண்டு இவரது மகள் எதிர்பாராவிதமாக மரணமடைந்த போது, இவருக்கு வயது 74. ஆனால், அந்த தள்ளாத வயதிலும் தனது பேரக்குழந்தைகளை எடுத்து பராமரித்து வளர்க்கத் தொடங்கினார். அதில் இரட்டைக் குழந்தைகளான



பேரன்களின் வயது அப்போது 6 ஆகும். எங்கள் பாட்டியின் உடல் மற்றும் உள்ள உறுதிதான் அவரை இத்தனை நாள் வாழ வைத்தது. அவரைப் போன்ற பெண்மணியை பார்ப்பது மிகவும் அரிது என அவரது பேரன்கள் மற்றும் கொள்ளுப் பேரன்கள் அவரைப் புகழ்ந்து பேசுகின்றனர். தற்போது, இவருக்கு 12 பேரப்பிள்ளைகளும், 28 கொள்ளுப் பேரப்பிள்ளைகளும் உள்ளனராம். வயோதிபம் காரணமாக கடந்த வெள்ளியன்று இயற்கை எய்திய இப்பாட்டியின் இறுதிச்சடங்கை சிறப்பாக செய்து முடிக்க உறவினர்கள் திட்டமிட்டிருக்கிறார்களாம். தன் மகள் மற்றும் மருமகனோடு 1966ம் ஆண்டு லண்டனில் குடியேறிய பஜ்வா தனது இறுதிமூச்சை அங்கேயே விட்டுள்ளார்.

## 2041 படிக்கட்டுகளை 10 நிமிடத்தில் ஏறி சாதனை படைத்த ஜேர்மனி நபர்



சீனாவில் 2041 படிக்கட்டுகளில் ஏறி ஜேர்மனியைச் சேர்ந்த தாமஸ் டோல்டு என்பவர் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்தார்.

இந்தப்போட்டி சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டிடத்தில் நடந்தது. இந்தக்கட்டிடம் சுமார் 82 மாடிகளைக் கொண்டதுடன், இதன் உயரம் 1080 அடியாகும். இதில் லிப்ட் தவிர சுமார் 2041 படிக்கட்டுகள் உள்ளன.

இங்குள்ள 82 மாடிக்கு 2041 படிக்கட்டுகள் மூலம் ஓடும் போட்டி சமீபத்தில் நடந்தபோது இதில், சுமார் 600 பேர் கலந்து கொண்டனர்.

போட்டியில் ஜேர்மனியைச் சேர்ந்த தாமஸ் டோல்டு என்பவர் முதலாவதாக வந்து வெற்றி பெற்றார்.

தரைத்தளத்தில் இருந்து படிக்கட்டுகள் வழியாக 82வது மாடியை 10 நிமிடம் 22 வினாடிகளில் இலக்கையடைந்து சாதனை படைத்தார். இது குறித்து தாமஸ் டோல்டு கூறுகையில், வினாடிக்கு 3 முதல் 4 படிகளில் ஏறியதால்தான் வெற்றிக் கிடைத்தது என்று தெரிவித்துள்ளார்.

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

வணக்கம் வணக்கம் நான் கல்வயல் கனகசிங்கம். திரும்பின பக்கமெல்லாம் பிள்ளைபிடிகாரரைப்போல விளம்பரப் பலகைகளிலெல்லாம் வேட்பாளர் பெருமக்கள் கைகூப்பிக்கொண்டு நிக்கினம். சின்னஞ்சிறுசுகள் றோட்டால போகவே பயப்படுதுகள். என்ர மகனை கடத்திகொண்டு போனவன், முகாம்களிற்குள்ள கூடிவந்து தலையாட்டி, வடிகட்டி பிடிச்சுக் கொண்டு போனவன், எல்லோரும் எலெக்சனிற்கு வந்திருக்கிறாங்கள். றோட்டுறோட்டா திண்டு வேட்டியள் கழண்டு விழுறதுகூட தெரியாது கும்பிட்டு வோட்டு கேக்கிறாங்கள்.

ஆனால் அவங்கள் பிடிச்சுக் கொண்டு போனவர்கள், இன்னும் வீடு திரும்பவேயில்லை. இவங்கள் ராசா மாதிரி வந்து நிக்கிறாங்கள் .கேட்டால் நாங்கள் மே 19க்கு முதல் ஒரு மாதிரி. இப்ப இன்னொரு மாதிரியெண்டு விளக்கம் வேற சொல்லுறாங்கள். உந்த சத்திராதிகளுக்கு பின்னால, எங்கட கொஞ்சம் ரோசம் இல்லாம திரியுதுகள்.

எதிலயோ ஒட்டின மண் மாதிரி திரியுதுகள். போதாக்குறைக்கு சனத்திட்ட பறிச்ச காசும் கனக்க கையில கிடக்குது போல. பிடிச்சுக் கொண்டு போனவையை விடுவிக்க ஒரு றேட், காணாமல் போனவையை மீட்க ஒரு றேட், சிறையில் போய் தேடிப்பார்க்க ஒரு றேட் எத்தின இலட்சத்தை தாலியை, வீட்டை, காதில கையில கிடந்த நகையை வித்து கொடுத்தம். ஆனால் காணாமல் போனவையோ, பிடிச்சுக்கொண்டு போனவையோ ஒருத்தரும் வரவேயில்லை. இவங்கள் எல்லோரும் கோடீஸ்வரரானது மட்டும் மிச்சம்.

உந்த சீத்துவத்திலை முதுகில குத்தி அழிச்சவை, நெஞ்சில குத்தி அழிச்ச துணைக்குழுக்களையும் தங்களோட கூட்டுச் சேர்ந்து புலிகள் உருவாக்கின கூட்டமைப்பு என்ற போர்வையை போர்த்திக் கொண்டு வாக்கு கேட்டு வருகினம். வடக்கு கிழக்கில நிலச்சு வீகரிப்ப, சிங்களக்குடியேற்றம், பௌத்தமயமாக்கலெண்டு ஆயிரம் பிரச்சினைகளுக்கு எதிராக சனம் போராடிக்கொண்டிருக்குது. றோட்டில சனம் அநாதையா நிக்குது. அப்பவெல்லாம் பேச்சு மூச்சுக்காட்டாத சிங்கக் கொடிகாத்த வீரன் இப்ப வெளிக்கிட்டிருக்கிறார் பாருங்கோ. வாக்கு கேட்டு எந்த முகத்தை வைச்சுக் கொண்டு சனத்திட்ட வரப்போறா ரெண்டு பார்ப்போம்.

மஹிந்தாவின்ர அமைச்சர்மார் பேசியிருக்கிறதா பேப்பர்களில அடிக்கடி இப்ப வாற செய்திதான் எல்லோரும் வாசிச்சிருப்பியள், "வடக்கு தேர்தலை நடத்துறதா அறிவிச்சம்" "அதில கூட்டமைப்பை போட்டியிடவும் வைச்சம்", இதன் மூலம் தேர்தலுக்கு முன்னர் நாங்கள் முதலாவது வெற்றியைப் பெற்றிருக்கிறோம்." என்று அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது.

உதைத்தானே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிகாரர் படிப்பிச்சு சொன்னவங்கள் அந்தக் கிழவனுக்கு. 30 வருடத்துக்கு முன்னமே நிராகரிச்சதை இப்ப ஏற்றுக்கொண்டு தேர்தலில கூட்டமைப்பு போட்டியிடுறதன் மூலம் தியாகம் செய்த உறவுகளை கொச்சைப்படுத்தாதையுங்கோ எண்டு. கேட்டாங்களே, ஆளாளுக்கு




கதிரை, தம்பிக்கு அமைச்சர் கதிரை, மச்சானுக்கு அமைச்சர் கதிரை , நீயோ முதலமைச்சர் நானோ முதலமைச்சரெண்டு கொஞ்ச நஞ்ச கூத்தே போட்டவங்கள்.

ஆளாளுக்கு ஒதுக்கினது போதாதெண்டு, வேட்டியையும் தூக்கிக்கொண்டு, கோவிச்சுக் கொண்டு, வெளியிலபோறதும், இன்னும் கொஞ்சப்போர் விளக்குப் பிடிச்சுக்கொண்டு தேடிப்போறதெண்டு, கூத்தமைப்பு கூத்துக்களும் பஞ்சமேயிருக்கையில்லையாம். உப்பிடி வெட்டுக்குத்துப்பட்டு பெற்ற இட ஒதுக்கீட்டை நல்ல வரும்படிக்கு வித்துப்போட்டு காசு பார்த்த வித்துவான்களும் அதுக்குள்ள இருக்கினமாம்.

இப்ப வேட்பு மனுத்தாக்கல் செய்து முடிச்சாப்பிறகும், உவரை தோற்கடிச்சு அரசியல் அநாதையாக்குவனென்கிறார் ஒரு எம்.பி மற்றொருத்தரோ எங்கட ஆக்கள் தோத்தாலும் பரவாயில்லை உவரை தோற்கடிச்சு வீட்டுக்கு அனுப்புறன் பாருங்கோவெண்டு சவால் விடுகிறார். ஆனால் சவால் விட்டவரை அடுத்தமுறை எம்.பியாகவர விடக் கூடாதெண்டு சகபாடியள் மும்முரமாக நிக்கினம்.

எங்கட சிங்கக்கொடி காத்தவீரனை கேட்டால் எங்கட கட்சியில ஜனநாயகமிருக்கெண்டுறார். ஊரே நாத்தம் அடிச்சு அல்லாடேக்கை என்ர வீட்டு முத்தத்தில ரோசாப் பூ பூத்திருக்கு பாருங்கோவெண்ட பாணியில சம்பந்தமானவற்ரை கதைகிடக்கு. இப்ப கூட்டமைப்பின்ர அடுத்த கட்டம் யாருடைய கைக்கு வரப்போறதெண்டுதான் கேள்வி. கொழும்பா - யாழ்ப்பாணமா எண்டு நிழல் யுத்தம் நடக்குது. சரி சரி பார்த்துக்கொண்டிருப்பம். காலம் தெளிவா பதில்தரும்.

இஞ்சால, முள்ளிவாய்க்காலில நடந்த தியாகங்களை மறந்து, புனர்வாழ்வு பெற்ற பிறகு, தன்ர முகத்தில துப்புற மாதிரி அரசாங்கத்தோட ஒட்டி பிழைப்புவாதம் நடாத்தப்புறப்பட்ட சிலருக்கு, உறைக்கிற மாதிரி மஹிந்த அரசாங்கம் செய்தி சொல்லிப்போட்டுது. இந்தா பார் முதலமைச்சர் வேட்பாளரும் நான்தான், முதலமைச்சரும் நான்தான் என்று பீற்றித்திரிந்த தியேட்டர்காரரும் தன்னுடைய இருபது வருஷக் கனவும் கலைஞ்சுபோகுதே எண்டு வெதும்பி நிக்கிறாராம். இந்தப் பதவிக்காகத்தானே சொந்த இனத்தை காட்டிப் கொடுத்தன் கடைசியில ஒண்டும் இல்லாம வீதியில் விடப் போறாங்கள் போல என்ற பயம் பிடிச்சுட்டுதாம் அவருக்கு. எல்லாத்துக்கும் வைச்சார் மஹிந்த ஆப்பு. ஆளாளுக்கு போட்ட எலும்புத் துண்டை கடிச்சுக் கொண்டு மூலையில இருங்கோவெண்டு, குட்டி இருத்திப் போட்டார். மன்னாரில ஆடாத ஆட்டம் ஆடினவரின்ர நிலையும் அதே மாதிரித்தான் இப்ப கிடக்குதாம்.

அதுலயும் உந்த முன்னாள் பேச்சாளர் பாருங்கோ, ஊடகவியலாளர் மாநாட்டில ஒரே தலைவர் தங்க தலைமகன் எண்டெல்லாம் புலம்பித்தள்ளினவர். மனுசன் தன்னை பலி ஆடாக்கப்போறாங்களெண்டு தெரியாமல், நான் கையைப் பலப்படுத்துவன், அங்கத்துவ அட்டையை எடுத்துப்போட்டன் வீணைக்காரரை முதலமைச்சர் வேட்பாளர் எண்டு சொல்லேல்லை எண்டெல்லாம் முழாச்சி கடைசியில சாதாரண வேட்பாளர் சந்தர்ப்பத்தைக் கூட கொடுக்காமல் முதுகில குத்திப்போட்டாங்கள். தம்பி நீங்கள் எப்பவும் வாசத்துக்கு தேவையெண்டால் போடுற கருவேப்பிலை தான் சாப்பிடேக்கை எடுத்து எறிஞ்சுபோடடுத்தான் சாப்பிடுவாங்களெண்டு புரிஞ்சு கொள்ளுங்கோ.

அதிலயும் வீணைக்காரன் புதிதாக போடுற முழக்கம் "எங்கட நிலம் எங்களுக்கே" அடபாவியளே அதை சொல்லித்தானே 30 வருட அகிம்சைப் போராட்டமும், 30 வருட ஆயுதப் போராட்டம் நடந்தது. பின்ன சனம் என்ன சீனக்காரனுக்கெண்டே அடிபட்டது சத்தியமா கேக்கிறன். எல்லாத்தையும் கூடிநிண்டு அழிச்சுப் போட்டு இப்ப என்ன பாசம் வந்து "எங்கட நிலம் எங்களுக்னே" எண்டு துவங்கிறியள்.

"மத்தியல் கூட்டாட்சி என்றும் பிரிக்க முடியாத வடக்கு-கிழக்கு மாநிலத்தில் சுயாட்சி" எண்டுது. பிறகு அது பற்றி மூச்சுமில்ல. என்றுமே பிரிக்கப்படாத வட - கிழக்கு என்று சொல்லிச்சுது. அவங்கள் பிரிச்சாங்கள். கேட்டால் நான் என்ன செய்யிறது. அவங்கள் பிரிச்சுப்போட்டாங்கள் என்று சொல்லிச்சுது இப்ப அப்பட்டமாக வலி வடக்கில ஆறாயிரத்திற்கும் மேல சனத்தின்ர காணியளை பறிச்சு கொண்டிருக்கேக்க" எங்கட நிலம் எங்களுக்கே" எண்டு புறப்பட்டிருக்கு.

இந்த முறையும் கையைப் பலப்படுத்துங்கோ பலாலியில குடியேற்றுவனெண்டு சொல்லுது. அந்தாள் மேடையளில வீரமா இப்படி முழங்கேக்க அவரோட கூடித் திரியிற அள்ளக்கைகளே பரிதாபகரமாக அசட்டு சிரிப்பு சிரிக்கிறாங்கள். அவங்களுக்கே தெரியும் உது நடக்கப் போறதில்லை, உதுவெல்லாம் சும்மா கதையெண்டு.

அதுக்குள்ள காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை பக்கமா, கல்லுத்தோண்டின குவாரிப்பக்கமாக சனத்தை ஒரு கண்துடைப்புக்கு விட அவர் முற்படுகிறதா தகவல். அடுத்து ஒரு ஆமான சுனாமி வந்துதோ. உவங்கள் கல்லு வெட்டுறமெண்டு தோண்டி வைச்சிருக்கிற கிடங்குகளோட சேர்ந்து போகவேண்டியதாப்போம். முதலில மாகாணசபை பக்கமே எட்டிப்பார்க்காமலிருக்கலாமெண்டு இப்ப உறைச்சாறின கஞ்சி கதைதான்

என்னவோ நடக்குறது நடக்கட்டும். என்ன செய்யுங்கோ எண்டு சனத்துக்கு நான் ஒண்டும் சொல்லப்போறதில்லை. எல்லாம் முடியா நான் கேட்கிற கேள்விகளுக்கு எல்லாரும் பதில் சொல்ல தயாரா இருங்கோ.

## கேள்வி பதில்

**எஸ்.தர்சி, வட்டக்கச்சி, கிளிநொச்சி**

**கேள்வி : விக்கினேஸ்வரனுடன் பேசத் தயாரம் ஜனதிபதி**

**பதில் :** இது என்ன வேடிக்கை அது தானே ஏற்கனவே உள்ளால எல்லாம் பேசி முடித்தாச்சு. இனி என்ன பேச இருக்கு.

**பி.உமாலினி, செட்டிகுளம், வவுனியா**

**கேள்வி : வன்னியில இருக்கிற சுதந்திரக்கட்சி பெண் அமைப்பாளர் ஒருவர் தங்கட ஜனாதிபதி ஊனத்தையும், உயிரையும் தவிர இழந்தது எல்லாவற்றையும் திருப்பி தருவேன் என்று கூறுகிறாரே?**

**பதில் :** அந்த பெண் அமைப்பாளர் சுதந்திரக் கட்சியில் இணைந்து நான்கு வருடங்களாகி விட்டதென்கிறார். தனது கணவர் அரச ஆதரவு ஒட்டுக்குழுக்களால் கடத்தப்பட்டதாகவும் கூறி அனுதாபம் தேடி வருகிறார். அப்படி என்றால் அவருடைய கணவரை மீட்க ஜனாதிபதி உதவ மாட்டாராமோ?

**இ.பாஸ்கரன், வந்தாறுமூலை, மட்டக்களப்பு**

**கேள்வி : வடக்குத் தேர்தலில் வெற்றிபெற்றால் வடக்கையும் கிழக்கினையும் இணைக்க முடியுமென கூட்டமைப்பு கூறுகின்றதே? அது சாத்தியமானதா?**

**பதில் :** நிச்சயமாக முடியாது. அதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் தேவை. இனவாத அரசு அதற்கு அனுமதிக்கப்போவதில்லை.

(19ஆம் பக்கம் பார்க்க)

# நீதி கிடைக்கும் வரை ஓயாது தேடியவர்களின் வீரவரலாறு



முயற்சிகள் ஏதும் இன்றி முடங்கி மௌனமாக நீட்டிக்கிடக்கும் எந்த இனத்துக்கும் வலியவந்து நீதி தேவதை வரங்கள் ஏதும் தரப்போவதில்லை. உலகில் நடத்திமுடிக்கப்பட்ட இனப்படுகொலைகள் அனைத்துக்கும். இனச்சுத்திகரிப்புகள் அனைத்துக்கும் உரிய நீதி கிடைத்திருக்கா என்றால் இல்லை.

இனப்படுகொலைகளின் வடுக்களை தாங்கியமக்கள் ஓய்வின்றி எழுந்து நீதிக்கான தேடலை ஆரம்பித்தால் நிச்சயம் அது கிடைத்தே தீரும். அது இன்றோ நாளையோ. நாளை மறுநாளோ திடீரென நிகழ்ந்துவிடக்கூடிய ஒன்று அல்ல.

அதற்கான நீண்ட பயணங்கள் ஓய்வின்றி நிகழ்த்தப்படும்போது அது பல கதவுகளை திறந்துவைக்கும். நீதியின் கதவு உட்பட.

எல்லாவகையான கொடூரமான கொலைகளையும் செய்து முடித்துவிட்டு நீதியின் கண்ணில் இருந்து தூரச்சென்று ஒழித்திருந்த ஒரு போர்க்குற்றவாளியை. ஆண்டுகள்பல கடந்தபோதும் தேடிச்சென்று தூக்கிவந்து நீதிக்கு முன்னால் நிறுத்திய ஒரு தேசிய இனத்தின் உறக்கமில்லாத பயணம் பற்றியது இந்த ஆக்கம்.

உலகின் இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய இனப்படுகொலையாக கிட்லரின் படைகளால் மேற்கொள்ளப்பட்ட "யூதப்படுகொலை" யே ஆகும். அறுபது லட்சம் யூதமக்கள் விசவாயு அறைகளிலும், கொலைக்களங்களிலும், கடும்குளிரிலும், பசியாலும் கொலை செய்யப்பட்டார்கள். இந்த யூதப்படு கொலையில் முக்கியமானதும், மிகவும் கொடூரமானதும் "அவ்ஸ்விற்ஸ்" (Auschwitz) முகாமில் லட்சோபலட்சம் யூதப்பெண்கலையும், சிறுவர்களையும் விசவாயு அறைகளுக்குள் அடைத்து துடிக்கத்துடிக்ககொன்று எரித்தது ஆகும்.

மானுட வரலாற்றில் எப்போதுமே காணப்பட்டிராத இந்த இனப்படு கொலையை வடிவமைத்து முன்னின்று நடத்தியவன் 'அடோல்வ்ஏச்மென்' (Adolf Eichmann) என்ற ஜேர்மனிய தளபதி ஆகும். கொஞ்சம்கூட தயக்கமோ, சஞ்சலமோ இன்றி யூதர்களை புகையிரதங்களில் கொலைமுகாம்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தவன் இவன்.

1942ம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் அதிகூடிய அமெரிக்க மற்றும் கூட்டுபடைகளின் ஒன்றிணைந்த பலத்தின் முன்பாக "கிட்லரின்" கனவு சாம்ராஜ்யம் கலைந்து வீழ்ந்தவுடன் யூதப்படுகொலைக்கு பொறுப்பான "அடோல்வ் ஏச்மென்" னும் தனது உயிரை காத்துக்கொள்ள ஓடி ஒளியத் தொடங்கினான்.

அமெரிக்கா மற்றும் நேசநாட்டுப் படைகளால் பிடிக்கப்பட்ட ஜேர்மனிய தளபதிகள் "நூரன்பேர்க்" நகரில் அமைந்த நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, சுட்டும், தூக்கலிட்டும் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

நூரன்பேர்க் நீதிமன்றத்தில் பல ஜேர்மனிய தளபதிகள் ஒப்புதல் வாக்குமூலங்களையும் வழங்கினார்கள். அதில் மிகமுக்கியமாக "அவ்ஸ்விற்ஸ்" (Auschwitz) முகாமின் பொறுப்பாளரான தளபதி "ரொடுல்வ் கோய்ஸ்" என்பவர் இந்த படுகொலைகளுக்கான முழுஉத்தரவும் "அடோல்வ் ஏச்மென்" தான் தந்ததாக வாக்குமூலம் கொடுத்ததன் பின்னர் "அடோவ் ஏச்மென்" யூதப்படு கொலைகளுக்காக மிகவும் தேடப்படும் ஒருவரானார்.

முழு ஜேர்மனியும் கூட்டுப்படைகளினால் கைப்பற்றப்பட்ட சூழலில் கிராமங்களிலும், பண்ணைகளிலும் இந்த கொலைகார தளபதி ஒளித்திருந்தான். ஒருவாறாக 1948ல் இத்தாலியை வந்தடைந்து அங்கிருந்து "றிச்சார்டோ கெலிமன்" என்ற பொய்ப் பெயருடன் சிரியாநாட்டின் "டமாஸ்கஸ்" நகரில் சிறிய ஆயுதங்களை இறக்குமதி செய்பவனாக இருந்தான்.

ஆனால் யூதர்களுக்கான இஸ்ரேல்தேசம் உருவானவுடன் யூதப்படுகொலைகளின் சூத்திரதாரிகளை தேடி அழிக்கவும், பிடித்துக் கொண்டு இஸ்ரேலுக்கு கொண்டு வரவும் விசேட இஸ்ரேலிய பிரிவுகள் மோப்பம் பிடிக்கத் தொடங்கின.

விசவாயு அறைகளுக்குள் லட்சோபலட்சம் யூதர்களை கொன்றழித்த "அடோல்வ் ஏச்மென்" என்பவரையும் அவர்கள் தேடியலைந்து கொண்டிருந்தார்கள். இனி இங்கிருப்பது அவ்வளவு பாதுகாப்பானது இல்லையென்று புரிந்துகொண்டு 1950ம் ஆண்டு ஆர்ஜன்டீனவுக்குள் நுழைந்து கொண்டான். அப்போதைய ஆர்ஜன்டைனா அரசு வேறு பொய்ப் பெயர்களில் தப்பித்துவரும் ஜேர்மனிய தளபதிகளுக்கு ஒரு ஓதுங்கிடமாக இருந்தது.

அங்கு "கெலிமென்" என்ற பெயரில் ஒரு தொழிலாளியாக இவன் வாழத் தொடங்கினான். 1952ல் ஆஸ்திரியாவில் இருந்து தனது மனைவியையும் முன்று குழந்தைகளையும் ஆர்ஜன்டீனாவுக்கு வரவழைத்து குடும்பமாக வாழத்தொடங்கினான்.

ஆண்டுகள் பல கடந்தன. மொத்தத்தில் எல்லோரும் இந்த கொலைகாரனை மறந்துவிட்டிருந்தனர். ஆனால் வலிகளை சுமந்த யூத தேசமும், மக்களும் இவனை மறக்கவோ, மன்னிக்கவோ தயாராக இல்லை. எங்கோ ஒரு உலகமூலையில் "அடோல்வ்ஏச்மென்" என்ற மானுடஎதிரி பதுங்கி இருப்பான் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

தேடிக்கொண்டே இருந்தனர். ஒருநாளில் அதற்கு பலனும் கிடைத்தது. மெத்தனமாக இவன்போட்ட கடிதம் ஒன்று ஆஸ்திரியாவின் முத்திரை சேகரிக்கும் ஒருவருக்கு கிடைத்துப்போக அதை அவர் தனது யூதநண்பருக்கு காண்பிக்க "அடோல்வ் ஏச்மெனின்" புகலிடம் ஆர்ஜன்டீனாதான் என இஸ்ரேலுக்கு தெரிகிறது.

பிறகு தாமதிப்பார்களா என்ன? கணக்குத் தீர்க்கும் "ஒப்பிரேசன் ஏச்மென்" ஆரம்பமாகிறது. மொசாட் புலனாய்வு அதிகாரிகள் ஆர்ஜன்டீனாவுக்கு விரைகிறார்கள். ஏற்கனவே அங்கு இருந்த தகவல்களுடன் "அடோல்வ் ஏச்மென்" னை தேடிச்சலிக்கிறார்கள். இறுதியில் மார்ச்19ம் திகதி 1960ம் ஆண்டு இவனின் இருப்பிடத்தை அடையாளம் கண்டு இவனையும் காண்கிறார்கள்.

ஆனாலும் இவன்தான் அந்த வெறியன் என்று அடையாளம் படுத்தவேண்டிய தேவை உள்ளது. அதுவரைக்கும் அவனின் இடம் முழுநேரமும் இஸ்ரேலிய புலனாய்வு கண்கள் மேய்ந்து கொண்டே இருந்தன. எங்கே போகிறான். என்ன செய்கிறான். என்பன அனைத்தும் கண்காணிப்பில் இருக்கிறது. "அடோல்வ் ஏச்மென்' னை அடையாளம் கண்டு முன்றுநாட்களின் பின்னர் மார்ச் 21ம் திகதி மாலைப் பொழுதில் அவன் ஒரு பூச்செண்டுடன் வீட்டுக்கு செல்கிறான். அவனின்

குழந்தைகளும் மனைவியும்கூட நல்ல உயர்தர ஆடைகளுடன் அன்று காத்துநிற்கின்றனர். வீட்டுவாசலில் வைத்து "அடோல்வ் ஏச்மென்" தனது மனைவியிடம் அந்த பூச்செண்டை கொடுத்த பொழுதில் இவன்தான் அந்த கொலைகாரன் என இஸ்ரேல் உறுதி கொள்கிறது. ஏனெனில் அந்தநாள் "அடோல்வ் ஏச்மென்" னின் திருமணநாள் என்று இஸ்ரேலிய புலனாய்வு தகவல்கள் பதிந்திருந்தன.

தனது திருமணநாளின் 25வது வருட நிறைவுக்காக மனைவிக்கு கொடுத்த பூச்செண்டு ஒரு மிகப்பெரிய போர்க்குற்றவாளியை உறுதியாக அடையாளம் காண உதவியிருந்தது. இவன்தான் அவன் என எல்லாவகையிலும் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இனிமேல் எப்படியாவது இஸ்ரேலுக்கு கொண்டுபோக வேண்டும். அப்போது ஆர்ஜன்டீனாவில் இஸ்ரேலிய புலனாய் வாளர்கள் இயங்குவதும், இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டால் மரணதண்டனையோ. மிகநீண்ட சிறைவாசமோதான் கிடைக்கும்.

அப்படியான பொழுதில் அங்கு ஒரு போர்க்குற்றவாளியை கடத்தி இஸ்ரேலுக்கு கொண்டுவருவது என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாததாக இருந்தது. ஆனாலும் தமது உறவுகள் கதறிய இறுதிநேரக் கதறலுக்கு தீர்ப்பு எழுதும் துடிப்பும், ஆன்மவேகமும் எல்லா யூதமக்களிடமும் நிறைந்தே இருந்தது.

இஸ்ரேலில் இருந்து பல ஆயிரம்மைல் தூரத்தில் உள்ள ஆர்ஜன்டீனாவில் கைகளில் துப்பாக்கியோ வேறு எந்த ஆயுதமோ இன்றி அந்த போர்க்குற்றவாளியை கடத்தும் ஆபத்தான வேலைக்குள் இறங்குகின்றனர்.

1960ம்ஆண்டு மே 11ம் நாள் வீட்டுக்கு அருகான பாதையில் நடந்துகொண்டிருந்த உலகின் மிகமோசமான மானுட விரோதி வெறும்கைகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கடத்தப்படுகின்றான். கைகளும் கால்களும் கட்டப்பட்டு ஒரு வீடு ஒன்றின் அறையில் கிடத்தப்பட்டிருந்த "அடோல்வ் ஏச்மென்" மே 21ம் நாள் ஆர்ஜன்டீனாவின் "போனஸ் அயர்ஸ்" விமான நிலையத்தில் தரித்திருந்த இஸ்ரேலிய விமானத்தில் போதை ஏறி மயக்கமான விமானபணியாளர் என்று கூறப்பட்டு ஏற்றப்படுகின் றான்.

விமானநிலைய கட்டுப்பாட்டு அறையின் உத்தரவு கிடைத்து விமானம் மேலெழும்பி ஆர்ஜன்டீனாவின் வான்பரப்பை கடந்த பின்னரே இந்த வீரமிகு செயலை செய்தவர்கள் தங்களுக்குள் கைகுலுக்கி கொள்கின்றனர். மறுநாள் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் பிரதமர் பென்கூரியன் "அடோல்வ் ஏச்மென்" கைது செய்யப்பட்டு இஸ்ரேலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கிறார்.

1961ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் நாள் அடோல்வ் ஏச்மென்னுக்கு மீதான பதினைந்து குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் சுமத்தப்படுகின்றது. கொலை முகாம்களில் இருந்து தப்பியவர்கள் சாட்சியங்களாக உணர்ச்சியுடன் முன்வருகிறார்கள்.

1961ம்ஆண்டு டிசம்பர் 15ம் நாள் மனிதகுலத்துக்கு எதிரான செயல்களுக்காக அவனுக்கு மரண தண்டனை வழுங்கப்படுகிறது. 1962ம் ஆண்டு மேமாதம் 31ம் நாள் மனிதகுல விரோதியான அந்த கொலைகாரனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது.

பல லட்சம் மக்களை துடிக்கதுடிக்க கொன்று பின் அவர்களின் உடலை எரித்த அடோல்வ் எச்மென் என்ற இனப்படுகொலை குற்றவாளியின் மரணம் 23:58க்கு உறுதி செய்யப்படுகிறது. அதன்பின் அவனின் உடலை எரித்து அந்த சாம்பலை எடுத்துக் கொண்டு ஒரு படகு இஸ்ரேலின் கரையில் இருந்து வெகுதூரம் கடந்து செல்கிறது. இவனின் எஞ்சிய சாம்பல்கூட யூதமண்ணை தீண்டக்கூடாது என்பதற்காக ஒரு வாளிக்குள் வைத்து இஸ்ரேல் கடல் எல்லையை கடந்து கடலின் ஆழத்துள் எறியப்படுகிறது.

ஒரு மிகச்சிறய தேசிய இனம், தனக்கான நீதியை தானே தேடிய நிகழ்வு இது. காலமும், அசையும் வாழ்வியலும் மற்றவர்களை எல்லாம் மறக்கச் செய்துவிடும். ஆனால் உறவுகளை இழந்தவர்களும், வலிகளை சுமந்தவர்களும் ஒருபோதும் மௌனமாயிருக்கார்.

யூதர்கள் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும் கூட அமெரிக்காவின் உதவியுடன் 2000 வருடங்களுக்கு முன்னர் இழந்திருந்த தமது நாட்டை மீண்டும் உருவாக்கிக் கொண்டனர். அவர்கள் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழுவதற்கு சுதந்திரமும் இறைமையும் கொண்ட இஸ்ரவேல் என்ற தனியரசு அவர்களுக்கு கிடைத்தது. எனினும் தமது இனத்துக்கு நடந்த கொடூரங்களை மறக்கவோ. இன நல்லிணக்கம் என்னும் பெயரில் கொலையாளிகளை மன்னிக்கவோ அவர்கள் தயாராக இல்லை.

**ஆனால் இங்கே சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவில்லை. மறுபக்கத்தில் சாதாரண மனித உரிமைகள் கூட மதிக்கப்படாது இன்றும் சித்திரவதைகளும், இராணுவ மயமாக்கல்களும், நிலப்பறிப்புக்களும் நடைபெற்றக் கொண்டிருக்கும்போதே இன நல்லிணக்கம் என்னும் பெயரில் அனைத்தையும் மறந்து மன்னிக்கப் போகின்றார்களாம் சிங்கக் கொடி சாமும், கிறிக்கெற் வீரன் சுமாவும். அடிமைகளுக்கு எங்கே சுதந்திரத்தின் அருமை புரியும்.**

# தெலுங்கானா – ஈழத்தமிழர் தொடர்பில் இந்தியாவின் கொள்கைக்கு விழுந்த அடி

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக தெலுங்கானா உருவாகப்போவது உறுதியாகியுள்ளது. இந்திய மத்திய அரசினால் புறக்கணிப்புக்கு உள்ளாகிவரும் மாநிலங்கள் ஒருபுறம் இருக்க, இந்திய மத்திய அரசுக்கு சாமரம் வீசும் மாநில அரசு ஒன்றினை எதிர்த்து போராடிய ஒடுக்கப்பட்ட மக்கள் இன்று தமது போராட்டத்தில் கணிசமான அளவு முன்னகர்ந்துள்ளனர்.

முன்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படாது தனி நாடாக விளங்கிய தெலுங்கான தேசம், இந்தியாவின் போலியான வாக்குறுதிகளால் இந்திய தேசத்துடன் இணைந்தது, பேய்க்கு பயந்து பிசாசிடம் மாட்டிய கதையாக மாறியது.

தனிநாடாக தோற்றம் பெற்றிருக்க வேண்டிய தெலுங்கானா என்ற தேசம், இந்திய தேசத்தில் இணைந்ததால், சொந்த மொழிபேசும் மக்களாலே ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, ஏமாற்றப்பட்டு, உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மறுக்கப்பட்ட நிலையில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு முதற்படியான தனி மாநிலக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

1956 இல் மொழிகளை அடையாளமாகக் கொண்டு இனங்களின் அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, அந்த மாநில மக்களின் மொழி இன அடையாளங்கள், பண்பாடு என்பன காப்பாற்றப்பட வேண்டும், பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படை விதிகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் தெலுங்கான மக்களுக்கு அவை கிடைக்கவில்லை.

ஆந்திரா மாநிலத்தின் தெலுங்கான பகுதி கனிம வளமும், நீஉவளமும் அதிகமாக இருந்தும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பகுதியாகவே தெலுங்கான காணப்பட்டது.

ஆந்திராவின் தலைநகர் ஐதராபாத் உட்பட பத்து மாவட்டங்களைக் கொண்ட தெலுங்கான 1.14.840 சதுர கி.மீ பரப்பளவையும், மூன்றரைக்கோடி மக்கள் தொகையையும் கொண்டது (2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி).

ஆந்திரா மாநிலத்தின் 45 விகித காட்டுப் பகுதியை கொண்ட தெலுங்கானவில் இந்தியாவின் நிலக்கரி வளத்தின் 20 சதவிகிதம் உள்ளது. மேலும் அணுசக்திக்கு பயன்படும் யுரேனியம் கனிம வளமும் அதன் கரிம்நகர் மாவட்டத்தில் கண்டறியப் பட்டுள்ளது.




2009 ஆம் ஆண்டு உக்கிரமடைந்த போராட்டம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மிகத்தீவிரமானது. 300 இற்கு மேற்பட்டோர் தீக்குளித்தனர். பல நாட்களாக ஆந்திராவின் தலைநகரான ஐதராபாத்தின் இயக்கம் முடக்கப்பட்டது. பல வெளிநாட்டு நிறுவனங்களையும், சினிமாதுறையின் முதுகெலும்பையும் கொண்ட இந்த நகரத்தில் தங்கியிருந்த போது நானும் பல தடவைகள் பணிக்கு செல்ல முடியாது விடுதிக்கு திரும்பியிருந்தேன்.

2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரபு நாடுகளில் பரவிய ஜனநாயகப்புரட்சி தற்போது இந்தியாவின் மாநிலங்களிலும் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது. தற்போது எகிப்திலும், சிரியாவில் நடைபெற்றும் வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் மக்கள் புரட்சி மிக வேகமாக பரவக் காரணம் என்ன?

அதாவது தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியானது இன்றைய உலகின் இடைவெளியை மிகவும் குறைத்துவிட்டது. இணையத்தளம், முகநூல், செல்லிடத் தொலைபேசிகளில் உள்ள வசதிகள் ஊடாக மேற்கத்தைய ஜனநாயக நாடுகளில் அதன் மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றை உலகம் முழுவதும் உள்ள மக்கள் அறிந்து கொள்கின்றனர்.

எனவே நாமும் அவ்வாறு வாழவேண்டும் என்ற வேட்கை அவர்களிடம் தோன்றி வருகின்றது. இது தான் பல நாடுகளில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களை சிந்திக்கை வைத்துள்ளது.

எனவே தான் சீனா, இந்தியா மற்றும் சிறீலங்கா உட்பட பல நாடுகள் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை மட்டுப் படுத்தி வருகின்றன. எனினும் அதனை முற்றாக தடுக்கமுடியாத அளவிற்கு அவற்றின் பயன்பாடுகள் அன்றாட வாழ்வுடன் இணைந்துவிட்டது.

இன்று தெலுங்கானாவின் பிரிவு தமிழகத்திலும் பல கருத்து மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளது. தெலுங்கானவைப் போல இந்திய மத்திய அரசினல் தொடர்ந்து புறக்கணிப்புக்கு உட்பட்டுவரும் தமிழகம் தனது விடுதலைக்கான போரை ஆரம்பிக்க வேண்டிய காலம் வந்துவிட்டதாக தமிழக மக்கள் கருதுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கிடைக்கின்றன.

தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் பாக்கு நீரிணையில் சந்தித்துவரும் அடக்குமுறைகள், எதிர்கொள்ளும் தாக்குதல்கள், இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசு பின்பற்றிவரும் கொள்கைகள், சிறீலங்கா அரசுக்கு ஆதரவான அதன் போக்கு, வன்னியில் கொல்லப்பட்ட பல ஆயிரம் தமிழ் மக்கள் போன்ற சம்பவங்கள் இந்தியா மீது தமிழக தமிழ் மக்களுக்கு வெறுப்பை தோற்றுவித்து வருகின்றது.

தமிழகத்தின் தற்போதைய நிலை குறித்து மறுமலஉச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் ஒருவரின் கருத்தை இங்கு தருவது பொருத்தமானது.

தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய கட்சிகளிடம் தொலைநோக்கு பார்வை இல்லாததால் தமிழ் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். இலவசங்கள் மற்றும் பணம் கொடுத்து வாக்குகளை வாங்கி வெற்றியீட்டுவதே அவர்களின் கொள்கையாக உள்ளது.

எனவே இந்த கட்சிகளுக்கு மாற்றீடாக தமிழகம் மற்றும் உலகத் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு சமரசம் இன்றிப் போராட ஒரு மாற்று சக்தி வேண்டும். மாற்றம் என்பது தானாக நிகழாது. முதலில் நாம் மாற வேண்டும். நான் ஒருவன் மாறினால் மட்டும் மாற்றம் நிகழ்ந்துவிடுமா என்றால் கண்டிப்பாக நிகழும் என்பதே அவரின் கருத்து.

தெலுங்கானாவின் மாற்றம் இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது. மேற்கு வங்கத்தை பிரித்து கோர்காலாந்து தனி மாநிலம் அமைக்கக்கோரி கோர்கா ஜனமுக்தி மோர்ச்சா அமைப்பு ஓகஸ்ட் 10 ஆம் நாள் வரை தொடர்ந்து 8 நாட்களாக முழு அமைப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றது. இதனிடையே ஆந்திராவில் சிக்கியுள்ள தமிழர் நிலங்களை தாய் தமிழகத்தோடு இணைக்கும் போராட்டம் ஒன்றும் கடந்த 10 ஆம் நாள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றுள்ளது. தமிழர் எழுச்சி இயக்கம் அதனை ஏற்பாடு செய்திருந்தது. இந்தியாவில் ஏற்படும் இந்த மாற்றங்கள் சிறீலங்காவிலும் மாற்றத்தை உண்டுபண்ணும்.

சிறீலங்காவில் ஏற்படும் பூகோள மாற்றம் தனது மாநிலங்களில் பிரிவினைகளை தோற்றுவிக்கலாம் என்ற இந்தியாவின் கணக்கு தற்போது எதிர்மறையாக மாற்றம் காண ஆரம்பித்துள்ளது.

தமிழ் மக்கள் மீது சிறீலங்கா மேற்கொண்ட போருக்கான ஆதரவு, 13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் தம்ிழ் மக்கள் மீது திணிக்க முற்படும் அரைகுறைத் தீர்வு, அனைத்துலக அரங்கில் சிறீலங்காவை பாதுகாக்கும் இந்தியாவின் உள்நோக்கத்தின் அடிப்படைக் காரணிகள் தற்போது அதன் எல்லைக்குள்ளாகவே ஆட்டம் காண ஆரம்பித்துள்ளதுன. இந்திய மத்திய அரசு மீது விழப்போகும் இந்த நெருக்கடிகள் சிறீலங்கா அரசுக்கு அது வழங்கிவரும் ஆதரவுக்கு ஒரு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது உண்மை.

---

## மாகாண சபை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில் வாக்களிக்காது விடின் 13ம் திருத்தத்தின் கீழான மாகாண சபை முறையை இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தயாரில்லை என்ற செய்தியே சர்வதேசத்தை சென்றடையும் என்பதனால் இம் மாகாணசபைத் தேர்தல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடமாகாணசபை தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் யூலை 25ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 01ம் திகதி வரை கோரப்பட்டிருந்தன. இது ஓகஸ்ட்01 ஆம் திகதி 12 மணியுடன் வேட்புமனுத் தாக்கல் செய்யும் காலம் முடிவடைந்தது. தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுகந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன 05 மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளும் 10 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனு தாக்கல் செய்தன. இதில் இரண்டு அரசியல் கட்சிகளான எமது தேசிய முன்னணி, ஜாதிக சர்வத்தன பெரமுன மற்றும் முருகன் குமாரவேல் தலைமையிலான சுயோட்சைக்குழுவின் மனுக்களும் நிராகரிக்கப்பட்டது.

போட்டியிடும் கட்சிகளின் விபரம் பின்வருமாறு

01. சிறிலங்கா தொழிலாளர் கட்சி
02. இலங்கை தமிழரசுக் கட்சி
03. ஜனசெத பெரமுன
04. சோசலிச சமத்துவ கட்சி
05. ஐக்கிய தேசியக் கட்சி
06. மக்கள் விடுதலை முன்னணி
07. ஜனநாயக கட்சி
08. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி
09. ஜனநாயக ஐக்கிய முன்னணி
10. ஐக்கிய சோசலிச கட்சி
11. சிறிலங்கா மகாஜன கட்சி ஆகிய 11 கட்சிகளும் 09 சுயோட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 11 அரசியல் கட்சிகளும் 03 சுயேட்சைக்குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன. இவற்றில் 01 சுயேட்சை குழுவின் மனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

01. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு
02. ஜனசத பெரமுன
03. இலங்கை தமிழரசுக் கட்சி
04. இலங்கை தொழிலாளர் கட்சி
05. மக்கள் விடுதலை முன்னணி
06. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
07. ஐக்கிய தேசியக் கட்சி
08. ஐக்கிய சோசலிசக் கட்சி
09. ஜனநாயக தேசிய கூட்டணி
10. எக்சத் லங்கா பொதுஜன பக்சஷய
11. ஈழவர் முன்னணி உட்பட இரண்டு சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 அரசியல் கட்சிகளும் 03 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தன.

01. தமிழரசுக் கட்சி
02.ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
03. ஐக்கிய தேசியக் கட்சி
04. எக்ஸ்சத் லங்கா பொதுஜன பக்ஷய
05. மக்கள் விடுதலை முன்னணி
06. ஜனதெச பெரமுன
07. ஜனநாய தேசிக் கூட்டைமைப்பு
08. இலங்கை தொழிலாளர் கட்சி
09. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
10. ஐக்கிய சோசலிசக்கட்சி ஆகிய 10 அரசியல் கட்சிகளும் 03 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் 12 அரசியல் கட்சிகளும் 02 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தநிலையில் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

01. இலங்கை தமிழரசுக்கட்சி
02. எக்ஸ்சத் லங்கா பொதுஜன பக்ஷய
03. ஐக்கிய தேசியகட்சி
04. இலங்கைதொழிலாளர்கட்சி
05. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
06. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு
07. முஸ்லிம் விமுக்தி பெரமுன
08. மக்கள் விடுதலை முன்னணி
09. ஜாதிய்க பெரமுன
10. ஜனநாயக தேசிய கூட்டமைப்பு
11. ஐக்கிய சோசலிச கட்சி
12. ஜனநாயகக் கட்சி

ஆகிய 12 அரசியல் கட்சிகளும் 02 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றனர்.

வவுனியா மாவட்டம் 12 அரசியல் கட்சிகளும் 07 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்து இருந்தன. இவற்றில் 01 சுயேட்சை குழுவின் மனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

01. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு
02. ஜனசெத பரமுன
03. இலங்கை தொழிலாளர் கட்சி
04. எக்ஸ்சத் லங்கா மகா சபா
05. இலங்கை தமிழரசுக் கட்சி
06. மக்கள் விடுதலை முன்னணி
07. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
08. ஜனநாயகக் கட்சி
09. ஐக்கிய தேசியக் கட்சி
10. ஐக்கிய சோசலிசக் கட்சி
11. ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு
12. எக்ஸ்சத் லங்கா பொதுஜன பக்ஷய

ஆகிய 12 அரசியல் கட்சிகளும் 06 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன.

# பல வருடங்களாக நிருவாகம் இல்லாத வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

## தீருமா அவலங்கள்...? அதிகாரிகளே உங்கள் கவனத்திற்கு

சுமார் 8000 தொடக்கம் 10000 வரையான அங்கத்தவர்களைக் கொண்டிருக்கக் கூடிய வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் வடமராட்சிக் கிழக்கு பிரதேசம் முற்று முழுதாக குடியமர்ந்து 4 வருடங்களைக் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை நிர்வாகத் தெரிவு மேற்கொள்ளப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகிறமை தொடர்பில் அதன் அங்கத்தவர்கள் கவலை அடைகின்றனர். வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் முற்று முழுதாக போரினால் பாதிக்கப்பட்டு பல தடவைகள் இடம்பெயர்ந்தும், முற்று முழுதாக சொத்துக்களை இழந்துள்ள நிலையில் தற்போது அது 15க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு இயங்குகின்ற போதிலும் அது மக்களுக்கான முழுமையான சேவைகளை வழங்காது செயலிழந்து காணப்படுகிறது.

இதன் தலைவர் மற்றும் பணிப்பாளர்களாக சிலர் கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமானது அதன் அங்கத்தவர்களாலேயே நிர்வகிக்கப்பட வேண்டும். ஆனாலும் இதுவரை கூட்டுறவு உதவி ஆணையாளரால் தலைமையகத்திற்கும் அதன் கிளைகளுக்கும் நிர்வாகத் தெரிவு நடாத்தப்படாமை தொடர்பில் பெருமளவு அங்கத்தவர்கள் விசனமடைந்துள்ளதுடன், குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முறைப்படி தெரிவு மேற்கொள்ளப்படாவிடின் தாம் மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறையிடப்போவதாகவும் தெரிவிக்கின்றனர்

தற்போது வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான பல வாகனங்கள் தனியார் வீடுகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும். இச்சங்கம் பல மில்லியன் ரூபா நஸ்டத்தில் இயங்குவதாகவும் அங்கத்தவர்கள் கவலைப்படுகின்றனர் என அங்கத்தவர் ஒருவர் குறிப்பிட்டார்.

கூட்டுறவு உதவி ஆனையாளரே நடவடிக்கை எடுப்பீர்களா? தீராத அவலங்கள் அதிகாரிகளே உங்கள் கவனத்திற்கு.

# மதுபானச்சாலை ஆனைவிழுந்தான் சந்தியில்

பருத்தித்துறை ஆனைவிழுந்தான் சந்தியில் 100 மீற்றர் தூரத்தில் கள்ளுக்கடையும் 500 மீற்றர் தூரத்தில் வல்லிபுரக்கோவில் அமைந்துள்ள புனிதப்பிரதேசம் உள்ள நிலையில் மதுபானச்சாலை அமைப்பதற்கு அனுமதிவழங்கப்பட்டு மதுபானச்சாலை அமைக்கும் பணிகள் தனியார் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்தமாதம் வடமராட்சிக் கிழக்கின் நுழை வாயில் பகுதியில் ஒரு மதுபானச்சாலை அமைக்கப்பட்டு இயங்கிவருகின்ற நிலையில் அடுத்த மதுபான சாலை ஆனைவிழுந்தான் சந்தியில் அமைக்கப்படுவதால் சுமார் ஆயிரத்திற்க்கு மேற்பட்ட கள் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படக் கூடிய நிலையிலுள்ளனர். இப்பனங்கள் உற்பத்தியாளர்களின் தொழில் நலன் தொடர்பில் மதுபானச்சாலை அமைப்பதற்கு அனுமதியளிப்போர் அக்கறைகொள்வதில்லை. இதனைத் தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் இதற்கெதிராக போராட்டங்களை மேற்கொள்ளப்போவதாகவும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டுகொள்ளுமா மதுவரி திணைக்களம்

# முப்பது வருடங்களிற்க்கு மேலாக திருத்தப்படாத வரணி குடத்தனை வீதி

வரணிக்கும் குடத்தனைக்குமான குறுக்கு வீதி முப்பது வருடங்களிற்கு மேலாக திருத்தப்படாமையால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அப்பாதையை பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர். குடத்தனையிலிருந்து வரணிக்கு சுமார் 5 கி.மீ தூரத்திற்கு செல்லவேண்டிய இடத்திற்கு சுமார் 15 கி.மீற்றர் தூரம் சுற்றியே செல்லவேண்டியுள்ளதாகவும் தற்போது சைக்கிள் உழவு இயந்திரம் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் எதுவும் செல்ல முடியாதுள்ளதாகவும், மாரி மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் இப்பாதையினை சீர்செய்து தருமாறு குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளில் இருந்து கொடிகாமம், சாவகச்சேரி உட்பட வெளியிடங்களிலுள்ள சந்தைகளுக்கு மீன்களை கொண்டு செல்லும் மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். அதேவேளை நாகர்கோவில் எழுதுமட்டுவாழ் வீதியும் 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமலுள்ளது. ஆனாலும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மண் அள்ளி விற்பனை செய்யும் ஈ.பி.டிப்பியினர் தாம் விற்பனை செய்யும் மணலை கொண்டு செல்வதற்கு வசதியாக மக்கள் அதிகம் பயன்படுத்தாத வீதியின் ஒரு பகுதியை திருத்துவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நடவடிக்கை எடுக்குமா பருத்தித்துறை பிரதேச சபை?, வீதி அபிவிருத்தி அதிகார சபையும்?

## சிவனு லட்சுமணன் நினைவுரை

# மலையக தேசியம்: சவால்களும், தீர்வுகளும்

■ பிரபா

*(சென்ற மாதத் தொடர்ச்சி)*

உர மானியத்தின் முழுமையான பயனும் மலையகத் தமிழருக்கு கிடைப்பதில்லை. இடைத்தரகர்கள் உற்பத்தியின் முழு பயனை அடையவிடாது தடுத்து விடுகின்றனர். மலையகம் இலங்கையின் பிரதான சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக இருந்தபோதிலும் அதன் ஆதிக்கம் சிங்களவர்களின் கைகளிலேயே உள்ளது. அதேபோன்று மலையக பிரதேசத்திலேயே சிறந்த மாணிக்கக்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட போதிலும், அகழ்வு தொழிலாளர்களாகவே பெரும்பாலான மலையகத் தமிழர் உள்ளனர்.

அரச வேலை வாய்ப்புக்களை பொறுத்தவரையில் ஆசிரியர் தொழிலை தவிர ஏனைய அனைத்து துறைகளிலும் மலையகத் தமிழர் மீதான பாராபட்சம் தொடரவே செய்கின்றது. மேலும் தொழிற்சங்க, அரசியல் கட்சிகளின் செல்வாக்கும் அளவுக்கதிகமாகவே உள்ளன.

மலையகத் தமிழரின் பொது மொழியாக தமிழ் மொழி உள்ளதோடு, அவர்களுக்கே உரித்தான பொது பண்பாட்டு, கலாசார விழுமியங்களையும் பேணி வருகின்றனர். இவர்களின் பண்பாடும், கலாசாரமும் மொழியில் தங்கியுள்ளதோடு, மலையக மக்களை இணைக்கும் ஊடகமாகவும் தமிழ்மொழி உள்ளது. திருமணச் சடங்கு, கோவில் சடங்கு, குடும்பச் சடங்குகள், மலையக கூத்துக்கள், மலையக கோவில்களும் வழிபாட்டு முறைகளும், விளையாட்டுக்கள், நாட்டார் இலக்கியம் போன்றவற்றை பொதுக் கலாசாரத்திற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

நடைமுறையில் தமிழ்மொழி அமுலாக்கம் என்பது கேள்வி குறியாகவே உள்ளது. அரசியல் சட்ட பிரகாரம் குறித்த ஒரு பிரதேச செயலாகப் பிரிவில் 12வீத மக்கள் ஒரு மொழியை பேசுபவர்களாக இருப்பின், அந்த மொழியில் கருமங்கள் ஆற்றப்பட வேண்டும். ஆனால் மலையகத்திலோ அல்லது மலையகத்திற்கு வெளியில் (வடகிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த) தமிழர் 12வீதத்திற்கு மேல் வசிக்கின்ற எந்த பிரதேச செயலகப்பிரிவிலும் தமிழ் மொழியில் கருமங்கள் ஆற்றப்படுவதில்லை. குறிப்பாக தனித்தமிழ் பிரதேச செயலகங்களான - பிரதேச சபைகளான நுவரெலியா மற்றும் அம்பகமுவை சபைகள் இருந்தபோதிலும் அங்கு முழுமையான தமிழ் மொழி அமுலாகத்தை காணமுடிவதில்லை.

இலங்கையில் மலையகத் தமிழ் சமூகம் தவிர மற்றைய அனைத்து சமூகங்களுக்கும் தனியான பல்கலைக்கழங்கள் உள்ளன. ஆனால் மலையகத் தமிழர்கள் கல்வி கலாசார விழுமியங்களை பாதுகாத்து, முன்னெடுப்பதற்கும் உற்பத்தி முறைகளை விருத்தி செய்யகூடிய வசதியான தனியான பல்கலைக்கழகம் ஒன்று இல்லை. பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி ஜேர்மன் நாட்டு அரசாங்கத்தால் மலையக மக்களுக்காக உருவாக்கப்பட்டபோதிலும், அதன் முழு பயனையும் அடையும் வாய்ப்பு மலையக சமூகத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது. இதேவேளை மலையக பல்கலைக்கழகம் உருவாகும்வரை பல்கலைக்கழகத்தின் சமூகம் சார்ந்த பொறுப்புக்களை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியும், கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கல்லூரியும் பொறுப்பேற்க வேண்டும். இவற்றிலுள்ள ஆசிரியர்களுக்கு இதில் பெரும் பொறுப்பு உள்ளது. மலையகப் பாடசாலைகளில் பெரும் வளப்பற்றாக்குறை நிலவுவதுடன், மாணவர் இடை விலகலும் மலையகத்திலேயே அதிகமாக உள்ளது.

படித்த மத்தியதர வர்க்கத்தினரின் இடப்பெயர்வு, இந்திய ஊடுருவல் (மாற்று தெய்வ வழிபாட்டு முறைகளை புகுத்துதல், ஒப்பந்தங்கள் மூலம் மலையகத் தமிழரின் எண்ணிக்கை குறைந்தமை), சாதிய அமைப்புக்களின் சடுதியான மீள் நிலையாக்கமும் தொடர்ச்சியான செயற்பாடுகளும் மலையக தேசத்தின் தேசிய அரசியல் உருவாக்கத்தை பாதிக்கின்றன.

திட்டமிட்ட குடும்ப கட்டுப்பாடு இன்று மலையக தேசியத்திற்கு விடுக்கப்படும் பெரும் சவாலாகும். திட்டமிட்ட முறையில் எவ்வாறு மலையகத் தமிழ் இனம் அழிக்கப்படுகின்றது என்பது 2012 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் மூலம் அறிய முடிகிறது. கடந்த முப்பது ஆண்டுகளில் தேசிய ரீதியான சனத்தொகை அதிகரிப்பு 36.49 இருக்கும் அதேவேளை, மலையகத் தமிழரின் அதிகரிப்பு 2.8வீதம் ஆக மட்டுமே உள்ளது. இதுவே முஸ்லீம் சமூகத்தில் 78.6வீதமாகவும் சிங்கள சமூகத்தில் 38.2வீதமாகவும் இலங்கைத் தமிழரின் வளர்ச்சி 20.3வீதமாகவும் உள்ளன. ஏனைய சமூகங்களின் வளர்ச்சி 7.4வீதமாகவும் உள்ளன. இதேவேளை கடந்த பத்து ஆண்டுகளில் (2001 - 2011) ஆண்டுக்கான சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதம் தேசிய ரீதியில் 0.71வீதம் இருக்கையில் சிங்களவர் வாழும் அநுராதபுரம் மாவட்டத்தில் 1.33வீதமாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1.77வீதமாகவும் உள்ளன. மலையகத் தமிழர் மிகையாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் ஆகக்குறைந்த வளர்ச்சி வீதம் 0.05வீதமாகவும், பதுளை மாவட்டத்தில் 0.39வீதமாகவும் உள்ளன.

(தொடரும்)

# அவுஸ்திரேலியா தமிழர்களுக்கு "கூட்டு அரசியல் தஞ்சம்" தர வேண்டும்

– பரணி கிருஸ்ணரஜனி



இந்தோனேசிய கடற்பரப்பினூடாக அவுஸ்திரேலியா நோக்கி புறப்பட்ட எம்மவர்கள் 180 பேரின் நிலை என்னவென்று தெரியவில்லை. தினமும் இப்படியான செய்திகளை கேட்ட வண்ணமே உள்ளோம். அதிலும் குறிப்பாக இதில் பெண்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் என்று பலர் பயணித்த வேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. பெரும் துயர் தரும் நிகழ்வு இது. கொத்து கொத்தாக இன அழிப்பில் கொல்லப்பட்டவர்கள் போக தப்பியவர்களை இப்படி மீண்டும் வகைதொகையில்லாமல் இழப்பது எமது இனம் தொடர்பான இருப்பையும் அரசியல் எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறது. மே 18 இற்கு பிறகு இந்த அகதிகள் எவ்வாறு எதிர்கொள்ளப்படவேண்டும் என்றும் இவர்கள் அனைவரும்" இனப்படுகொலையில் இருந்து தப்பியவர்கள்" மற்றும் இவர்களுக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் "கூட்டு அரசியல் தஞ்சம்" வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி நாம் செய்த பல்கலைக்கழக ஆய்வை மையப்படுத்தி நிறைய இடங்களில் பேசியும் எழுதியும் முடித்தாகிவிட்டது.

ஆனால் அனைத்துலக சமூகத்தையும் மற்றவர்களையும் விடுவோம். எம்மவர்களே இதை இன்னும் புரியாததன் விளைவுதான் இந்த அனர்த்தங்கள் தொடர்வதற்கு காரணமாகும். இது எம்மவர்கள் தொடர்பான மனிதாபிமான பிரச்சினை என்பது ஒரு புறம் இருக்க எமது அடுத்த கட்ட ஜனநாயகப் போராட்டத்தின் ஒரு சிறப்பான - சாத்தியமான ஒரு வடிவமும் கூட என்பதை நம்மவர்கள் புரியாதது துரதிஸ்டவசமானது. எமது ஆய்வின் முடிவுகள் இனப்படுகொலையைச் சந்தித்த ஒரு இனத்தின் இருப்பு தொடர்பான மிக முக்கியமான கருத்துருவாக்கங்கள் அவை. மே 18 இற்கு பின்னான தமிழர் அரசியல் இருப்பு தொடர்பாக நாம் ஆய்வு செய்தபோதுதான் இந்த "கூட்டு அரசியல் தஞ்சம்" என்ற பதத்தை கண்டடைந்தோம். புலம் பெயர் தமிழ் சமூகம், அகதிகளின் தொடர் வருகை என்ற கூட்டிணைவு சிறீலங்காவில் எமது அரசியல் இருப்பு தொடர்பாக சில காத்திரமான செய்திகளை சர்வதேசத்தில் பதிவு செய்யும் என்பதை நாம் முன்பே கண்டடைந்தோம். சிறீலங்கா என்ற தேசத்திற்குள் எமக்கான தனித்துவமான அரசியலை செய்ய முடியாது என்ற பதட்டத்துடன் இருந்தபோதே இந்த கருத்துருவாக்கங்கள் எமக்கு நம்பிக்கையளிக்கும் ஒன்றாக இருந்தது. பூகோள அரசியலின் "கஸ்டடிக்குள்" வந்திருக்கிற சிறீலங்காவை மிரட்டும் சக்திகளாக - மேற்குலகின் துருப்பு சீட்டுக்களாக புலம்பெயர் தமிழ் சமூகமே இருக்கிறது. இந்த அடிப்படையில் பெருந்தொகையான எண்ணிக்கையில் அகதிகளாக தமிழர்கள் புலம்பெயர்வது சிறீலங்காவை பெரும் அச்சத்திற்குள் தள்ளியிருக்கிறது. அப்போதே நாம் கூறினோம். கடல்வழி பயணங்கள் தொடரும் என்று.. அத்தோடு முள்ளிவாய்க்கால் படுகொலைகளின்போது மௌனமாக இருந்த சர்வதேச சமூகத்திற்கு ஒரு வகையான நெருக்கடியை கொடுக்கும் செயற்பாடு இது. இதுவும் ஒரு வகையான போராட்டவடிவம்தான். ஆனால் தமிழ் ஊடகங்களோ - அரசியற்செயற்பாட்டாளர்களோ இதை உணர மறுக்கிறார்கள் அல்லது அடம்பிடிக்கிறார்கள்.

ஊடகங்கள் குழுவாத - குண்டுசட்டி அரசியலை ஓரங்கட்டிவிட்டு கால நீரோட்டத்தில் கலந்துகொண்டு சர்வதேச அரசியலில் தமிழர் தரப்பை ஒரு பேசும் சக்தியாக மாற்ற உழைக்க வேண்டும். இந்த அகதிகள் பிரச்சினையை ஒரு ஆயுதமாக நாம் கையிலெடுக்க வேண்டும். குறிப்பாக அவுஸ்திரேலிய மற்றும் கனடா வாழ் தமிழர்கள் இந்த பிரச்சினையை பன்முகப்படுத்த முடியும். தற்போது கூட சம்பந்தபட்ட நாட்டின் அதிகாரிகளுடன் எமது கருத்துருவாக்கங்களை முன்வைத்து யாரும் வாதாடுவதுபோல் தெரியவில்லை. இது தொடர்பாக பேசும் நிறுவனங்களுக்கு, சட்டத்தரணிகளுக்கு இப்படியான கருத்துக்கள் சமூகத்தில் உள்ளன என்றாவது தெரியுமா? என்பதும் சந்தேகமே.! எத்தனை முறை இன்னும் பதிவு செய்யப்போகிறோமோ தெரியவில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் இதை பதிவு செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இரண்டு கருத்துருவாக்கங்கள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். ஒன்று அவர்கள் அனைவரும் "இனப்படுகொலையில் இருந்து தப்பியவர்கள்". இரண்டு அவர்களுக்கு

> **இரண்டு கருத்துருவாக்கங்கள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். ஒன்று அவர்கள் அனைவரும் "இனப்படுகொலையில் இருந்து தப்பியவர்கள்". இரண்டு அவர்களுக்கு "கூட்டு அரசியல் தஞ்சம்" வழங்கப்படவேண்டும்.**

"கூட்டு அரசியல் தஞ்சம்" வழங்கப்படவேண்டும். ஏன் என்பதற்கான விளக்கத்தைத்தான் எமது ஆய்வில் விளக்கியிருக்கிறோம். முள்ளிவாய்க்காலில் உண்மையில் நடந்தது உயிர்களின் பலியெடுப்பு அல்ல. முள்ளிவாய்க்காலில் மனித உயிர்களுக்கும் அப்பால் இனம், மொழி, நிலம், பண்பாடு என்ற அடையாளங்கள் மீதான அழித்தொழிப்பே நடைபெற்றது. இந்த அடையாளங்களை தாங்கியவர்களாக, அந்த அடையாளங்களை தக்க வைப்பதற்காக முன்னின்று போராடியவர்களுக்கு தோள்கொடுத்ததற்காக அந்த மக்கள் அந்த நிலத்தில் வைத்தே அழித்தொழிக்கப்பட்டார்கள். எஞ்சியவர்கள் முடமாக்கப்பட்டு முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். தப்பியவர்கள்தான் இன்று ஒன்று சேர்ந்து குழுக்களாக பல முனைகளினூடாக அரசியல் தஞ்சம் கோரத் தொடங்கியிருக்கிறார்கள். யார் என்ன வியாக்கியானம் கூறினாலும் தஞ்சம் கோரியிருப்பவர்களுக்கு இருக்கிற ஒரே அடையாளம் "இனப்படுகொலையிலிருந்து தப்பியவர்கள்" என்பதுதான். நூற்றுக் கணக்கானவர்கள் ஒன்று சேர்ந்து குழுக்களாக பல முனைகளினூடாக அரசியல் தஞ்சம் கோரியிருக்கிற நிகழ்வு சொல்கிற மிகப் பெரிய உண்மை இது. ஏனெனில் இனம், மொழி, நிலம், பண்பாடு என்ற அடிப்படையிலேயே படுகொலை நிகழ்த்தப்பட்டது. அந்தப் பேருண்மையைத்தான் அன்று கனடாவில் தரையிறங்கிய 490 தமிழர்களும் இன்று அவுஸ்திரேலிய கடற்பரப்பில் மிதக்கும் தமிழர்களும் உலகத்திற்கு உரத்து அறிவிக்கிறார்கள் என்றுதான் நாம் பொருள் கொள்ள வேண்டும். போரில் குரூரமாகத் தோற்கடிக்கப்பட்டவர்களாக - தமது அடையாள நிலத்தை இழந்தவர்களாக - வாழ்வதற்கான நிலமற்றவர்களாக அவர்களது இருப்பு மாறியிருப்பதை அவர்களது "கூட்டு அரசியல் தஞ்சம்" அறிவிக்கிறது. ஒரு பெரும்பான்மை இனம் அரச உரிமையை வைத்து இறையாண்மை என்ற பெயரில் ஒரு எண்ணிக்கையில் சிறிய இனத்தின் மீது நடத்திய அழித்தொழிப்பு இது. அங்கு நடந்தது உண்மையில் உயிர்களின் பலி அல்ல. தமிழ் என்ற பண்பாட்டு நிலம் பறிக்கப்பட்டது. இனம் மொழி நிலம் பண்பாடு என்ற அடையாளங்கள் அழிக்கப்பட்ட ஒரு குழுமம் தனது வேர்களைத் தேடி அல்லது தனது வேர்களைத் தக்கவைப்பதற்காக அந்த அழிநிலத்திலிருந்து தப்பிய ஒரு பயணம்தான் மேற்படி நிகழ்வுகளிலுள்ள முக்கிய கூறு. அத்தோடு ஈழம் என்ற தேசம் குறித்த தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்ற அரசியல் தத்துவார்த்த பேருண்மைகளை உலகிற்கு ஓங்கி அறிவிக்கிற ஒரு அரசியற் செயற்பாடாகவும் இது இருக்கிறது. இதை தெளிவாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தமிழர் தரப்பு விளக்க வேண்டும். ஆச்சரியப்படும் வகையில் கனடாவில் அவுஸ்திரேலியாவில் குறிப்பாக தமிழர்கள் தரையிறங்கியிருக்கிற வன்கூவரில் மெல்பேணில் அகதிகள், புலம்பெயர் சமுகம் தொடர்பான பல பல்கலைக்கழக பீடங்களும் ஆய்வளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேற்படி கருத்தை கொண்டு சேர்க்க வேண்டும். அவர்களினூடாக கனடிய .அவுஸ்திரெலிய குடிவரவு அதிகாரிகளுடன் தொடர்பைப் பேணுவது இன்னும் சிறந்தது. போர் முடிவடைந்து விட்டது. இனி அகதிகளை ஏற்கத் தேவையில்லை என்று சிறீலங்காவிலிருந்து மட்டுமல்ல மேற்கிலும் சில கருத்துக்கள் உலாவருகின்றன.. எமது ஆய்வில் இது குறித்து தெளிவாக வரையறுத்திருக்கிறோம். முன்னையதை கழித்துவிட்டாலும் 2009 ம் ஆண்டு குறிப்பான மே மாதம் இறுதிவரையான முதல் ஐந்து மாதங்களில் ஏறத்தாழ 80000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளர்கள் என்று அனைத்துலக தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு இவை இனப்படுகொலை என்பதையும் ஓரளவு முரண்பாடுகளுடன் கருத்தளவில் எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் இனம் மொழி பண்பாடு என்பவற்றால் ஒரே அடையாளத்தை உடையவர்கள் என்பது இங்கு குறிப்பான கவனத்திற்குரியது. அவர்கள் ஏன் கொல்லப்பட்டார்கள்? இதற்கான விடையில்தான் இந்த கூட்டு அரசியல் தஞ்சத்தின் அடிப்படை மட்டுமல்ல அவர்கள் சார்ந்துள்ள இனத்தின் அடையாளமும் அவலமும் புதைந்திருக்கிறது.

தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்ற அரசியல் தத்துவார்த்த பிரச்சினைக்கும் அப்பால் இனம், மொழி, நிலம் பண்பாடு என்ற உள்ளார்ந்த அடிப்டையில் தமது சொந்த நிலத்தில் சுதந்திரமாக வாழ முற்பட்ட - எத்தனித்த ஒரு குழுமத்தின் பிரச்சினையாகவே சிறீலங்காவின் இன முரண்பாட்டை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லது அதன் ஆரம்ப புரிதல் அப்படித்தான் இருக்க வேண்டும். முள்ளிவாய்க்கால் படுகொலைகளை கவனமாக எதிர் கொள்ளும் ஒருவர் இதை சுலபமாக இனங்கண்டுகொள்ள முடியும். சிறீலங்காவில் தமிழர்கள் என்ற அடையாளத்தின் அடிப்டையில் இப்போது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அரசியல் தத்துவார்த்த சொல்லாடல்கள் மட்டுமல்ல இனம், மொழி, நிலம் பண்பாடு என்ற அடிப்படையே கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது. இந்த அடிப்படையில் இனம், மொழி, நிலம், பண்பாடு என்ற அடிப்படையில் அழித்தொழிப்பு நடைபெற்ற மண்ணில் அந்த அடையாளங்களுடன் எப்படி தொடர்ந்து வாழ முடியும்? அந்த அழித்தொழிப்பின் இலக்குகளாக - நேரடி சாட்சிகளாக எத்தகைய மனநிலையில் அங்கு தங்கியிருக்க முடியும்? இத்தகைய அழித்தொழிப்பு இனி அங்கு நடைபெறாது என்பதற்கு யார் உத்தரவாதம்? அழித்தொழிப்பின் சூத்திரதாரிகள் தண்டிக்கப்பட்டார்களா? குறைந்தது எச்சரிக்கையாவது செய்யப்பட்டார்களா? பொது மன்னிப்பு என்று அறிவிக்கப்பட்டு சரணடயக்கூறிய அரசு இதுவரை அனைத்து போராளிகளையும் விடுதலை செய்ததா? அவ்வளவு ஏன் புலிகளின் பணயக் கைதிகள் என்று விளிக்கபட்ட மக்கள் யாருடைய பணயக்கைதிகளாக முட்கம்பி வேலிக்குள் இப்போது கிடக்கிறார்கள்? இப்படி எண்ணற்ற கேள்விகளுக்கு சிறீலங்கா என்ற தேசத்தை இறையாண்மையுள்ள ஒரு தேசமாக

(19ஆம் பக்கம் பார்க்க)

# தாராண்மைவாதக் கோட்பாடு

## LIBERALISM / IDEALIST VIEW

A/L மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானம்

கே.எஸ்.இளங்கோ
B.A.PGDE(MERIT), DIP.IN.POLITICAL

16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் பரவலாக இடம்பெற்ற கைத்தொழில் புரட்சியை அடுத்து உருவான சக பொருளாதார நலன்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் முன்வைக்கப்பட்ட அரசின் தோற்றம். தன்மை பற்றிய கோட்பாடு தாராண்மை வாதக் கோட்பாடாகும். சொத்துரிமைக்கு எவ்வித வரையறையும். கட்டுப்பாடும் விதிக்காமல் தாம் விரும்பியபடி சொத்துக் களை அனுபவிக்க வாய்ப்பளிக்கும் கோட்பாடே இதுவாகும். இக் கோட்பாட்டினை முன்வைத்தவர்களில் ஜோன்ஸ்ரு வட்மில். அடம்ஸ்மித். பிஷர். மார்வில் போன்றோர் முக்கியமானவர்கள். இக் காலப்பகுதியில் ஐரோப்பியாவில் நிகழ்ந்த கைத்தொழில் துறையில் ஏற்பட்ட பாரிய வெளிப்படையான மாற்றமே கைத்தொழில் புரட்சியாகும். இதனை அடுத்து கைத்தொழில் துறை துரிதமாக வளந்த போதும் மூலதனம் முக்கியத்துவம் பெற்றது. இன் நிலையில் முதலாளித்துவ சமூகம் பொருளாதார ரீதியாக செல்வாக்கைப் பெற்றது. நிலமானிய சமூகம் தளர்ச்சியுற்றது.

இவ்வாறு 1600களின் பின்னர் ஐரோப்பியாவில் முதலாளித்துவ சமூகம் முக்கியத்துவம் பெற்ற நிலையில் அவர்கள் , தமது பொருளாதார நலன்களை அரசியல் ரீதியாகப்பேணிப்பாதுகாக்கும் வகையில் முன்வைத்த கோட்பாடு இதுவாகும். எனவே இக் கோட்பாடு முதலாளித்துவ சமூகங்களின் பொருளாதார நலன்களிற்கு தாராண்மை வாய்ப்பை வழங்கி அவற்றைப் பாதுகாக்கும் வகையிலே முன்வைக்கப்பட்டிருந்தது எனலாம். இதனால் இது முதலாளித்துவ சார்புக்கோட்பாடு எனவும் கண்டிக்கப் பட்டது.

தாராண்மைவாதிகள் அரசின் தோற்றம் பற்றி குறிப்பிடும் போது அரசு சமூதாயத்தின் படைப்பு என்றும் அது ஓர் பொதுநலஸ்தாபனம் என்றும் கூறினர். இதனை தாராண்மைவாதிகள் விளங்கும் போது ஆரம்பத்தில் மனிதன் குடும்பமாகவும். குடும்பங்கள் பல சேர்ந்து நிலமாகவும் குல மரவு குழுக்கள் பலசேர்ந்த கிராமமும். கிராமங்கள் பலசேர்ந்து நகரமாகவும். நகரங்கள் பலசேர்ந்து சமூகங்களாகவும் வளர்ச்சியுற்றபோது சமூகத்திலிருந்து பிறந்த தாபனமே அரசு என இவர்கள் கூறுகின்றனர். மனிதன் சமூகமாக ஒழுங்கமைத்தபோது சில பொதுவான தேவைகளை அடைந்து கொள்வதில் பிரச்சனைகள் தோன்றியது என்றும் அதற்காக சமூகம் ஒன்றுபட்டபோது பிறந்த தாபனமே அரசு என்று இவர்கள் கூறுகின்றனர்.

மனிதர்கள் பொதுநன்மைகளை சுமூகமாக அமைந்து கொள்ள முயற்சி செய்த போது பிறந்த தாபனமே அரசு என்றும் இதனால் அரசு சமுதாயத்தின் படைப்பு என்றும் கூறினர். எல்லோருக்கும் பொதுவான எல்லோரது நன்மைகளையும் பேணத்தாக்க பாரிய பொதுநல ஒழுங்கினை சமுகத்தில் நிலைப்படுத்துவதற்காக மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட தாபனமே அரசு என்கின்றனர். அரசு சமூதாயத்திலிருந்து தோன்றியிருப்பதாலும். சமூதாயம் குடும்பங்களை கொண்டிருப்பதாலும் குடும்பமே அரசின் ஆரம்பம் என்றும் அதுவே அரசின் மூலவேர் அல்லது ஆணிவேர் என்றும் கூறுகின்றனர். இவ்வாறு அரசு சமூகத்திலிருந்து தோன்றி சமூகத்திற்காக செயலாற்றுவதால் அதன் தன்மை ஓர் பொதுநலதாபனமே ஃ சேமநல அமைப்பு என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறு அரசு சமுதாயத்தின் படைப்பு என வலியுறுத்தும் லிபரல்வாதிகள் அதன் பொதுநல தன்மையினை பல்வேறு ஆதாரங்கள் ஊடாக விளக்கியிருந்தனர். அவையாவன

01. பொதுவிரும்பின் காவலன் / பொதுசித்தத்தின் காவலன்
02. பாரபட்சமற்றசேவை
03. சட்டம். ஒழுங்கைப்பேணல்
04. அரசு குடிமக்கள் தொடர்பு பெற்றோர் பிள்ளைகளை ஒத்திருத்தல்
05. அரசின் பாரிய பொதுநலசேவை
06. உரிமைகளும்.சுதந்திரங்களும் அனைவருக்கும் வழுங்கப்பட்டிருத்தல்

தாராண்மைவாதிகள் அரசின் பொதுநலத்தன்மையினை விளக்குவதற்காக அரசு பொது விருப்பின் காவலன் என்பதை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.அரசு பொதுச்சித்தம் விரும்பும் போது தோன்றி அது விரும்பாதபோது மாற்றப்படும் ஒன்றாக இருப்பதனால் பொதுநலனுக்கு முரணாக தொழிற்பட முடியாது என கூறிகின்றனர். பொதுச்சித்தம் என்பது பெரும்பான்மைச் சமூகத்தின் அரசியல் அபிப்பிராயமாகும்.பொதுச்சித்தம் மூலம் மக்கள் விரும்புவதை பேணி விரும்பாததை கட்டுப்படுத்துவதே அரசின் பணியாக இருக்குமென்றும் அதனால் அரசு ஓர் பொதுநலத் தாபனம் என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

மேலும் இவர்கள் அரசின் சேமநலத் தன்மையினை விளக்குவதற்காக அதன் பாரபட்சமற்ற சேவையினை மற்றொரு ஆதாரமாக கான்பிக்கின்றனர். அரசு சமூகத்திலிருந்து சமூகத்தினால் சமூகத்தேவைகளை அடைந்து கொள்வதற்காக நிறுவப்பட்டதாகும் .இதனால் அரசினது நோக்கம் சமூதாயத்தேவைகளை நிறைவேற்றி கொடுத்தலாகும். இவ்வாறு அரசு செயற்படும் போது சமூகத்தின் வாழும் எவர்மீதும் வேறுபாடோ. பாரபட்சமோ காட்டாதென்றும் மாறாக அது இனம் மொழி .சாதி.பால்.வர்க்கம்.கொள்கை.பிரதேசம்.சித்தாந்தம் முதலிய வேறபாடுகளை எதுவும் அற்ற வகையில் தனது சேவைகளை வழங்கும் என்றும் இதனால் அது ஓர் பொது நலத் தாபனம் என்றும் கூறுகின்றனர்.

மேலும் லிபரல்வாதிகள் அரசின் சமூநலத்தன்மையை விளக்குவதற்காக அதன் சட்டம் .ஒழுங்கை பேணும் செயற்பாட்டை காண்பிக்கின்றனர். சமூகத்தில் சட்டத்தையும். ஒழுங்கையும் பேணி அமைதியை நிலைநிறுத்தல் போன்றன அரசின் பிரதான பணியாகும். இதற்காகவே அரசு சட்டங்களை இயற்றுகின்றது. சட்டம் என்பது மனித நடத்தைகளை ஒழுங்கு படுத்தும் விதிகளின் தொகுப்பாகும். அரசின் சட்டம் எல்லோருக்கும் பெதுவானது. அனைவரதும் அடிபணிவை தூண்டக்கூடியது தண்டனை வழங்கும் அதிகாரம் உடையது.

அரசு . சமூதாய தேவைகளை நிறைவேற்றவும். ஒழுங்கையும். அமைதியையும் பேணவும். சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்தவுமே சட்டங்களை இயற்றுகின்றது. எனவே அரசின் சட்டம். ஒழுங்கு செயற்பாட்டின் மூலம் அது ஓர் பொதுநலதாபனம் என இவர்கள் கூறுகின்றனர்.

மேலும் இதே நோக்கில் தாராண்மைவாதிகள் பெற்றோர் பிள்ளைகள் தொடர்பினை அரசு குடிமக்கள் தொடரிற்கு சமமானது எனக்காண்பித்து அரசின் பொது நலத் தன்மையினை விளக்குகின்றனர். ஒரு குடும்பத்திலுள்ள பெற்றோர் தமது குடும்பத்திலுள்ள அனைவரிற்கும் தேவையான போது தேவையானதை வழங்கி வளர்ப்பது போல அரசும் தனது பிள்ளைகளாகிய குடிமக்கள் அனைவரிற்கும் தனது தேவையை வழங்கும் என்றும் இதன் பொழுது அரசு எவர் மீதும் வேறுபாடோ பாரபட்சமோ காண்பிப்பது இல்லை என்றும் அதனால் அரசு பொது நலத்தாபனமே என்றும் கூறுகின்றார்.

மேலும் இவர்கள் தாராண்மைவாத அரசின் பொதுநலத் தன்மையை வலியுறுத்தும் வகையில் பாரிய பொதுநல சேவையை ஆதாரமாகக் காட்டுகின்றனர். ஆரம்பத்தில் அரசு உருவான போது சட்டம் ஒழுங்கைப்பேணல் அதன் தலையாய கடமையாக அமைந்தது என்றும் ஏனைய பொதுத்தேவைகளை தனியாரும் .குழுக்களுமே வழுங்குகின்றனர் என்றும் காலப்போக்கில் சனத் தொகை அதிகரித்தது. தேவைகளும் அதகரித்தபோது தனியார் துறையினர் அவற்றை வழுங்குவதால் குறைபாடு எழுந்தது என்றும் இதனால் அர்சின் சேவை விரிவடைந்து பாரிய பொதுநல சேவையாக மாறியதால் ஓர் பாரிய பொதுநல கூட்டுத்தாபனம் என்ற நிலையை அடைந்ததும் என்றும் கூறுகின்றனர். இவ்வாறு அரசின் சட்டம். சேவை. ஒழுங்கு என்பதோடு கல்வி. சுகாதாரம். போக்குவரத்து. எரிபொருள். குடிநீர் என பல்வேறு தேவைகளையும் உள்ளடக்கி பாரிய பொதுநல சேவையாக மாறியதையே இவர்கள் படிமுறை வளர்ச்சிக்கோட்பாடு எனவும் கூறுகின்றனர்.

மேலும் தாராண்மைவாதிகள் அரசின் பொது நலத்தன்மையை விளக்குவதாக தாராண்மைவாத ஜனநாயகவாத நடைமுறையில் மனிதர்கள் அனைவருக்குமான உரிமைகளையும். சுதந்திரங்களையும் காட்டுகின்றனர். பேச்சு சுதந்திரம். எழுத்து சுதந்திரம். கருத்துக்களை வெளியிடுதல். கூட்டம்கூடல். தெடர்புசாதனமாகியன அனை வருக்குமாக வழுங்கப்பட்டிருப்பதனால் அரசு தவறிளைக்கும் போது அதனை கண்டிக்கவும். தட்டிக்கேட்கவும். விமர்சிக்கவும் முடியும் என்று இவை ப்யனளிக்காது போனால் காலத்துக்கு காலம் நடைபெறும் தேர்தல்களின் மூலம் அரசைப் பிரதிநிதிப்படுத்தும் அரசாங்கத்தை மாற்ற முடியும் என்றும் இதனால் அரசு ஒருபொழுதும் பொது நலனுக்கு முரணாக செயற்படவேமாட்டாது என்றும் இவர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறு 1800களில் வளர்ச்சிபெற்ற தாராண்மை வாதக்கோட்பாடே இன்று வரை செல்வாக்குப்பெற்றுள்ள பலமான கோட்பாடாக அமைந்துள்ளது. உலகின் இறைமை மிக்க சுமார் 192 நாடுகளில் 150மேற்பட்ட நாடுகள் இத் தாராண்மைவாத கோட்பாட்டினையே பின்பற்றிவருகின்றன. இக்கோட்பாடானது வரையறை அற்ற சொத்துரிமையை வலியுறுத்தியதாலும் முதலாளித்துவ சமூகத்தின் மீதான கட்டுப்பாடுகளை விதிக்காமையினாலும் முதலில் முதலாளித்துவ சார்புக்கோட்பாடு என்றே கண்டிக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் அக்கோட்பாடு பல்வேறு சமூதாய நலத்திட்டங்களையும் உள்வாங்கி நவீனத்துவம் பெற்றதால் நலன்பேணும் முதலாளித்துவம் எனப்பட்டது. இன் நிலையில் 20ஆம் நூற்றாண்டில் புதிய உலக ஒழுங்கமைப்பு நலன்பேணும் முதலாளித்துவம் எனப்பட்டது. என்ற நிலையினை அடையலாயிற்று. தற்போதைய நிலையில் தாராண்மைவாதப் கோட்பாட்டில் மற்றொரு வளர்ச்சி நிலையாக உலகமயமாதல் தடைகளற்ற முதலீட்டுப்பாய்சல் என்பன முன்வைக்கப்பட்டுள்ளது.

### பாசிஸ கோட்பாடு
FASCIST THEORY

பாசிஸம் என்பது உண்மையில் ஒரு கோட்பாடல்ல. ஏனெனில் அதற்கான கோட்பாடுகளோ. வரைவிளக்கணங்களோ முன்கூட்டியே அறிஞர்களால் முன்வைக்கப் படவில்லை. ஆனால் இன்று அது கோட்பாடு என்ற நிலையில் வைத்தே பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. எனவே கோட்பாடுகள் எதுவுமற்ற ஆட்சிமுறையே பாசிஸமாகும்.

இலத்தீன் மொழியில் பாசீஸம் என்பது உறுதியான குழுக்கூட்டம் என கூறப்படும். அதுவே பின்னர் இத்தாலியில் உருவான முசோலினியின் பாசீஸ இயக்கத்தை குறிக்கவும். சர்வாதிகார அரசை குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது. எனவே பாசிஸம் என்பது கொள்கையோ. கோட்பாடோ அற்ற ஓர் ஆட்சி முறையாகும். 20ஆம்நூற்றாண்டின்முன்னரைப்பகுதியல்இத்தாலியை ஆண்ட பெனிற்றோ முசோலினியும். ஜேர்மனியை ஆண்ட அடால்வ் ஹிட்லரும் எதனைப்பேசினார்கள்? எதனைச் செய்தார்கள்? எவ்வாறு நடந்துகொண்டார்கள்? என்பது பற்றி ஒரு ஆய்வே ஒரு பாசிஸமாகும். ஆகவே இரு உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியல் ஐரோப்பாவில் (1918 - 1945) ஹிட்லரும். முசோலினியும் மேற்கொண்டிருந்த செயற்பாடுகளே பாசிஸம் ஆகும்.

பாசிஸம்வலதுசாரிசர்வாதிகாரம்.வலதுசாரிதீவிரவாதம் எனவும் அழைக்கப்பட்டது. மைக்கைவர் என்பவர் பாசிஸம் பற்றிக்கூறுகையில் தாராண்மைவாதம் என்பது ஜனநாயகம். தனிமனிதவாதம் என்பவற்றில் கூட்டுஎனில் பாசிஸம் எதேச்சதிகாரம். தனியாள் முதன்மைவாதம் என்பவற்றின் கூட்டு ஆகும் என கூறியிருந்தார்கள். பாசிஸம் ஓர் சர்வதிகார ஆட்சிமுறையை குறிப்பதாகும். அது ஒரு பலமிக்க தலைவனின் கீழ் அல்லது குழுவின்கீழ் ஆட்சி அதிகாரம் பிரயோகிக்கப்படுவதையே வலியுறுத்துகிறது எனலாம்.

(தொடரும்)

# விடியல்?

விடியலுக்காக
தூங்காது ஏங்கும்
எம் விழிகள்
விடிவைப் பாராதே
விடைபெற்று விடுமோ?
விடிவெள்ளி எங்கே?
விரைந்து செல்ல அங்கே
விடைகொடு இறைவா- நாம்
விடைபெறமுன்னே!
நாளையே விடைபெற
நாம் தயார் - ஆனால்
நாளை வரும்
நம் சந்ததிக்காவது
நல்வாழ்வு கிட்டுமா
நம் தேசத்தில்?
தனிநாடு கேட்கவில்லை
தகராறும் செய்யவில்லை
தனிவீட்டைத்தானே
கோருகிறோம்...
தரமறுப்பது ஏனடா?
தயவுகூர்ந்து சொல்லடா!
கண்மூடும் முன்பே
கட்டப்பட்டது கல்லறை
அதுதான் நாம் வாழும்
லயன் அறை -
கடவுளே! நீயாவது சொல்
மாறாதா எம் வாழ்வின்
தேய்பிறை?

– கவிஞர்: ரா

# முள்ளிவாய்க்கால் முற்றுப்புள்ளியல்ல...

பனங்காடும், வயல் வெளிகளும்
பரந்துகிடக்கும் ஊரது.
நீலக்கடல் அலை தாலாட்டும்
நிர்மலமான நிலமது

பனங்கிழங்கும், பனாட்டும்
பஞ்சமின்றிக் கிடைக்கும்.
பெருங்கடல் மீனும், நந்திக் கடல்
நண்டும், இறாலும்
நாள்தோறும் இங்கு நயமாகக் கிடைக்கும்.
காளி கோவிலில் கட்டுக் கேட்பவர்கள்
திங்களும், வெள்ளியும்
திரளாகக் கூடுவர்

வடிவேலு குஞ்சையாவின்
நேசன் மணம் முடித்ததும்
இம் மண்ணில்தான்.
உறவுகள் சூழ தட்டிவானில் சென்று
மணமக்களை வாழ்த்தியது
நெஞ்சப் பசுமையில்
இன்றும் நிறைந்து கிடக்கின்றது

குஞ்சி அம்மாவின் செல்லன் தம்பியும்
கனகசபை அண்ணாவின் நஞ்சனும்
வாழ்க்கைத் துணையோடு
இணைந்தது இம்மண்ணில்தான்

சோமண்ணையின் தங்கை நிர்மலா
கரம்பிடித்ததும் இவ்வூரில்தான்.
காலபோக நெல்லும்,
பட்டை இறைப்பு வெங்காயமும்,
பச்சைப்பசேல் என்ற கீரையும்
பசுமை மாறா புண்ணிய பூமி இது
அமைதியாக, பசுமையாக,
புன்னகை முகத்துடன் பூரித்த மண்
2009 வைகாசியில்
இருண்ட முகமாகியது

எம் இனத்திற்கு நடந்த அநீதி கண்டு
குமுறி அழுதது
இம் மண்ணில் நம் இனம் குதறப்பட்ட
கொடூரத்தை என்னால் எழுதமுடியாது
கை நடுங்குகிறது,
கண்ணீர் வழிகிறது,
நெஞ்சு கனத்து
தொண்டை அடைக்கின்றது.

58, 77, 83 இவற்றோடு
2009ம் சேர்ந்ததோ?
நீண்ட பெருமூச்சோடு
இறுதி வரிகளை
இறுக்கமுடன் எழுதுகின்றேன்.
முள்ளிவாய்க்காலோடு எம்முழு வீரமும்
மடிந்து போகவில்லை

எம் விடுதலைக் கனவும்
முடிந்து போகவில்லை
முள்ளிவாய்க்கால்
முற்றுப்புள்ளியல்ல 'கம'.

– முல்லை சதீஸ்

# "ஒரு பலத்தின்"

## இருப்பின் மௌனம் பற்றிப் பேசுதல்

ஓரினத்தின் பெரும் சிதைவுகளும்
ஓரினத்தின் உருக்குலைவுகளும்
ஓரினத்தின் ஓரவஞ்சகத் தரப்படுத்தல்களும்
எத்தனை காலங்களுக்குத்தான்
நீண்டு செல்ல முடியும்......?

இழப்புகள் எப்பொழுதும்
எங்களுக்கு மட்டுமே சர்வசாதாரணமாக
அது இப்பொழுதும்தான்

இன அறுவடையில்
சிக்கித் திக்கு முக்காடி
சீர்குலைந்து
எஞ்சிய நெல்போல்
இயந்திரச் சப்பல்களுக்குள் அகப்பட்டு
நிர்வாணமாக்கப்பட்டிருக்கிறோம்

நில அறுவடையும் முக்கியமாகி
மூச்சுக்காட்ட முடியாமல்
முழுசும் முழுமனிதராகவே
இன்றும் நாங்கள்

இருந்த இடம்
அடைக்கலம் புகுந்த இடம்
என்று
எங்கிருந்தும் விரட்டப்பட்டோம்
எப்பொழுதுமே அசைக்க முடியாமல்
எப்பொழுதுமே அழிக்க முடியாமல்
இத்தனை காலங்களாக
எங்களிடமே இருந்து விட்ட
அந்த "ஒரு பலத்தின்"
இருப்பின் மௌனம் பற்றி
தேடத்தொடங்கியிருக்கிறோம்
இப்பொழுது தரையில் சிதைபட்டதையும்
கடலில் கலைபட்டதையும்
ஆகாயவழி விழுந்த ஒப்பாரிகளையும்
நேருக்கு நேராய் நெஞ்சு நிமிர்த்தி
அள்ளித் தூர எறிந்ததெல்லாம்
அந்த "ஒரு பலம்" தான்!
இன அறுவடையும்
நில அறுவடையும்
இனியும் தொடருமாப் போலவே
நீண்டு வந்து அச்சுறுத்துகின்றன
பேரினப் பேய்களின் கரும் நாக்குகள்.....!
ஆதலால்
"ஒரு பலத்தின்"
இருப்பின் மௌனம் பற்றி
தேடத்தொடங்கியிருக்கிறோம்
இப்பொழுது......!

– சமரபாகு சீனா. உதயகுமார்



# இது கனவான்களின் ஆட்டமா?

## விளையாட்டு

- விஷ்வா

கனவான்களின் விளையாட்டு என அழைக்கப்படும் கிரிக்கெட் இன்று அதன் புனிதத்தன்மையை போட்டிகளில் நடைபெறும் சூதாட்டம் காரணமாக இழந்து விட்டது என்பது நாம் அறிந்தது தான். ஆனாலும் இந்தக் கட்டுரை சூதாட்டம் குறித்துப் பேசப் போவதில்லை. மாறாக துடுப்பாட்ட வீரர்களில் சிலர் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்கும் சந்தர்ப்பங்களில் மைதானத்தை விட்டு உடனடியாக வெளியேறாது மூன்றாவது நடுவரின் தீர்ப்பை எதிர்பார்த்து அவர் அறிவித்ததன் பின்னரே வெளியேறுகின்றனர்.

இவ்வாறான சில சந்தர்ப்பங்களில் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரைப் போலவோ அல்லது 2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கை அணிக்கெதிரான ஆட்டம் ஒன்றில் அவுஸ்ரேலிய வீரர் அடம் கில்கிறிஸ்ட் மைதான நடுவரின் தீர்ப்பை எதிர்பார்க்காமல் ஆடுகளத்தை விட்டு வெளியேறியமை போலவோ சர்வதேச வீரர்கள் பலராலும் நடந்து கொள்ள முடிவதில்லை. ஆனாலும் இவ்வாறு கில்கிறிஸ்ட் வெளியேறியதை அன்றைய அவுஸ்ரேலிய அணியின் தலைவர் றிக்கி பொண்டிங் பாராட்டாமல் அச்சமயத்தில் நானாக இருந்திருப்பின் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியிருப்பேன் என்று தனது கனவான் குணத்தை(?) வெளிப்படுத்தி மூக்குடைபட்டுப் போனமையும் நினைவுக்கு வருகின்றது.



இதுகுறித்து தற்போது நான் குறிப்பிடுவதற்கான காரணம் இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டியில் அவ்வாறானதொரு சர்ச்சை நடைபெற்று முடிந்திருக்கிறது. அவுஸ்ரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் பிரட் ஹடின் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சனின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிறையரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்த போதிலும் மைதானத்தை விட்டு வெளியேறவில்லை.

தற்போது கிரிக்கெட்டில் பந்து துடுப்பில் பட்டதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் டி.ஆர்.எஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதால் இவ்வகையான ஆட்டமிழப்புகளுக்கான தீர்வு உடனடியாகவும் இலகுவாகவும் கிடைத்து விடுகிறது. அந்தவகையில் மூன்றாவது நடுவர் மூலம் பிரட் ஹடின் ஆட்டமிழந்தார் என்று அறிவித் பின்னரே அவர் பவிலியன் திரும்பினார்.

ஒரு பிடி எடுக்கும் போது பந்து தரையில் பட்டதா? இல்லையா? என்பது மாதிரியான சந்தேகம் வருமாயின் அது குறித்து மூன்றாவது நடுவரிடம் தீர்ப்புக்கு விடுவதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் துடுப்பில் பந்து பட்டால் அது துடுப்பாட்ட வீரருக்கு கட்டாயம் தெரிந்தே இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அதனை மூன்றாவது நடுவரிடம் தீர்ப்புக்கு விடுவது கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில் ஓர் அநாகரிகமான செயலாகவே அது நோக்கப்படுகிறது. அதனால் தான் பிரட் ஹடினின் செயல் குறித்து முன்னாள் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகப் பந்து வீச்சாளர் மைக்கல் ஹோல்டிங் தனது அதிருப்தியை வெளிப்படுத்தி இருக்கிறார்.

டி.ஆர்.எஸ் தொழில்நுட்பத்தின் மூலம் பந்து துடுப்பில் பட்டதா? இல்லையா? என்பதை அறிய முடிந்தாலும் அத்தொழில்நுட்பம் மூலம் எல்.பி.டபிள்யூ ஆட்டமிழப்புக்கான தீர்ப்புக்களை துல்லியமாகக் கணிப்பிட முடியாது என்பதனால் இந்தியா உட்பட கிரிக்கெட் விளையாடும் நாடுகள் சில இதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன. இருப்பினும் சர்வதேச கிரிக்கெட் சபை ஒரு கிரிக்கெட் தொடர் தொடங்குவதற்கு முன்பு அவ்விரு நாடுகளும் பூரண சம்மதம் தெரிவித்தாலே அத்தொடரில் டி.ஆர்.எஸ் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி கொடுத்து வருகின்றது.

எது எப்படியோ கனவான்களின் விளையாட்டு என அழைக்கப்படும் கிரிக்கெட்டில் ஒருவீரர் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழப்பதை டி.ஆர்.எஸ் தொழில்நுட்பத்தின் மூலம் உறுதிப்படுத்தி கொள்வதே கிரிக்கெட்டின் கண்ணியத்தை குறைக்கும் செயலாகவே கருத வேண்டி உள்ளதென்றால் அது மிகையில்லை.




## மன்னிக்க வேண்டுகிறேன்

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் அதிக பணத்தை வருமானமாகப் பெறும் சபையாக விளங்கி வருகிறது. அங்கு ஏனைய விளையாட்டுக்களுக்கு இல்லாத மவுசு கிரிக்கெட்டுக்கு உண்டு. 1983ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற மூன்றாவது உலகக்கிண்ண ஒருநாள் போட்டியில் கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி கிண்ணம் வென்றதோடு அதன் தாக்கம் இன்னும் அதிகரித்திருந்தது. சனத்தொகையில் சீனாவுக்கு அடுத்த நாடாக விளங்கும் இந்தியாவில் அதிகப்படியான மக்கள் கிரிக்கெட் மோகம் கொண்டிருப்பதில் வியப்பேதுமில்லை. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் எந்தவொரு செயற்பாடும் பணத்தை சம்பாதிப்பதற்கான வணிக நோக்கமாகவே இருந்து வருகின்றது. இதற்கு நல்ல உதாரணம் ஐ.பி.எல் போட்டிகள்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஏதாவது ஒரு பிரச்சினை நடைபெற்றால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதில் எடுக்கவுள்ள நடவடிக்கைக்கையை பொறுத்தே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சர்வதேச கிரிக்கெட் சபை தனது இறுதித் தீர்மானத்தை எடுக்கின்ற ஒரு துரதிஸ்ட நிலையும் காணப்படுகின்றது. அதனால் தான் சர்வதேச கிரிக்கெட் சபையை. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டினை முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் சிலர் விசனத்தோடு வெளிப்படுத்தி இருந்தனர். இதனால் பெரும்பாலான கிரிக்கெட் சபைகள் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் முரண்பட்டுக்கொள்ள விரும்புவதில்லை.

இந்நிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் புதிய தலைமை நிறைவேற்று அதிகாரியாக அண்மையில் கரூன் லோகார்ட் தெரிவு செய்யப்பட்டார். இவர் முன்னதாக சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக இருந்தவர். அச்சமயம் அவர் எடுத்திருந்த சில அதிரடி நடவடிக்கைகள் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு உவப்பானதாக இருக்கவில்லை. குறிப்பாக சர்வதேச கிரிக்கெட்டின் எதிர்காலப் போட்டி அட்டவணை தயாரிக்கும் பொழுது ஐ.பி.எல் போட்டிகள் நடைபெறும் காலத்தில் சர்வதேச தொடர்கள் நடைபெறும் வகையில் போட்டி அட்டவணையைத் தயாரித்தது மற்றும் கிரிக்கெட்டில் டி.ஆர்.எஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதை ஆரம்பம் முதலே எதிர்த்து வரும் இந்தியா அதனை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அதனை நீக்காது ஒரு கிரிக்கெட் தொடர் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளும் விரும்பினால் அதனை நடைமுறைப்படுத்தலாம் என்று தீர்மானித்தமை ஆகிய இரண்டு விடயங்களையும் சுட்டிக்காட்டலாம்.

இவற்றைக் கருத்திற்கொண்டு மற்ற நாடுகளின் கிரிக்கெட் விடயத்திலும் மூக்கை நுழைக்கும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையிடம் தற்போது கரூன் லோகார்ட்டை அப்பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வாணவேடிக்கை நாயகர்கள்



இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் பல்லேகலவில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணியின் திஸார பெரேரா ஒரு ஓவரில் 35 ஓட்டங்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். ஆனாலும் ஒருநாள் போட்டிகளில் ஒரு ஓவரில் தென்னாபிரிக்காவின் ஹேர்ஷல் கிப்ஸ் பெற்ற 36 ஓட்டங்களே உலக சாதனையாக இருக்கின்றது. கிப்ஸ் இந்தச்சாதனையை 2006ஃ07 காலப்பகுதியில் நெதர்லாந்து அணிக்கெதிராக ஆறு சிக்ஸர்கள் அடித்து நிகழ்த்தி இருக்கின்றார். திஸார பெரேரா ஐந்து ஆறுகள், ஒரு நான்கு, ஒரு வைட் என 35 ஓட்டங்களை றொபின் பீற்றர்ஸனின் பந்துவீச்சில் பெற்றிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் ஒரு ஓவரில் அதிக ஓட்டம் பெற்றவராக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் பிறைன் லாறா விளங்குகின்றார். 2004ம் ஆண்டுக்காலப்பகுதியில் இங்கிலாந்துக்கெதிராக இரண்டு சிக்ஸர்கள், நான்கு நான்குகள் என மொத்தம் 28 ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றார்.

இருபதுக்கிருபது போட்டிகளில் இந்திய அணியின் யுவராஜ்சிங் அதிக ஓட்டம் பெற்றவராக காணப்படுகின்றார். 2007ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதலாவது உலகக்கிண்ண இருபதுக்கிருபது போட்டியில் இங்கிலாந்து அணிக்கதிராக 36 ஓட்டங்களைப் பெற்று இந்தச்சாதனையைப் புரிந்திருக்கின்றார். இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஸ்ருவர்ட் புறோட் வீசிய ஆறு பந்துகளையும் எல்லைக்கோட்டுக்கு வெளியே அடித்து உலக சாதனை படைத்திருந்தார். அப்போட்டி மூலம் இருபதுக்கிருபது போட்டிகளில் 12 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்றவர் என்ற இன்னொரு மைல்கல்லையும் உலக சாதனையாகப் பதிவு செய்திருந்தார் யுவராஜ்சிங்.

இதுதவிர முதற்தரக் கிரிக்கெட் போட்டிகளில் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர்கள் அடித்த பெருமைக்குரியவர்களாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் வீரர் ஹரி சோபர்ஸ், இந்திய அணியின் முன்னாள் வீரரும் இந்நாள் தொலைக்காட்சி வர்ணனையாளருமான ரவிசாஸ்திரி ஆகியோர் விளங்குகின்றனர்.

# திரைப்பட விமர்சனம்

காரைக்குடியில் பிரபலமான சமையல்காரர் சந்தானத்திடம். அந்த ஊர் ரவுடி தன்னுடைய திருமணத்திற்கு சமையல் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்.

ரவுடிக்கு பயந்து சந்தானத்தின் வேலையாட்கள் ஒவ்வொருவராக வேலையைவிட்டு சென்று விடுகின்றனர்.

இதனால் சமையல் செய்ய ஆள் இல்லாமல் முழித்துக் கொண்டிருக்கும் சந்தானத்திற்கு. அவனது வேலையாள் ஒருவன் விஷால். ஜெகன் உள்ளிட்ட 5 பேரை சந்தானத்துக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

சந்தானத்தை சந்திக்கும்போதே பொலிஸ்காரரின் மகன் திருமணத்திற்கு சமையல் ஆர்டர்எடுத்து வருகிறார்கள். ரவுடியின் கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்ட அதே திகதியிலேயே இந்த ஆர்டரும் வருகிறது.

ரவுடியை பொலிஸிடம் பிடித்துக் கொடுத்துவிட்டு. பொலிஸ்காரர் மகளின் திருமணத்திற்கு சென்று சமைக்கலாம் என்று விஷால் ஆலோசனை கூறுகிறார்.

அதன்படி. பொலிசில் சென்று ரவுடியை பற்றி புகார் கொடுக்கிறார்கள். பொலிசும் ரவுடியை பிடித்து உள்ளே தள்ளுகிறது.

இதனால் கோபமடைந்த ரவுடி. சந்தானம் மற்றும் விஷால் கூட்டாளிகளை போட்டுத்தள்ள முடிவெடுக்கிறான்.

இதனால் ஊரை காலி செய்து திருச்சிக்கு சென்று ஓட்டல் வைக்கலாம் என்று முடிவெடுத்து கையிலிருக்கும் ரூ.2 லட்சம் பணத்துடன் திருச்சிக்கு வருகிறார்கள்.

திருச்சிக்கு வந்தவுடன் ஐஸ்வர்யாவை பார்க்கும் விஷால். பார்த்தவுடனே அவர் மீது காதல் கொள்ள ஆரம்பிக்கிறார். ஐஸ்வர்யா திருச்சியில் 12ம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்த காதல் மயக்கத்துடன் பஸ்ஸில் பயணம் செய்யும்போது நாயகியால் ரூ.2 லட்சம் பணத்தை தொலைக்கின்றனர்.

இதற்கு பொறுப்பேற்ற ஐஸ்வர்யா விஷால் மற்றும் அவருடைய நண்பர்களை பணம் கிடைக்கும்வரை தன்னுடைய வீட்டிலேயே தங்க வைக்கிறார்.

மறுமுனையில். திருச்சியில் கட்டப்படும் காம்ப்ளக்சில் கார் பார்க்கிங் இல்லாததால் அதை கட்டுவதற்கு தடை உத்தரவு வாங்குகிறார் ஐஸ்வர்யாவின் அப்பா. பட்டிமன்றம்: ராஜா.

இந்த கட்டிடத்தின் உரிமையாளரான மதுரை அண்ணாச்சி இந்த பிரச்சனையை தீர்த்துவைக்கவேண்டும் என்று திருச்சி ரவுடியான மன்னாவிடம் கூறுகிறார்.

இதனால் ராஜா வீட்டுக்கு சென்று தகராறு செய்கின்றார் மன்னா. அப்போது. ஐஸ்வர்யாவைப் பார்க்கும் மன்னா அவளை தனக்கு திருமணம் முடித்து வைக்குமாறு அவரது




பெற்றோரை மிரட்டுகிறான்.

என்னசெய்வதென்று புரியாமல் விழிக்கும் ஐஸ்வர்யா மற்றும் அவளது பெற்றோர். விஷாலிடம் நடந்ததை விவரிக்கின்றனர். ஐஸ்வர்யா மீதுள்ள காதலால் விஸ்வரூபம் எடுத்து ரவுடி கும்பலை அடித்து துவம்சம் செய்கிறார்.

சண்டையின் இறுதியில் சமையல்காரன் நீ என்னை அடிச்சிட்டியாடா? உன்னை சும்மா விடமாட்டேன் என்று கத்தும்போது நான் சமையல் கத்துக்கிட்டதே மதுரை ஜெயில்லதான்டா...! என்று கர்ஜிக்கிறார் விஷால்.

அதன்பின்பு. விஷால் ஜெயிலுக்கு எப்படி போனார்? என்பதற்கு பிளாஷ் பேக் விரிகிறது. இறுதியில் மன்னா-வின் கும்பல் விஷாலிடமிருந்து ஐஸ்வர்யாவை பிரித்ததா? ஐஸ்வர்யாவிடம் தன் காதலை சொல்லி அவரை விஷால் கரம் பிடித்தாரா? என்பதே மீதிக்கதை.

விஷால் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை முழுவதும் ஸ்கோர் செய்கிறார். காதல். நட்பு, பாசம்,நகைச்சுவை என்று ஒவ்வொரு இடத்திலும் தனி முத்திரை பதிக்கிறார். சண்டைக் காட்சிகளில் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தி. பார்ப்பவர்களை மிரட்டியிருக்கிறார்.

ஐஸ்வர்யா அர்ஜின் புதுமுகம் என்று சொல்லமுடியாத அளவுக்கு திறமையான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். புலிக்கு பிறந்தது பூனையாகுமா? என்பதை நிரூபித்திருக்கிறார்.

ஆனால், பார்ப்பதற்குத்தான் கொஞ்சம் முதிர்ச்சியான தோற்றமாக காட்சியளிக்கிறார். மாடர்ன் உடைகளில் அழகாக இருக்கும் இவரை. பாவாடை தாவணியில் ரசிக்க முடியவில்லை.

சந்தானம் தனது வழக்கமான பாணியில், நகைச்சுவையில் பின்னி பெடல் எடுத்திருக்கிறார். ஓட்டல் வைப்பதற்காக திருச்சிக்கு சென்று சீரழியும் இவரின் நகைச்சுவை கலாட்டா திரையரங்கில் விசில் பறக்கவைக்கிறது.

விஷாலின் நண்பர்களாக வரும் ஜெகன், சரித்திரன், ஐஸ்வர்யாவின் பெற்றோராக வரும் பட்டிமன்றம் ராஜா- சீதா ஆகியோரும் தங்கள் கதாபாத்திரத்திற்குண்டான நடிப்பை திறம்பட வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

மயில்சாமி சிறிது நேரமே வந்தாலும் கலகலக்க வைக்கிறார். ஜான் விஜய் மற்றும் அவரது கும்பல் செய்யும் கலாட்டா மிரட்டலுடன் சிரிப்பையும் வரவழைத்திருக்கிறது.

தன்னுடைய படங்களில் வழக்கமாக அரைக்கும் மசாலாவையே இந்த படத்திலும் அரைத்திருக்கிறார் இயக்குனர் பூபதி பாண்டியன். முதல் பாதியில் கொமெடியும், இரண்டாம் பாதியில் பாசம், காதல்,சண்டை என்று கலந்து கொடுத்திருக்கிறார். தமன் இசையில் என்ன ஒரு என்ன ஒரு அழகியடா; ராஜா ராஜா நான்தானே: பூசணிக்காய்: ஆகிய பாடல்கள் தாளம் போடவைக்கின்றன.

பின்னணி இசையிலும் கலக்கியிருக்கிறார். வைத்தியின் ஒளிப்பதிவில் சண்டைக்காட்சிகளும் பாடல் காட்சிகளும் படமாக்கிய விதம் அருமை.

மொத்தத்தில் பட்டத்து யானை: - 'பட்டைய கிளப்பும்'.

# விஜய்க்கு ரூ.20 கோடி சம்பளம்

கொலிவுட்டில் தலைவா படத்தைத் தொடர்ந்து தற்போது விஜய், ஜில்லா படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் விஜய்க்கு சம்பளமாக ரூ.20 கோடியாக பேசப்பட்டுள்ளதாம்.

ரஜினி, கமல் போன்ற முன்னணி கதாநாயகர்கள், தங்க ளின் நூறாவது படத் தில் கூட கோடி ரூபாயை சம்பளமாக பெற்றதில்லையாம்.




ஆனால் விஜய், அஜித், சூர்யா, தனுஷ், சிம்பு, சிவகார்த்திகேயன் உட்பட பலருக்கும் கோடி ரூபாய் சம்பளம் ஆரம்பத்திலேயே கிடைத்துவிட்டது.

விஜய்யின் பூவே உனக்காக படம் வரை உயராத சம்பளம் காதலுக்கு மரியாதை படத்திற்கு பின்பு அதிகமாக உயர்ந்ததாம். தலைவா படத்தில் விஜய்யின் சம்பளம் ரூ.18 கோடி என்றும் அதற்கு அடுத்த படமான ஜில்லாவில் இவருக்கு ரூ.20 கோடிக்கு 'மேல் பேசப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.



# தெலுங்கானா பிரச்சனை: போராட்டக்காரர்களுக்கு அடிபணியாத நடிகை தமன்னா

தெலுங்கானா தனி மாநிலமாக உருவாகியதால் கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமா பகுதிகளில் வன்முறைகளும், பேராட்டங்களும் வெடித்த வண்ணம் உள்ளன.

தனித் தெலுங்கானா உதயமானதால் ஆந்திர மாநிலம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் தமிழில் முன்னணி நடிகையான தமன்னா ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் விமான நிலையத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தார். விசாகப்பட்டினம் செல்லும் வழியில் ஒரு கும்பல் ஆந்திர பிரிவினையை எதிர்த்து போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக செல்லும் வாகனங்களை மறித்து ரகளையில் ஈடுபட்டனர்.

இதில் நடிகை தமன்னாவின் காரும் அந்த கும்பலிடம் சிக்கியது. காருக்குள் இருப்பது தமன்னா என்பதை தெரிந்து கொண்ட போராட்டக்காரர்கள் 'ஆந்திராவுக்கு ஜே' என்று சொல்லுமாறு அவரிடம் வற்புறுத்தியுள்ளனர்.

ஆனால் தமன்னாவோ நான் அவ்வாறு கூறமாட்டேன். அனைத்து மொழிகளிலும் நடிப்பதுதான் எனது தொழில். ஆந்திராவோ, தமிழ்நாடோ, தெலுங்கானாவோ எனக்கு எல்லாமே ஒன்றுதான் என்று தெலுங்கில் சரளமாக பேசியுள்ளார். 'ஐக்கிய ஆந்திராவுக்கு ஜே' என்று சொன்னால் தான் விடுவோம் என்று போராட்டக்காரர்கள் கூறியும், தமன்னா கடைசி வரை அப்படி சொல்லாமல் பிடிவாதம் பிடித்துவிட்டார். சுமார் 10 நிமிடங்களுக்கு பின்பு தமன்னாவின் காரை அங்கிருந்து செல்ல போராட்டக்காரர்கள் அனுமதித்துள்ளனர்.



# மாதவன் ஆங்கில படத்தில் நடிக்கிறார்

*1968ல் வெளியான நைட்ஆப் லிவ்விங்டெட் என்ற ஹாலிவுட் படம் 3டியில் ரீமேக் ஆகிறது. இதில் டேனியல் ஹாரிஸ், டாம்ஸைஸ்மோர், டானிடாட், சுலோனா டால், ஷாராஹெபில் போன்ற முன்னணி ஹாலிவுட் நடிகர்கள் கதாநாயகர்களாக நடிக்கின்றனர்.*

*இவர்களுடன் மாதவனும் ஒரு கதாநாயகனாக நடிக்கிறார். ஜமிதியா டிசோட்டோ இயக்குகிறார். திகில் படமாக உருவாகிறது. இதில் நடிப்பது குறித்து மாதவன் கூறும்போது. நைட் ஆப் லிவ்விங்டெட் ஹாலிவுட் படத்தின் 3 டி ரீமேக்கில் நடிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.*

*ஹாலிவுட்டில் பெரிய ஹிட் படங்கள் எடுத்த கம்பெனி இப்படத்தை தயாரிக்கிறது. என்னை இந்த படத்தில் நடிக்க தேர்வு செய்ததை பெருமையாக கருதுகிறேன் என்றார்.*

# புறநானூற்று அறிவியல் வளம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மனைஅமைப்பியல்

நகர அமைப்பிலும் வீடுகள் அமைப்பிலும் தமிழர் நாகரிகமே உலகத்தில் சிறந்ததாக உள்ளது என்பதை அரப்பா, மொகஞ்சதாரோ எச்சங்கள் விளக்குகின்றன. தாமரைமலர் போல் அமைந்த மதுரை நகரின் சிறப்பு நகர அமைப்பிற்கு மற்றொரு சான்றாகும்.

புறநானூற்றுப் பாடல்கள் மூலமும் நாம் பழந்தமிழர் நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டான நகர அமைப்பை அறிந்து கொள்ளலாம். நகரம் என்பது பொதுவாக சிறப்பாகக் கட்டப்பெற்ற வீட்டையே குறித்துள்ளது. இதன் மூலம் வீடுகள் கட்டப்பட்ட சிறப்பை அறியலாம். வீடுகள் பற்றிய குறிப்புகள் அனைத்தும் அக்காலத்தில் கட்டட அறிவியலில் தலை சிறந்து நம் தமிழ் முன்னோர்கள் விளங்கினர் என்பதை மெய்ப்பிக்கின்றன.

நெடுநகர் ( புறநானூறு 23.9, 280.3, 281.6, 285.8) என்ற சொல்லாட்சி சிறப்பான நெடுமனைகள் கட்டப்பட்டிருந்தன என்று அறிய வைக்கிறது.

வினைபுனை நல்லில் (புறநானூறு 23.10) என்ற தொடர் வினைத்திறனுடன் சிறப்பாக புனையப்பெற்ற நல்ல இல்லங்கள் அன்றிருந்தன என்பதற்கு எடுத்துக்காட்டாகும். புனையப்பெறுதல் என்னும் பொழுது, கதவுகள், தூண்கள், மாடங்கள், சுவர்கள் முதலான வீட்டு உறுப்புகள் சிறப்பாக அழகுபடுத்தப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன என நாம் அறியலாம்.

செல்வச் செழிப்பிற்கு ஏற்றாற் போல் நெல் குவித்துச் சேமித்து வைக்கத்தக்க வகையிலும் பொன் மாடங்கள், பொன்தூண்கள் எனப் பயன்படுத்தப்படும் சிறப் பிலும் வீடுகளும் தெருக்களும் அமைக்கப் பட்டிருந்தன என, நெல்மலிந்த மனை பொன்மலிந்த மறுகின் (புறநானூறு : 338.2) என்னும் அடியில் புலவர் குன்றூர்க் கிழார் மகனார் கண்ணத்தனர் விளக் குகிறார்

நெல் சேமிக்கும் வகையில் இருந்தால் மட்டும் போதுமா? பிற கூலங்களையும் பொருள்களையும் சேமித்து வைக்க வேண்டாவா? வீடு எது, ஓடம் எது என்று தெரியாத அளவிற்கு மீன்வகைகளும் பிற பொருள்களும் மிளகு மூட்டைகளும் குவிக்கப்பட்டுச் சேமிக்கப்படும் வகையில் பெரிய அளவில் வீடுகள் அமைந்திருந்தமையைப் புலவர் பரணர்,

மிசைஅம்பியின் மனைமறுக்குந்து

மனைக்குவைய கறிமூடையால் (புறநானூறு : 343.2) எனக்

குறித்துள்ளார். (மிசை அம்பி - உயர்வான படகுர் குவை-குவியல், கறி - மிளகு)

குடும்பத்தினருக்கு மட்டும் ஏற்ற வகையில் வீடுகள் அமைந்திருந்தால் பணியாளர்கள் எங்கே இருப்பர்? புலவர் குன்றுகட் பாலியாதனார், மனைக் களமர் (புறநானூறு 387.25) என்னும் அடி மூலம் வீடு நிறையப் பணி செய்யும் உழவர்கள் இருந்தனர் என்பதை விளக்குகிறார். எனவே, உழவர்கள் நிறைந்திருக்கும் அளவிற்கு வீடுகளும் பெரிய அளவினதாகக் கட்டப்பட்டுள்ளன மாடமாளிகைகளும் கூட கோபுரங் களும் அமைந்த சிறப்பான நகரமை ப்பைப் பழந்தமிழர்கள் பெற்றி ருந்தனர் என்பதைப் புறநானூறு மூலமும் நாம் அறிய முடிகிறது.

புலவர் கோவூர்கிழார், கொள்ளக் கொள்ளக் குறையாத உணவுப் பொருள்கள் கெட்டுப்போகாமல் சேமித்து வைக்கப்பட, தை மாதத்தில் பொய்கை குளிர்ந்திருப் பதைப் போலக் குளிர்ச்சியாகவும் அகலமாகவும் வீடுகள் கட்டப்பெற்றிருந்தன என்பதைத்,

தைத் திங்கள் தண் கயம் போல கொளக்

கொளக் குறைபடாக் கூழுடை வியனகர் (புறநானூறு : 70.7) என்கிறார்.

புதிதாய்த் தோன்றிய பிறைநிலா போன்று வெண்மையான சுதையால் செய்யப்பெற்ற மாடத்தையும் குளத்திலுள்ள பனிநீர் போன்று குளிர்ச்சியையும் உடைய அரண்மனையைப் புலவர் ஊன்பொதி பசுங்குடையார்

புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்,

பனிக்கயத் தன்ன நீள்நகர் (புறநானூறு : 378.7) என்கிறார். (சுதை -

சுண்ணாம்பு பனிக்கயம் - குளிர்ந்த நீர்நிலை) பொருள்களைக் கெட்டுப்போகாமல் காக்க, இன்றைக்குத் தண்கலன்கள் உள்ளன. அன்றைக்கோ தண்மனைகள் இருந்துள்ளன என்பது வியப்பாக உள்ளது அல்லவா?

செல்வச்சிறப்பு மிக்க மாளிகைகள் நிறைந்தமையாலேயே இப்பட்டினம் திருநகர் என குறிக்கப்பெற்றுள்ளது. எனவே, நகரங்கள் சிறப்பார்ந்த கட்டடங்கள் மிகுந்து இருந்தன என்பதை இவை நமக்கு உணர்த்துகின்றன.

அரணும் மதிலும் சிறப்பும் மிகுந்த அரண்மனையையும் நகர் என்றே குறித்துள்ளனர். சான்றுக்குச் சில பார்ப்போம்.

புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், முரசு பொருந்திய செல்வத்தினையுடைய அரசர் கோயிலாகிய அரண்மனையை, முரைசு கெழு செல்வர் நகர் (புறநானூறு : 127.10) என்கிறார். புலவர் ஆலந்தூர்க்கிழார், நீண்ட மதிலுடன் பாதுகாப்புடன் விளங்கும் அரண்மனையை, நெடுமதில் வரைப்பின் கடுமனை (புறநானூறு : 36.10) என்கிறார்.

எந்திரவியலிலும் பழந்தமிழர்கள் சிறந்திருந்தனர். கோட்டை வாயில், அரண் முதலான பலவும் இயந்திர நுட்பத்துடன் அமைக்கப்பட்டிருந்தன. அக்காலக்கட்டத்தில் அத்தகைய எந்திர நுட்பம் வேறு எந்த நாட்டிலும் இருந்ததில்லை. எந்திர ஊர்தி இருந்ததாகவும் குறிப்புகள் உள்ளன. கரும்பாலை இயந்திரம் போன்றவையும் எத்திரஇயலின் நுட்பத்தால் உருவானவையே. புறநானூற்றிலும் இது குறித்த பாடலடி இடம் பெற்றுள்ளது.

தமரெனின் யாவரும் புகுப

அமரெனின் திங்களும் நுழையா

எந்திரப் படு புழை

(புறநானூறு 177 )

என்கிறார் புலவர் ஆவூர் மூலங்கிழார்.

நாட்டிற்குரியவர்கள் அனைவரும் தடையின்றி நுழையும் வண்ணம் கோட்டைவாயில் அமைக்கப்பட்டிருந்தது. அதே நேரம், போர்க்காலத்தில் பகைவர் எவரும் நுழைய முடியாதபடி, திங்கள் ஒளியும்கூட உள்ளே நுழைய இயலாதபடி, எந்திரப் பொறிகளை உடைய இட்டி வாயிலை உடையதாக இருந்துள்ளது என இப்பாடலடிகளில் புலவர் தெரிவித்துள்ளார். இத்தகைய எந்திரச் சிறப்பு குறித்துப் பிற பாடல்களிலும் சிலப்பதிகாரத்திலும் குறிப்புகள் உள்ளன. இவைபோல் புறநானூறும் தெரிவித்துள்ளது.

நெடுநகர் வரைப்பு (மாறோக்கத்து நப்பசலையார் 280.3 அரிசில் கிழார் 281.6) நெடு நகர் (அரிசில் கிழார் 285.8), கூடு விளங்கு வியன் நகர் ( நெற்கூடு விளங்கும் அகலிய நகரின்கண் - பரணர்:148.4), ஒளிறு வாள் மன்னர் ஒண் சுடர் நெடு நகர் (விளங்கியவாளையுடைய வேந்தரது ஒள்ளிய விளக்கத்திணையுடைய உயர்ந்த கோயிற் கண் - ஆவூர் மூலங்கிழார் :177.1), வளம் கெழு திருநகர் (செல்வம் பொருந்திய அழகிய நகர் - ஆவூர் மூலங்கிழார்: புறநானூறு 261.6 தாயங்கண்ணியார் 250.6),நெல் லுடை நெடுநகர் (சாத்தந்தையார் 287: 9), கபில நெடுநகர் (கபிலர் 337.11), திருநகர் (உலோச்சனார் 377.3), அருங்கடி வியன்நகர் (மாறோக்கத்து நப்பசலையார் 383) என்னும் தொடர்கள், வீடுகள் இக்காலம் போலவே மிகச் சிறப்பாகக் கட்டப்பட்டிருந்தன என்பதை விளக்குகின்றன.

காவற்சிறப்புடன் நகரங்களும் மனைகளும் அமைக்கப்பட்டிருந்தன என்பதை,காவலர் கனவிலும் குறுகாக் கடியுடை வியன்நகர் (390), கடியுடை வியன்நகர் (272.4) என்னும் அடிகள் விளக்குகின்றன.

செல்வச் செழிப்பை வெளிப்படுத் தும்வகையில் நகரங்களும் மனைகளும் உருவாக்கப்பட்டன என்பதைச் செழுநகர் (391), முரைசு கெழு செல்வர் நகர் (127.10), பொன்னுடை நெடுநகர் (198.16) முதலான தொடர்கள் எடுத்துரைக் கின்றன.

வானியல், உடையியல், ஒப்பனை யியல், மருந்தியல், பொறியியல், ஊர்தியியல், படையியல், பயிரியல், விலங்கியல், பறவையியல், உடலுறுப்பியல், காற்றியல், தோலியல், புவியியல், பூச்சியியல், நீந்துவனவியல், கடலியல் முதலான பல்வேறு அறிவியல் துறைச்செய்திகள் புறநானூறு முதலான சங்க இலக்கியங்களில் உள்ளன. சான்றுக்குப் புறநானூற்றில் இருந்து சில துறைக் குறிப்புகள் சிலவற்றைப் பார்த்துள்ளோம். இவற்றை இலக்கியக் குறிப்புகளாக எண்ணாமல் அறிவியல் உண்மைகளாக அறிவியல் பாடங்களிலும் படித்துத் தமிழ் அறிவியலை வளர்த்தெடுப்போம்!

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி

மாசறு காட்சி யவர்க்கு (குறள் 352)என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

எல்லா அறிவியலும் மேனாட்டிற் குரியனவே என்னும் அறியாமை நீங்கி நடுநிலையுடன் ஆராய்ந்தால் பன்னெடுங்காலத்திற்கு முன்பே நம் தமிழர் அறிவியல் வளத்தில் சிறந்திருந்ததை உணரலாம்.

புறநானூற்றைப் பரப்புவோம்!

தமிழ் அறிவியல் வளத்தை மீட்டெடுப்போம்!

## பிரபாகரன்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைத் தேர்தல் போன்ற குறிப்பான விடயங்களில் மட்டும் இவர்களுடைய சாயம் வெளுத்து கறுப்பும் அல்லாத, வெள்ளையும் அல்லாத செம்மஞ்சள் நிறம் தெரியத் தொடங்குகின்றது.

மகிந்தர் ஒரு நாடகமாக 13வது திருத்தத்தினை மேலும் பலவீனமாக்க முற்பட்டபோது இவர்களும் 13வது திருத்தத்தினை பாதுகாக்கும் வீர்களாயினர். பட்டு வேட்டி கேட்டோம் இப்போ கோவணத்தையே உருவப்போகின்றார்கள் அதனையாவது பாதுகாக்க வேண்டும் என்ற கோசத்துடன் 13ஐ விரும்பி ஏற்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். 13 உண்மையில் கோவணம் அல்ல மாறாக அது செல்லரித்த கோவணம். இது தெரிந்தும் மகிந்தர் உள்ளதையும் உருவப்போகிறார். அதனையாவது பாதுகாப்போம் என்றுகூறி செல்லரித்த கோவணத்தையே பொத்திப்பிடிக்க வருமாறு தமிழ் மக்களை கேட்கின்றனர். இந்த செல்லரித்தகோவணத்தைப் பொத்திப்பிடிக்கும் அரசியலைத் தமிழர்கள் செய்யவேண்டும் என்பதுதான் இந்தியாவினதும், மேற்குலகத்தினதும் விருப்பம். ஏனென்றால் அதுவும் உருவப்பட்டால் இந்திய இலங்கை ஒப்பந்தம் குப்பையில் போகும். அது இந்திய நலன்களை முழுமையாகப் பாதிக்கும். அதனால் செல்லரித்த கோவணத்தையாவது தமிழ் தலைமைகளை வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்பதில் குறியாக உள்ளனர். அதுமட்டுமன்றி தமிழர் அம்மணமானால் புது உடுப்புப்போடவேண்டிய தார்மீகப் பொறுப்பு அவர்களுக்கு வந்துசேரும். புதுஉடுப்பு போடும் செயற்பாடு என்பது பேரினவாதத்துடன் நேரடியாக மோதுகின்ற ஒன்று என்பதால் அவை அதற்கு தயாராக இல்லை.

செல்லரித்தகோவணத்தை உருவும் செயற்பாட்டினை முன்னெடுத்தபோதே மகிந்தருக்கு நன்கு தெரியும், இந்திய - அமெரிக்கக் கூட்டு இதற்கு அனுமதிக்காது என்பது. ஆனாலும் முயற்சித்தமைக்கு காரணம் தமிழ்அரசியலை இப்பொத்திப்பிடிக்கும் அரசியலோடு மட்டுப்படுத்திவைத்திருக்க வேண்டும் என்பது தான். இதுவிடயத்தில் இந்திய  அமெரிக்கக் கூட்டு, மகிந்தர் அரசாங்கம், சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு எல்லாமே ஒரு கட்ட வெற்றியை அடைந்துவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

இங்கு மாவையா? விக்கினேஸ்வரனா? என்பது ஒரு பிரச்சினையே அல்ல. விக்கினேஸ்வரன் எந்த அரசியலின் குறியீடாகக் கொண்டு வரப்படுகின்றார் என்பதுதான் பிரச்சினை. தமிழ்த்தேசியநீக்க அரசியலின் குறியீடாகவே அவர் கொண்டுவரப்படுகின்றார்.

கொழும்பு மேட்டுக்குடியின் அடிவருடிகள் சிலர் விக்கினேஸ்வரனுக்கு தமிழ்த்தேசிய சாயம் பூச முயற்சிக்கின்றனர். விக்னேஸ்வரனின் வருகை ஐந்தாம் கட்ட ஈழப்போரின் தொடக்கம் என்றும் கதைவிடுகின்றனர் அரசியல் அயோக்கியர்கள். விக்கினேஸ்வரன் ஒரு லிபறல்வாதி. அவரிடம் இனப்பற்று, மொழிப்பற்று, கலாசாரப்பற்று இருக்கலாம். ஆனால் அவரால் ஒருபோதும் தமிழ்த்தேசியவாதியாக மாறிவிடமுடியாது. தமிழ்த்தேசியம் என்பது ஒரு தேசியஇனம் அல்லது தேசம் தன்னைத் தானே ஆள்வதுடன் தொடர்புடையது. தேசத்தின் இருப்பு பாதுகாப்பதுடன் தொடர்புடையது. இது வாழ்ந்து அனுபவித்து அதனூடாக எழுச்சியடையும் ஒரு உணர்வு. விக்னேஸ்வரனுக்கு வாழ்ந்து அனுபவித்த பழக்கம் இல்லை. அவருடைய இருப்பு, அவருடைய குடும்பத்தின் இருப்பு எல்லாம் தென்னிலங்கையைச் சார்ந்தது.

விக்கினேஸ்வரன் இதுவரை தெரிவித்த கருத்துக்களில் எந்த இடத்திலும் தேசியக்கோரிக்கைகளைப் பற்றிக் கூறவில்லை. ஜனநாயகக் கோரிக்கைகளையே கூறியிருக்கின்றார். ஒற்றையாட்சியின் கீழ் அமைந்த மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும் எனக்கூறியிருக்கின்றார். இராணுவம் பறித்த காணிகள் திருப்பிக்கொடுக்கப்படவேண்டும் எனசக்கூறியிருக்கின்றார். ஒற்றையாட்சிக்குப் பதிலாக சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த இணைப்பாட்சி உருவாக்கப்படல் வேண்டும் என்றோ, சிங்களக்குடியேற்றங்கள் அமைத்தல், விகாரைகளை அமைத்தல், மீனவர் படையெடுப்பைத் தடுத்தல் என்பவை பற்றியோ எதுவும் கூறவில்லை. பின்னயவையெல்லாம் தேசியக்கோரிக்கைகள் அவற்றைக் கூறுவதற்கு அவர் தயாரில்லை.

தாராளவாதச் சிந்தனையின்படி எவரும் எங்கும் குடியேறலாம். எங்கும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடலாம். பெரும்பான்மை ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளலாம். இதன்படி சிங்களகுடியேற்றமும் தவறல்ல, மீனவர் படையெடுப்பும் தவறல்ல. விகாரைகளை அமைத்தலும் தவறல்ல. ஒற்றையாட்சியும் தவறல்ல. விக்னேஸ்வரன் இதனையே பிரதிபலிக்கின்றார். தமிழ்த் தேசியக் கோரிக்கைகளை முன்வைத்து. நெருக்கடிகளை உறுதியுடன் எதிர்கொள்ள அவர் ஒன்றும் பிரபாகரன் அல்லவே.

முதலமைச்சராக வருவதற்கு முன்னரே புலம்பெயர்ந்துவாழும் தமிழர்(டயஸ்போறா) ற்கும், தமிழ்நாட்டு தேசியசக்திகளுக்கும் கட்டளையிடுகின்றார். கூட்டமைப்பின் தமிழ்த்தேசியநீக்க அரசியலுக்கு ஒத்துழையுங்கள் எனக்கேட்கின்றார். பாதுகாப்பான இடத்தில் நின்றுகொண்டு அரசியல் செய்யாமல் நாட்டிற்கு திரும்புங்கள் எனக்கிண்டலடிக்கின்றார்.

இவையெல்லாம் அவர் என்ன அரசியலை நகர்த்தப்போகின்றார் என்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றன.

இன்று கூட்டமைப்பின் தமிழ்த்தேசியநீக்கஅரசியலால் பலவீனப்படப்போகின்றவர்கள் புலம்பெயர் சக்திகளும், தமிழ்நாட்டுச்சக்திகளுமே. தமிழர் விவகாரத்தை சர்வதேசமயமாக்குவதிலும், இந்தியமயமாக்குவதிலும் இவர்களின் பங்கு அளப்பரியது. கடந்த 2009 ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கைகளினால் ஏற்கனவே பலவீனப்படுத்தப்பட்டுள்ள தமிழக மற்றும் புலம்பெயர் தமிழர்களது முயற்சிகள், மேலும் விழுந்து நொருங்கப்போகின்றன. தமிழ்நாட்டு இளைஞர்களின் எழுச்சியினால் இந்தியமத்திய அரசாங்கம் திணறுகின்றது. கூட்டமைப்பு அந்தத் திணறலை இல்லாமல் செய்கின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இருப்பதை தெளிவாக வெளிப்படுத்துவது தமிழ்த்தேசிய அரசியலே அதனை நீக்கம் செய்துவிட்டால் நாட்டில் இனப்பிரச்சினை இருக்காது. அதன் பின்னர் ஜனநாயகப் பிரச்சினையும் மத்திய அரசுக்கும் - தமிழ் மக்களின் கூட்டிருப்பை சிதைத்த மாகாண நிருவாகத்திற்கும் இடையேயான நிர்வாகப் பிரச்சினையுமே இருக்கும்.

ஜனநாயக முரண்பாடு என்பது ஆளும்கட்சி, எதிர்க்கட்சி அரசியலுக்குரியது. சம்பந்தன் தலைமை இன அரசியலை ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அரசியலாக மாற்றமுனைகின்றது. இந்த அரசியல் உருவாகிவிட்டால் சிங்களக்கட்சிகளோடு கூட்டுச்சேர்வதற்கு எந்தவிதத் தடையும் கிடையாது. அமெரிக்க - இந்தியக்கூட்டு விரும்புவது இதைத்தான். சம்பந்தன் தலைமையும் அந்த இலக்கினை நோக்கியே நகர்ந்துகொண்டிருக்கின்றது. இது தமிழர் அரசியலை 40களுக்கு இழுத்துக்கொண்டு செல்லும் முயற்சியாகும்.

ஆட்சிமாற்றம் ஒன்றிற்கு இன அரசியலைக் களத்திலிருந்து அகற்றவேண்டியது முன்நிபந்தனையாக உள்ளது. அமெரிக்க - இந்தியக்கூட்டு இந்த இலக்கினை நோக்கியே நகர்கின்றது. சம்பந்தன் தலைமை அதற்கு பாதை அமைத்துக்கொடுக்கின்றது.

புலிகள் மகிந்தரை ஆட்சிக்குகொண்டு வந்ததன் மூலம் இந்திய - அமெரிக்கக் கூட்டின் புவிசார் அரசியல் நலன்பேண் நகர்வுகளுக்கு ஒரு பூட்டுப்போட்டிருந்தனர். இப்பூட்டை உடைக்கவேண்டுமாயின் தமிழ்த்தேசிய அரசியலை ஏற்று அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்திய - அமெரிக்கக்கூட்டிற்கு இருந்தது. தமிழ்த்தேசிய அரசியல் உறுதியாக இருந்தால் அதற்கு அங்கீகாரம் வழங்குவதைத் தவிர அவைகளுக்கு வேறு தெரிவு இருந்திருக்காது. புலிகள் தொடர்ச்சியாக இருந்தால் அங்கீகாரத்தை கொடுக்கவேண்டி வரும் என்பதற்காகவே முதலில் புலிகளை அழித்தனர். தற்போது அங்கீகாரம் எதுவும் இல்லாமலே கூட்டமைப்பின் தலைமையைக் கொண்டு உடைக்கமுயற்சிக்கின்றனர்.

புலிகள் போட்ட பூட்டை சம்பந்தன் உடைக்கின்றார். இதற்கு கைமாறு வெறும் 13வது திருத்தம் மட்டுமே!

## மன்னிக்க...

(16ஆம் பக்கம் பார்க்க)

இது குறித்து கரூன் லோகார்ட் கடந்த காலத்தில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையுடன் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களுக்காக நான் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கிறேன் எனக் கூறியுள்ள நிலையிலும் அதனை ஏற்க இந்தியா தயாராக இல்லை.

தென்னாபிரிக்காவில் கறுப்பினத் தவர்களுக்கு எதிரான அடக்குமுறை காரணமாக சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கு தடை விதிக்கப்பட்டிருந்த பொழுது அவர்கள் மீளவும் கிரிக்கெட் விளையாடுவதற்கான பல்வேறு முயற்சிகளையும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றிருந்தது. அது மாத்திரம் அல்ல தென்னாபிரிக்காவுக்கு தடை நீங்கியவுடன் அங்கு சென்று கிரிக்கெட் விளையாடிய முதல் நாடு என்ற பெருமையும் இந்தியாவுக்கு உண்டு.

அதனால் அன்றிலிருந்து இன்று வரை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் தென்னாபிரிக்காக்களுக்கு உண்டு. அத்தோடு 2010ஆம் ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருந்தமையால் ஐ.பி. எல் போட்டிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்க முடியாதென இந்திய அரசாங்கம் அறிவித்த பொழுது போட்டிகளை தென்னாபிரிக்காவில் நடாத்தியது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.இவ்வாறு பரஸ்பரம் இரண்டு கிரிக்கெட் சபைகளுக்கு இடையிலான புரிந்துணர்வும் மிகச்சிறப்பாக உள்ள நிலையில் கரூன் லோகார்ட்டின் நியமனம் அதனை பாதித்து விடுமோ என்ற அச்சம் தற்போது எழுந்துள்ளது. இந்தியா தனது முடிவில் தொடர்ந்து பிடிவாதமாகவே இருந்து வருகின்றது.

இதனால் இவ்வாண்டின் இறுதியில் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி கலந்து கொள்ளுமா என்ற சந்தேகமும் தென்னாபிரிக்காவுடன் இணைந்து நடாத்தும் சம்பியன்ஸ் லீக் கிண்ணப்போட்டிகளிலும் இதன் தாக்கம் இருக்கும் என்றே கருதப்படுகிறது.

## கேள்வி பதில்...

**(09ஆம் பக்கத் தொடர்ச்சி)**

**ச.சஜிதன், உடுவில், சுன்னாகம்**

**கேள்வி : கூட்டமைப்பிற்குள் ஐக்கியமாயிருக்கும் சித்தார்த்தன், சங்கரி எல்லோருக்கும் மக்கள் பாவ விமோசனம் அளித்துவிட் டார்களா?**

**பதில் :** வன்னியுத்த இறுதிக் கணங்களினில், யுத்த நிறுத்தம் செய்தால், புலிகள் பலமடைந்துவிடுவார்கள் என்றும், புலிகளுக்கு ஒட்சிசன் குடுக் கிறமாதிரி அமைந்துவிடும் என்றும் கூறி யுத்தத்தை நிறுத்த விடாமல் லட்சம் மக்களை கொல்ல துணை நின்றவர்கள், வன்னியின் தோல்வியை ஓடி ஓடி கொண்டாடியவர்கள் இவர்கள். இவர்கள் இருவரும் வெளிப் படையாக யுத்தத்திற்கு ஆதரவு கொடுத்தவர்கள். ஆனால் கூட்ட மைப்பில் இருக்கிற மற்றய தலைவர்கள் சிலர் மறைமுகமாக யுத்தத்திற்கு ஆதரவளித்து, பதவிக்கட்டில் ஏற்றியவர்களையே முதுகில் குத்தி அழித்தவர்கள். எல்லாரும் இப்ப ஒன்று சேர்ந்து இருக்கினம். மக்கள் என்னதான் செய்யுறது. எல்லாம் தலையெழுத்து.

## அவுஸ்திரேலியா...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரித்து அதன் போருக்கு துணை நின்ற கேடு கெட்ட உலகம் பதில் சொல்ல வெண்டும். அதன் பிற்பாடே குழுக்களாக தேசம் தேசமாக எம்மவர் தஞ்சம் கோருவது பற்றிய சுவிபை கொட்ட வேண்டும். இனப்படுகொலை, போர்க்குற்றம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை ஒரு குழுவை நியமித்திருக்கிறது. குறைந்தபட்ச அடிப்படையில் அந்த விசாரணையின் முடிவு வெளிவராமல் எந்த அடிப்படையில் அகதிகளை திருப்பி அனுப்ப முடியும். இது அடிப்படையில் ஐ.நாவின் விதிகளுக்கு முரணானது. நாம் மீண்டும் வீதியில் இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த அகதிகளின் பிரச்சினையை மையப்பிரச்சினையாக்கி நாம் போராட்டத்தை தீவிரப்படுத்துவதனூடாக எமது விடுதலைப் போராட்டத்தை வேறு ஒரு தளத்தை நோக்கி நகர்த்த முடியும்.

"இனப்படுகொலையிலிருந்து தப்பியவர்கள்" என்ற சொல்லாடலுடன் "கூட்டு அரசியல் தஞ்சம்" என்ற கருத்துருவாக்கத்தை மையப்படுத்துவதனூடாக தாயகத்தில் எமது இருப்பு தொடர்பான காத்திரமான சில செய்திகளை உலகுக்கு சொல்ல முடியும். இது நூற்றுக்கணக்கானவர்களுக்கான அரசியல் தஞ்சப் பிரச்சினை அல்ல. எமது அடையாளம் தொடர்பான பிரச்சி னை. நாம் இனச்சுத்திகரிப்புக்குள்ளாகியிருக்கி றோம் என்பதை கவனப்படுத்துவதுடன் மௌனமாக உள்ள உலகத்தின் மனச்சாட்சிகளை உலுக்கும் நடவடிக்கை இது. எமது போராட்டத்தின் அடுத்த வடிவமும் இதுதான். (இந்த கட்டுரை மே 18 இற்கு பிந்பு நாம் ஏற்கனவே முன்வைத்த ஈழத்தமிழர்களின் அடையாளம் மற்றும் அரசியல் இருப்பான "கூட்டு அரசியல் தஞ்சம்" மற்றும் "இனப்படுகொலையிலிருந்து தப்பியவர்கள்" என்ற எமது ஆய்வை மையப்படுத்தி எழுதப்பட்டது)

# நினைவு வணக்கம்



மண்ணில்
26.11.1950

விண்ணில்
19.07.2013

## தமிழ்த்தேசப்பற்றாளர்


# கந்தையா சுந்தரலிங்கம்

உயரப்புலம் ஆனைக்கோட்டை

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி – அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ்

(செயற்குழு உறுப்பினர்)

### மக்களோடு மக்களாய்...



நெடுந்தீவில் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு உதவி வழங்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர்.



முள்ளிவாய்க்காலில் மக்களுடன் சந்திப்பு ஒன்றின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.

இவ்விதழ் இல.43, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் பிள்ளையார் ஒவ்செற் பிரின்டேர்ஸ் (இல.676, பருத்துறை வீதி, நல்லூர்) இல் 16.08.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.